விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

Registered as a Newspaper in Srilanka
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
ங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 18 ஞாயிற்றுக்கிழமை (01.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 164

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## மோடியின் வருகைக்கு முன் இலங்கை வருகிறார் சுஷ்மா

### வடக்குக்கும் வருகை தருவார்?

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு முன்பாக வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் கொழும்புக்கு பயணம் செய்யவுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்தியாவின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள நரேந்திர மோடி ஓரிரு மாதங்களில் இலங்கை செல்லக் கூடும் என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கு முன்னதாக வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் கொழும்புக்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

23ஆம் பக்கம் பார்க்க....



## யங்கி வீழ்ந்தார் மாவை எம்.பி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, கல்லடி துளசி மண் த்தில் நடைபெற்ற அனைத்துல கமும் தமிழ் தேசிய அரசியலும் ரு சமகால பார்வை எனும் கரு ங்கில் உரையாற்றிக் கொண் ந்த போது தமிழ்த் தேசியக் டமைப்பின் பாராளுமன்ற உறு னர் மாவை சேனாதிராசா மய வீழ்ந்து விட்டார்.

சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு லாக சமகால அரசியல் நிலை கள் மற்றும் வடக்கில் இடம் றுக்கொண்டிருக்கும் சம்பவங்கள ட்டில் உணர்வுபூர்வமாக உரை றிக் கொண்டிருந்த பாராளுமன்ற

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா தீர்மானம் குறித்து மக்களுக்கு விளக்கமளிப்பு

### மிழ்க் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

. நா. மனித உரிமைகள் பேர யில் இலங்கைக்கு எதிராக வேற்றப்பட்டுள்ள தீர்மானம் ரில் வடக்கு-கிழக்கு தமிழ் மக் கு விளக்கமளிக்கும் வேலைத் மொன்றை தமிழ்த் தேசிய மைப்பினர் இன்று ஞாயிற்றுக் கிழமை முதல் முன்னெடுக்கவுள் ளனர்.

இன்னும் ஓரிரு வாரங்களில் ஐ.நா வின் மனித உரிமைகள் பேர வையின் தீர்மானத்தின்படி விசார ணைகள் தொடங்கும் என்று தாங் கள் எதிர்பார்ப்பதாகவும், அது குறித்து மக்களுக்கு ஒரு தெளிவை ஏற்படு த்தவும், அவரகள் சாட்சியங்கள் அளி க்கும்போது கடைபிடிக்க வேண்டிய முறைகளை எடுத்துக் கூறுவதும் இதன் நோக்கம் என கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவ்வகையில் முதலாவது விளக்க மளிக்கும் கூட்டங்களும் மக்கள சந்திப்புகள் மற்றும் கலந்துரையா டல்கள் ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாணத்தில் கல்முனையிலும்

23ஆம் பக்கம் பார்க்க....

## அண்ணன் அழைத்தால் அரசியலுக்கு வருவேன்

### பாதுகாப்புச் செயலாளர் செவ்வி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைத்தால் அரசியலுக்கு வரு வேன் என பாதுகாப்புச் செயலாளர கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

விஜய பத்திரிகை நிறுவனம் இவ் வாரம் முதல் வெளியிடும் தேசய என்ற சிங்கள வார இதழுக்கு வழ ங்கிய விசேட செவ்வியின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்னிடம் ஒப்படைத்த பணிகளை நான் செவ்வனே நிறைவேற்றி யிருக்கிறேன். அரசியலுக்கு வரும் எண்ணம் எனக்கு இல்லை. ஆனால் அரசியலுக்கு வருமாறு ஜனா



திபதி மகிந்த ராஜபக்ஷ என்னை அழைத்தால், நான் அரசியலுக்கு வருவேன்.

நான் நாட்டுக்கு என்ன செய்து ள்ளேன் என்பது மக்களுக்கு நன்கு தெரியும். எனக்கு மக்கள் அங்கீகா ரமளிப்பார்கள்.

அரசியலுக்கு வருவதானால்

23ஆம் பக்கம் பார்க்க....

## மிழ் மக்களை பாதுகாக்க ந்தியா முன்வரவேண்டும்

### அமெரிக்கா வலியுறுத்தல்

(கொழும்பு)

லங்கை அரசாங்கத்தின் அதி பிடியில் இருந்து சிறுபான்மை ளை பாதுகாக்க வேண்டும் இந்தியாவிடம் அமெரிக்கா கோரியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தியாவின் புதிய வெளிவிவ கார அமைச்சராக பதவி ஏற்றுள்ள சுஷ்மா ஸ்வராஜை தொடர்பு கொண்ட அமெரிக்காவின் இராஜாங்க செய

24ஆம் பக்கம் பார்க்க....

## கோதுமை மாவின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை நேற்று முதல் ஒரு ரூபாயால் அதிகரிக்கப் பட்டுள்ளதாக வெதுப்பக உரிமை யாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை ஒரு கிலோ கிராம கோதுமை மாவின் விலை ஒரு ரூபா யால் அதிகரித்துள்ள போதிலும் பாணின் விலையில் எவ்வித மாற்

24ஆம் பக்கம் பார்க்க....

## மெரிக்க உதவிச் செயலர் ந்தியாவுக்கு ஜூனில் பயணம்

### லங்கை விவகாரம் குறித்தும் ஆராய்வார்

(வாஷிங்டன்)

மெரிக்காவின் தெற்கு மற் த்திய ஆசியப் பிராந்தியத்துக் உதவிச் செயலாளர் நிஷா ாய பிஸ்வால் இம் மாதம் 6-ம ி இந்தியாவுக்கு விஜயம் செல் ர்.

இவ் விஜயத்தின் போது இல கை விவகாரம் குறித்து இந்திய திகாரிகளுடன் கலந்துரையாடு வார் என தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 9-ம் திகதி வரை அங்கு தங்கியிருக்கும் அவர் புதிய அரசின் அதிகாரிகளை சந்தித்து பிராந் திய விவகாரங்கள் குறித்து கலந் துரையாடுவார் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணை

24ஆம் பக்கம் பார்க்க....

## அரசை மிரட்ட தயாராகும் உறுமய

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் யோசனைகளை ஏற்றுக்கொள் ளும் நபருக்கே அடுத்த ஜனாதிப தித் தேர்தலில் ஆதரவு வழங்கப் படும் என அந்த கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் மேல் மாகாண அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை சரியான பாதை

24ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டமைப்புடன் பேச ஜெயலலிதா தீர்மானம்

### தமிழர் பிரச்சினை குறித்து

(சென்னை)

இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்து பேச்சுநடத்துவதற்கு தமி ழத் தேசியக் கூட்டமைப்பை அழைத துப் பேசுவதற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைத் தமிழரின் பிரச்சி னைக்கான அரசியல் தீர்வுக்கு இந் தியா மேற்கொள்ளும் நடவடிக்கை களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமி ழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தது.

இந்தக் கடிதம் தமிழக முதல மைச்சருக்கு கிடைத்துள்ள நிலை யில் அவர்கூட்டமைப்புடன்பேச்சு நடத்த எண்ணியுள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

இதன்படி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை விரைவில் தமது அலுவலகத்துக்கு அழைத்து ஜெயலலிதா பேச்சுவார்

24ஆம் பக்கம் பார்க்க....

SISIL WORLD
உங்கள் இல்லங்களை மேலும் மெருகூட்ட சிசில் தளபாடங்களுடன் இணைந்திருங்கள்

கடன் அட்டைகளுக்கு விசேட விலைக்கழிவு மற்றும் வட்டியில்லை
- 20% வரை விசேட விலைக்கழிவு
- வட்டி இல்லாத கொடுப்பனவு
- விசேட பெறுமதி மிக்க பரிசுப் பொருட்கள்
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
No.106, K.K.S.Road, Jaffna. 0212219291
No.125, K.K.S.Road, Chunnakam. 0212242335
No.17/3, Kandy Road, Kilinochchi. 0212283755
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## திருமதி இராசலிங்கம் சிவபாக்கியம்
## (சொக்கு மாமி)

அச்சுவேலி தம்பாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆரியகுளம் 3-ம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலிங்கம் சிவபாக்கியம் (சொக்கு மாமி) நேற்று (31.05.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம் வள்ளிப்பிள்ளையின் அன்பு மகளும் வேலு நாகம்மாவின் அன்பு மருமகளும் இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், கதிரேசு, மார்க்கண்டு, வள்ளியம்மை, நாகமணி, முத்து, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், வரதராசா (இந்தியா), தேவராணி, சறோஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாரதா, சிவசுப்பிரமணியம் (C.T.B), தேவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், யதுசன், நிவேதா, பாரினா, விதுரன், கரோவினா, சுவஸ்திகா, ஜொனி, டித்து, அபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அரசடி வீதி 1ம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் இன்று (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அரசடி வீதி,
1ம் ஒழுங்கை,
நல்லூர்.

தகவல் :
குடும்பத்தினர்

(6547)

பனை ஆராய்ச்சி நிறுவனம்
பனை அபிவிருத்தி சபை
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

## பனை ஆராய்ச்சி மாநாடு

பனைவள ஆராய்ச்சி ஊடாக பனைவளம் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்

இம்மாநாட்டிற்கு கல்வியாளர்கள், பனம் பொருட்கள் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் பனங்கைத்தொழிலில் பங்கு பெறுவோர் அனைவரும் கலந்து பயன் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**பிரவேசம் இலவசம்**

திகதி - 02.06.2014 (திங்கட்கிழமை)
நேரம் - காலை 9.00 - மாலை 3.00
இடம் - வீரசிங்கம் மண்டபம்

தொடர்புகளுக்கு :
பனை ஆராய்ச்சி நிறுவனம்
கண்டி வீதி, கைதடி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. - 0212057065
தொலைநகல் இல. - 0212057066

(சி-7539)

## புகைப்பதனால் 60 பேர் உயிரிழப்பு

சிகரெட் புகைப்பதனால் இலங்கையில் ஒரு நாளைக்கு 60 பேர் உயிரிழப்பதுடன் ஒரு வருடத்திற்கு 66 ஆயிரம் பேர் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இலங்கையில் இளைஞர்களை விட அதிகமாக வயோதிபர்களே சிகரெட் புகைக்கின்றனர்.

இந் நிலையில் புற்றுநோய்க்கு உள்ளானவர்களில் பெரும்பாலானோர் புகைப்பவர்களென தெரியவந்துள்ளது.

இதற்கமைய இலங்கையில் சிகரெட் புகைப்பதனால் ஒரு நாளைக்கு 60 பேர் உயிரிழக்கின்றனர். அத்தோடு ஒரு வருடத்திற்கு 66 ஆயிரம் பேர் வரையில் உயிரிழக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)


## பதவி வெற்றிடங்கள்

**நீங்கள் இன்னும் வேலை தேடுகின்றீர்களா?**

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய மாவட்டத்தினருக்கான பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- Supervisor
- Team Leader
- Ass.Manager

42 பேருக்கு முன்னுரிமை
அடிப்படை O/L தகைமை

(சி-7547)

இன்றே உடன் அழைக்க : 0778794077,0775566226

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532

## வீடு வாடகைக்கு உண்டு

நல்லூர் ஆலய சூழலில் அமைதியான இடத்தில் அமையப் பெற்ற சகல வசதிகளும் கொண்ட சிறிய குடும்பம் இருக்கக் கூடிய அழகான வீடு வாடகைக்கு உண்டு.

(சி-7546)

தொடர்பு:0776623824

## வேலைவாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கான ஜேம்/கோடியல்/நூடில்ஸ்/தேங்காய் பால்மா/Oil/காட்போட்/Cargills/குளிர்பானம்/ வாசனைத் திரவியம்/ பெயின்ட் போன்ற தொழிற்சாலைகளுக்கு 18 - 50 வயது ஆண் - பெண் தேவை. சம்பளம் 18000/-, 28000/-, 38000/-. உணவு, தங்குமிடம் சகாயவிலைகளில். வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு. நண்பர்கள்/ குழுக்கள்/ தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்.

(சி-7531)

மேலதிக விபரங்களுக்கு: 0778430179

## பிள்ளையார் இன்

எமது உணவகத்தில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு தரமான சைவ, அசைவ உணவுகள் நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன.

**விசேடமான உணவுகளான**

- மசாலா தோசை - 150/=மட்டுமே.
- பேப்பர் தோசை, வெங்காய தோசை, நெய்த் தோசை - 120/= மட்டுமே.
- பூரி, சப்பாத்தி - 100/ மட்டுமே.

தினமும் மாலை 6 மணிமுதல் 10 மணிவரை விசேட உணவுகளான மரக்கறி புரியாணி, பிறைட் றைஸ், சிக்கின் புரியாணி, சிக்கின் பிறைட் றைஸ் என்பன விசேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

(C-7534)

இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0212222829

10வது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் விசேட விலைக் கழிவு

25 % Discount

நாவுக்கு விருந்தளிக்கும் அறுசுவை
தென்னிந்திய சைவ உணவு வகைகள்

விருப்பம்போல் ருசிக்க...

MANGOS
Veg South Indian Restaurant

இல:359/3, கோயில் வீதி நல்லூர், யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021 222 8294, 077 76 61083

(6544)

உள்ளூர் உணவுப்பிரியர்களுக்கு மட்டும்

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

03.06.2014 முதல் 08.06.2014 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**மீண்டும் யாழில்**

**பதிவுக் கட்டணம் ரூபா: 300/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.


**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-7538)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!
பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!**
**நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!**

### பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடுழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

(சி-7517)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகை சுகத்தின் பகை; விழிப்புணர்வு பேரணி





(யாழ்ப்பாணம்)

உலகபுகையிலைஎதிர்ப்புதினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் விழிப் புணர்வு பேரணி நேற்று இடம்பெற் றது. நல்லூர் ஆலய முன்றலில் ஆரம்பமாகிய பேரணி முற்பகல் 11 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்ட பத்தை அடைந்தது.

புகை சுகத்தின் பகை, புகைத்தலில் செலவிடுதலை உன் பிள்ளையின் படிப்பில் முதலிடு போன்ற பதா கைகளைத் தாங்கியவாறு இந்த விழிப் புணர்வுப் பேரணி இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வுப் பேரணியை யாழ்.பல்கலைக்கழக சமுதாய மற் றும் குடும்ப மருத்துவத் துறையுடன் இணைந்து யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் மருத்துவ விஞ்ஞான பிரிவு, யாழ்ப்பாண மருத்துவ சங்கம் மற்றும் சமூக நிறுவனங்கள் என்பன இணை ந்தே இந்த புகையிலை விழிப்புணர் வுப் பேரணியை ஏற்பாடு செய்திரு ந்தன.

வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்ற புகையிலை ஒழிப்பு தொடர் பான கருத்தரங்கில் புகையிலைப் பதார்த்தங்கள் பற்றிய ஓர் அறி முகம், புகையிலைப் பாவனையால் ஏற்படும் சுகாதார பாதிப்புக்கள், புகை யிலையும் புற்றுநோயும், எதிர்கால நடவடிக்கைகள் ஆகிய தலைப்புக் களில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள், பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை யாழ்.நகர் பேரு ந்து தரிப்பிடத்திற்கு முன்பாக ஏமாற் றத்திற்கு அகப்படாதீர்கள் எனும் விழிப் புணர்வுத் திரைப்பலகையை முற்பகல் 9.30 மணியளவில் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ் வரி பற்குணராசா திரை நீக்கம் செய்து வைத்தார். (அ-6)

# மூன்று நூல்கள் வெளியீடு தேசிய கல்வியியற் கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் முனைவர் ச.தனஞ் சயராசசிங்கத்தின் இலக்கியச் சிந்த னைத் தடங்கள் யாழ்ப்பாணப் பேச் சுத்தமிழ், நாவலர் பணிகள் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வி யியற் கல்லூரி கலையரங் கில் யாழ்.தேசிய கல்வியியற் கல் லூரி பீடாதிபதி சதாசிவம் அமிர்தலி ங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந் தினராக பேராதனைப் பல்கலை க்கழக தகைசார் தமிழ்ப்பேராசிரியர் கலாகீர்த்தி சி.தில்லைநாதன், திரு மதி மல்லிகா தில்லைநாதன் ஆகி யோர் கலந்து கொண்டு சிறப்பிப் பார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக பேரா தனைப் பல்கலைக்கழக இந்து நாக ரிக தமிழ்த்துறை ஓய்வுநிலை பேரா சிரியர் இரா.வை.கனகரத்தினம், சமநல அபிவிருத்தி முன்னாள் உதவி ஆணையாளர் நா.குழந்தைவேலு ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இதில் நன்றியுரையை யாழ்.தேசி யக் கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளரும் பதிப்பாசிரியருமான மு. கௌரிகாந்தன் வழங்குவார்.

# இந்திய-இலங்கை ஒப்பந்தம் எமக்கு கிடைத்த ஓர் பொன்னான வாய்ப்பு

## ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களது விடுதலைப் போரட் டம் பல்வேறுபட்ட இயக்கங்கள் இணைந்து ஆரம்பித்த ஒரு போராட் டமாகும்.

நாளடைவில் சிலர் இதை தவ றாக வழி நடத்தியமை தான் இன்று நாம் கண்ட இத்தனை அழிவுகளு க்கும் காரணம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந் திரன் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு மீள்குடியேறிய மக் களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக கட்டுவன் மேற்கு திரு வள்ளுவர் சனசமூக நிலைய நிர் வாகத்தினரின் ஏற்பாட்டில் மக்கள் சந்திப்பு அண்மையில் இடம்பெற் றது.

இதில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், நீண்டகாலமாக இப்பகுதி இராணு வக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.

இதேவேளை அமைச்சரின் அதீத முயற்சியின் காரணமாக மீளவும் இப் பகுதியில் நீங்கள் குடியேறியுள் ளீர்கள்.

அத்துடன் அன்று ஏற்படுத்தப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் எமக்கு கிடைத்த பொன்னான வாய்ப்பு.

ஆனால், தவறாக அதை பயன் படுத்தியமையால் இந்தியாவே எம்மை ஒதுக்கி விடும் நிலைக்கு வழி வகுத் தது.

வடக்கிலுள்ள அத்தனை பிர தேச சபைகளுக்கும் அரசு வருடா ந்தம் நிதி ஒதுக்கி வருகின்றது. அதை நாம் மக்களுக்கு பெற்றுக்கொடுக் கின்றோம் என்றார்.

இதன்போது ஈழமக்கள் கட்சி யின் வலி.மேற்கு பிரதேச சபை எதிர் கட்சி தலைவரும் வலிகாமம் அமைப் பாளருமான ஜீவன், வலி.வடக்கு அமைப்பாளர் அன்பு, வலி.தெற்கு அமைப்பாளர் வான்ரயன் மற்றும் அபிவிருத்திக்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

வடக்கிலுள்ள அத்தனை பிரதேச சபைகளுக்கும் அரசு வருடாந்தம் நிதி ஒதுக்கித்தான் வருகின்றது. தீவுப் பகுதிகளில் அதை நாம் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கின்றோம். (2)

# இலத்திரனியல் கழிவு பொருட்கள் சேகரிப்பு

இலத்திரனியல் கழிவு சேகரிப்பு வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உப அலுவலகப் பகுதியில் பாவனைக் குதவாத இலத்திரனியல் கழிவுப் பொருட்களைச் சேகரிக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ளதாக நீர்வேலி உப அலுவலகம் வலி.கிழக்கு பிரதேச சபை பொறுப்பதிகாரி தி.தவராஜா அறிவித்துள்ளார்.

இதற்கமைய அன்றையதினம் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி க்கு அருகாமையிலும் நீர்வேலி வட க்கு காமாட்சியம்மன் சனசமூக நிலை யப் பகுதி நீர்வேலி கந்தசாமி ஆலய முன்றல் நீர்வேலி-கந்தன் இராமுப் பிள்ளை பாடசாலை இராச பாதை வீதியில் அமைந்துள்ள பவானி களஞ் சியத்துக்கு அருகாமையிலும் மேற் படி கழிவுகள் பிரதேச சபை வாகன ங்களில் சேகரிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# இலங்கை மீனவர் விவகாரம் மோடியுடன் பேசப்படும்

## தமிழக அரசு அறிவிப்பு

இலங்கை கடற்றொழில் படை யினரால் தமிழக மீனவர்கள் தாக் கப்படும் சம்பவம் அடிக்கடி நிகழ்ந்து வரு வதால் மீனவர்கள் நலனை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு பாரதப் பிரதமர் நரேந்திரமோடியை தமிழக முதல்வர் ஜெயலலிதா வலி யுறுத்துவார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை டில்லி செல்கிறார். அங்கு பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து தமிழ கத்தின் வளர்ச்சி தொடர்பான கோரி க் கைகள் அடங்கிய மனுவை அளிக்கிறார்.

தமிழக முதல்வரின் டில்லி பய ணம் குறித்து தமிழக அரசு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையின் படி முதல்வர் ஜெயலலிதா நாளை மறு தினம் டில்லி செல்கிறார் அங்கு பிர தமர் நரேந்திர மோடியை அவரது சவுத் பிளாக் அலுவலகத் தில் சந் தித்து பேசுகிறார்.

மத்திய அரசில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள தமிழகத்தின் தீர்க்கப்படாத முக்கிய பிரச்சினைகள் குறித்தும் மாநிலத்தின் வளர்ச் சிக்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிடுவார் எனத் தெரிகிறது.

# மோட்டார் சைக்கிள் திருட்டு

(கனகபுரம்)

வீட்டினுள் நிறுத்தி வைக்கப்பட் டிருந்த மோட்டார் சைக்கிள் களவாடப் பட்டுள்ளது.

இச் சம்பவம் கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரி யவருவதாவது,

கனகபுரம் 4 ஆம் குறுக்குத்தெரு பகுதியிலுள்ள வீட்டு முற்றத்தில் பூட் டிய நிலையில் நிறுத்தி வைக்கப்பட் டிருந்த மோட்டார் சைக்கிள் வீட்டார் நித்திரைக்கு சென்ற சமயம் பார்த்து திருடப்பட்டுள்ளது.

இந்நிலையில் காலையில் பார்த்த போதே மோட்டார் சைக்கிள் களவாடப் பட்டமை தெரியவந்துள்ளது. இவ்வா றாக களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஹீறோ 100 சிசி ரகத்தைப்சேர்ந் ததும் DAN 6382 எனும் இலக்கம் கொண்டதுமாகும்.

இது பற்றிய முறைப்பாடு கிளி நொச்சி பொலிஸ் நிலையத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. (9-259)

# இராசி பலன்

01.06.2014
(வைகாசி 18, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 5.31 மணிவரை
புனர்பூசம் பின்னிரவு 1.40 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை

வளவன்

**மேடம்:** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காண்பீர்கள்.

**இடபம்:** புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், ரோக பயமுண்டு, குடும்பக்கவலைகள் ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும்.

**மிதுனம்:** நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு செல்லும் எண்ணம் உருவாகும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்:** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** தொலைபேசி வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைத்துக் கொள்வீர்கள், பயணங்கள் கைகூடும்.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, பிறர் உதவியுண்டு.

**துலாம்:** விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட வில்லங்கங்கள் விலகும், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் மன நிம்மதி ஏற்படும்.

**விருச்சிகம்:** குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, பிரயாண பயமுண்டு, முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, மனக்கிலேசங்கள் கூடும்.

**தனுசு:** கௌரவமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்களின் சந்திப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப் புக்கள் உங்களின் தகுதியை உயர்த்தும், போசன சுகமுண்டு.

**மகரம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிபுகள் எடுப்பீர்கள், கடன் பிரச்சனைகள் சுமுகமாக முடியும், பெண் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**கும்பம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மீனம்:** வளர்ச்சிப் பாதைக்கு துணை புரிந்தவர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, சுப செலவுகள் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவற்ற உறுப்பினர் சபையில் இருக்கின்றார்

## சுனில் எம்.பி. தெரிவிப்பு

(புத்தளம்)

புத்தளத்தில் அறிவற்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தில் இருப்பதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் அந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படும் உறுப்பினர்களும் உள்ளனர். அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் உறுப்பினர்களும் உள்ளனர்.

ஆளும் கட்சியின் தலைவருக்கு தேவையான வகையில் நியமிக்கப்பட்டவர்தான் அஸ்வர். எவர் பின்னால் சென்றாவது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பெறுவதையே அவர் எப்போதும் செய்து வந்தார். எந்த தேர்தலிலும் அவர் ஒருபோதும் போட்டியிட்டதில்லை.

தலைவர்களுக்கு தேவையான வகையில் நியமிக்கப்படும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்காக நாம் பேசும் போது குறுக்கீடு செய்து வருகின்றனர்.

அதற்காகவே இவர்களுக்கு இந்த நியமனம் வழங்கப்படுகிறது. நாடாளுமன்றத்தில் மக்கள் குறித்து சிந்தித்து கேள்விகளை எழுப்பும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அஸ்வர் உண்மையிலேயே பெரும் தடையாக இருந்து வருகிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532

# 100 கிலோ கஞ்சா இந்தியாவில் மீட்பு

(கொழும்பு)

இலங்கைக்கு கடத்திச் வரப்படவிருந்த பெருந்தொகை கஞ்சா போதைப் பொருள் இந்தியாவில் கைப்பற்றப்பட்டுள்ளது.

தமிழகத்தின் இராமேஸ்வரம் கடற்கரைக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தற்காலிக குடில் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தாம் நேற்று முன்தினம இந்த கஞ்சா தொகையை கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் 100 கிலோ கிராம் கஞ்சா இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

அதேவேளை கொழும்பு வெலிகடை பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண்ணொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிக்கடை பண்டார நாயக்க புர பகுதியில் கைது செய்யப்பட்ட இந்த பெண்ணிடம் இருந்து 2 ஆயிரத்து 100 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 250 | 220 | 240 | 200 |
| தக்காளி | 180 | 140 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | .40 | 40 | 50 |
| கோவா | 120 | 120 | 100 | 120 |
| கரட் | 120 | 120 | 100 | 160 |
| பூசணி | 80 | 60 | 60 | 80 |
| புடோல் | 80 | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 130 | 110 | 130 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 160 | 160 | 150 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 40 | 60 | 80 |
| பயற்றங்காய் | 60 | 80 | 50 | 60 |
| லீக்ஸ் | 80 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 70 | 100 | 80 | 120 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 100 | 80 |
| போஞ்சி | 160 | 180 | 170 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 120 | 130 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 30 | 35 | 25-30 |
| இராசவள்ளி | 80 | 100 | 100 | 100 |



BOC வங்கியின் 18+ சேமிப்பு கணக்கு வைத்திருந்தவர்களுக்கான திருமண அன்பளிப்பு யாழ்ப்பாணம் அதிமேத்தர கிளையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது கிளையின் பிரதான முகாமையாளர் எஸ்.பிரேம்குமார் அன்பளிப்பை வழங்குவதை படத்தில் காணலாம்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like (31)

**பாஸ்கரன் கரன்**

பட்டினி கிடந்து பள்ளியில் சேர்த்தேன்
கல்,மண் தூக்கி கல்லூரியில் சேர்த்தேன்
வெயிலில் வெந்து வேலையில் சேர்த்தேன்
மகனே!!நீயோ எளிதில் என்னை முதியோர்
இல்லத்தில் சேர்த்தாய்...!!!



**அஜேக் சுஜி**

நடுவுல கொஞ்சம் ரோட்ட காணோம்



**விஜிதா பாலன்**

நீங்க chat செய்யும் போது
Hmmm,k,haha,lol என்று Reply
வந்தால்




chat செய்பவருக்கு பேச விருப்பம் இல்லை என்று பொருள். உடனே sign out செய்து கொண்டு போய் படிக்கிற வேலைய பாருங்க

**பதுமன் கலைச்செல்வன்**



சைக்கிள்ல போனா சைக்கிள் Stand
கூட வரும்
Busல போனா Bus Stand கூட வருமா?

**மேனகா நடராஜன்**



**அன்பு ராஜ்**

படித்ததில் பிடித்தது

கால் நனையாமல் கடல்
கடந்தவர் உண்டு,
ஆனால் கண் நனையாமல்
வாழ்க்கையை கடந்தவர்
உண்டா?



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு/ வாடகைக்கு

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி நீராவியடிக்கு அருகாமையில் 4 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு . தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு:-**
**0716160296**

(6535)

## கருத்தரங்கு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் தலைமைத்துவ பயிற்சிக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மேற்படி பாடசாலை மண்டபத்தில் பாடசாலை இளைஞர் கழகத்தின் தலைவர் சுலக்சனா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான ஐ.நா. இளைஞர் ஆலோசனைச் சபையின் உறுப்பினர் சந்துரு வளவாளராக கலந்து கொள்ளவுள்ளார்.

இதன் ஆரம்ப நிகழ்வில் ஆனைக் கோட்டை றோ.க.த.க. பாடசாலை பிரதி அதிபர் ஷாம்குமார், பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ரம்மியராகுலன் மற்றும் தொழிலதிபர் வாகீசன் ஆகியோர் கலந்து கொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளனர். (2-23)

## If you want to be a qualified PHARMACIST
## மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை

Pharmacist (External) examination conducted every year By the Ceylon Medical College Council, Faculty of Medicine, University of Colombo. After two years of apprenticeship, the candidate is eligible to sit for the above examination, which qualifies for registration as a pharmacist.

AGE:- No Limit (வயது எல்லை இல்லை)

Qualification:- G.C.E. O/L pass in English Language
G.C.E. A/L Ordinary pass in three science subjects including Chemistry.

(29.06.2014 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு **Admission Registration** பதிவுகள் நடைபெறும்)

**06.07.2014 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு புதிய பிரிவு ஆரம்பம்**

Vanue: Jaffna College (Under Graduate Dept)
464, Hospital Road, Jaffna.
Course fee monthly Rs.1500/=

யாழ்ப்பாணக் கல்லூரி அனுமதிக் கட்டணம் (500/-) மேலதிக விபரங்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பார்மசி வகுப்பில் பகல் 12 மணிக்கு நேரடியாக அறிந்து கொள்ளலாம்.

(6514) **T.P:0776256292**

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் பல வெற்றிடம் (யாழ்/ கொழும்பு/ தெஹிவளை/ கம்பஹா/ கண்டி/ களனி/ குளியாப்பிட்டிய/ திருகோணமலை/ அநுராதபுரம்) மேசன்/ பெயின்டர்/ செடலின் பாஸ்/ கம்பிபாஸ்/ இலற்றீசன்/ டயில்பாஸ் (1200/= 11500/-) கையுதவியாளர் (900/= 11100/=) தங்குமிடம் இலவசம்

**தொடர்பு:- 0775561883**

(சி-7531)

## கைதேர்ந்த சமையற்காரர் தேவை

நிறுவனத் தலைவர் ஒருவரின் கொழும்பிலுள்ள பங்களாவிற்கு சுவை மணக்கும் அசல் யாழ். உணவு வகைகளை சிறப்பாக தயாரிப்பதில் கைதேர்ந்த ஒரு சமையற்காரர் தேவை. பொருத்தமான நபருக்கு கவர்ச்சிகரமான சம்பளமும் மேலதிகச் சலுகைகளும் வழங்கப்படும். விண்ணப்பியுங்கள்.

**விளம்பரதாரர் இல. 19, டிக்கல் வீதி, கொழும்பு-08**

(சி-7530)

## பொது மக்களுக்கான அறிவித்தல்

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்**

(31.05.2014 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்
11. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
12. சம்பத் பாங்க் பிஎல்சி
13. சிற்றி பாங்க் என்ஏ
14. செலான் பாங்க் பிஎல்சி
15. டிஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
16. டொயிச் பாங்க் ஏஜி
17. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
19. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
20. பப்ளிக் பாங்க் பெர்காட்
21. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
22. மக்கள் வங்கி
23. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
24. ஸ்ராண்டட் சார்ட்டட் பாங்க்
25. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பிஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலையன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
6. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
7. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
8. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
9. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
10. ஏஸ்டபிள்யூ கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
12. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
13. ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சி
14. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
15. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
18. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
19. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
20. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
21. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
22. சியபத பினான்ஸ் லிமிடெட்
23. சிற்றிசன்ஸ் டிவலொப்மெண்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
24. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
25. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. செங்கட கல பினான்ஸ் பிஎல்சி
27. சொவ்ற்லொயிக் பினான்ஸ் பிஎல்சி
28. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
29. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
30. த ஸ்ராண்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
31. தேசோதய டெவலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
32. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
33. ப்ரேக் லங்கா பினான்ஸ் பிஎல்சி
34. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
35. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
36. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
37. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
40. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
41. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
42. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
43. ரீகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
45. லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
46. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
47. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
48. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் பிஎல்சி

* இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதே வேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளில் சில தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒருங்கிணைப்பு செயற்பாட்டின் கீழ் இணைக்கப்பட/கையகப்படுத்தப்பட/உட்கொள்ளப்பட இருக்கின்றன. இது குறித்து பொதுமக்களுக்கு அறியத் தருவது என்னவென்றால் இந்த ஒருங்கிணைப்பு செயற்பாடானது மேற்கூறப்பட்ட வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளுடனான உங்களது தற்போதைய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வைப்புக்களை எந்தவகையிலும் பாதிக்காது' என்பதாகும்.

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk
நிதிக் கம்பனிகள் - தொ.பேசி: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

(சி-7539)

## கல்யாண மாலை

இவர்களுக்கு **மணமகள் தேவை** | இவர்களுக்கு **மணமகன் தேவை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 20<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L, CIMA / சொந்த வியாபாரம், கட்டட ஒப்பந்தம்<br>தொ.இ: B/3057 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: 21<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA - Following / தற்காலிக தனியார் வேலை<br>எதிர்பார்ப்பு: PR உள்ளவர் மட்டும்<br>தொ.இ: G/3067 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 52 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, BA – Following / கிராம அலுவலர்<br>தொ.இ: B/3060 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 20.25 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L, BSc – Following<br>தொ.இ: G/3069 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 43 சூரி செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த வியாபாரம் (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/3061 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: 25 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3074 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 17 சூரி செவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L / சொந்த வியாபாரம், ஓட்டோ சாரதி<br>தொ.இ: B/3064 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 11.25<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: கலைப்பட்டதாரி /ஆசிரியர்<br>தொ.இ: G/3075 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் [illegible] )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்கான நிதியொதுக்கீட்டை குறைக்குமாறு பரிந்துரைக்கவில்லை

## சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

வரவுசெலவுத்திட்டத்தில் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்திருப்பதாக வெளியான குற்றச்சாட்டை சர்வதேச நாணய நிதியம் மறுத்துள்ளது.

இலங்கையின் இலவசக் கல்வியை இல்லாமல் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாகவும், வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீட்டைக் குறைப்பது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த உடன்படிக்கை குறித்து கண்காணிப்பதற்கு உயர்மட்டக்குழுவொன்று இலங்கைக்கு வந்திருப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டை மறுப்பதாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழுவின் தலைவர் டொட் செனைடர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

வரவுசெலவுத் திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீடு குறித்து ஆராய்வது தமது குழுவின் இலங்கை விஜயத்துக்கான நோக்கம் அல்ல என்றும் கல்விக்கான ஒதுக்கீடுகளை அதிகரிப்பது முக்கியமானதொரு விடயமாகும் என்றும் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பு நாடுகளில் வழமையாக நடைபெறும் 4 ஆவது சரத்து ஆலோசனை தொடர்பாக ஆராயும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் இலங்கை வந்துள்ளனர்.

இந்தக் குழுவினர் கடந்த 20 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர். இவர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி டொட் செனைடர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையின் பொருளாதாரமானது குறைந்த பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி வீதம் ஆகியவற்றுடன் சாதகமான நிலையில் இருக்கிறது.

அண்மைய வளர்ச்சியானது எதிர்பார்த்ததைவிட அதிகமாக உள்ளது என்றும், ஏற்றுமதி அதிகரிப்பு உள்ளிட்டவற்றின் மூலம் தொடர்ச்சியான வலுவான வளர்ச்சியைப் பெறமுடியும் என்றார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டை மறுத்திருக்கும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, இலவச கல்வியை இல்லாமல் செய்வது தொடர்பான உடன்படிக்கையொன்றை சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டிருப்பதை எதிர்க்கட்சித் தலைவர் நிரூபித்தால் ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகத் தயார் என ஜனாதிபதி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# வருடாந்தம் மூன்று இலட்சம் பேர் புதிய வாக்காளர்களாக இணைவு

## தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வருடாந்தம் 3 இலட்சம் பேர் நாட்டில் புதிய வாக்காளர்களாக இணைந்து கொள்கின்றார்கள் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் வயது முதிர்ந்த மற்றும் பல்வேறு காரணங்களினால் மரணிப்போர் தொகை இரண்டு இலட்சம் வரை உள்ளதால்,வாக்காளர் இடாப்பில் புதிதாக மூன்று இலட்சம் பேர் பதிவாகின்றார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

வாக்காளர் இடாப்பில் ஒவ்வொரு வருடமும் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்வோர் மட்டுமே வாக்களிக்கும் உரிமையைப் பெறுகின்றார்கள் என சுட்டிக்காட்டிய தேர்தல் ஆணையாளர், ஊடகங்களும் பொது அமைப்புகளும் இது தொடர்பில் மக்களுக்கு தொடர்ந்து விழிப்புணர்வூட்டுவது அவசியமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஒவ்வொரு வருடமும் இளைஞர்களே அதிகளவில் தேர்தல் இடாப்பில் தம்மைப் பதிவு செய்துகொள்கின்றார்கள் என குறிப்பிட்ட அவர், மலையகப் பிரதேசங்களிலிருந்து கொழும்பில் தொழிலுக்காக தங்கியுள்ள இளைஞர், யுவதிகள் தம்மை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்து கொள்வதில் அக்கறை காட்டுவதில்லை எனவும் தெரிவித்தார்.

தேர்தல் வன்முறைகளைப் பொறுத்தவரை நாட்டில் எங்கும் இப்போது வன்முறைகள் நடைபெறுவதில்லை என்றே கூற வேண்டும். சிறு சிறு சம்பவங்கள் நடைபெறுகின்ற போதும், அவற்றைக் கட்டுப்படுத் துவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு விடுகின்றனர்.

தேர்தல் சட்ட திட்டங்களைப் பொறுத்தவரை எந்த ஒரு கட்சித் தலைவரோ அல்லது வேட்பாளரோ தேர்தல் ஆணையாளரையோ அல்லது அதிகாரி களையோ எதற்கும் பயன்படுத்துவதில்லை.

இப்படித்தான் செயற்பட வேண்டும் என வலியுறுத்துவதும் இல்லை. அவர்கள் எமக்குப் பூரண ஒத்துழைப்பினை வழங்குகின்றார்கள். இது எமது நடவடிக்கைகளை சிறப்பாக முன்னெடுக்க பெரும் உறுதுணையாகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# ஜே.வி.பியின் ஆதரவு தேடி ஆளும் எதிர்த்தரப்பினர்

ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் ஜே.வி.பி.யின் ஆதரவைத் தக்க வைத்துக் கொள்ளும் முயற்சிகளை அரசாங்கத் தரப்பும், ஐ.தே.க.வும் முடுக்கி விட்டுள்ளன.

தேர்தல் கூட்டணி ஒன்றை அமைத்துக் கொள்வது தொடர்பாக அமைச்சர்கள் சிலரும், ஐ.தே.க. எம்.பி.க்கள் சிலரும் ஜே.வி.பி.யின் புதிய தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

எட்டு அமைச்சர்களும், ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பத்துப் பேரும் ஜே.வி.பி. தலைவரைத் தனியாகச் சந்தித்து இரகசியப் பேச்சுக்களை நடத்திருக்கின்றார்கள்.

குறிப்பிட்ட அமைச்சர்கள் பேச்சுவார்த்தைகளை நடத்திய போது ஆளும் கட்சியிலுள்ள சிறுபான் மையின உறுப்பினர்கள் சிலரும் பங்குகொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (2)

# வடக்கில் 264 பில்.ரூபாவை அரசாங்கம் செலவிட்டுள்ளது

## நிதியமைச்சு தெரிவிப்பு

வடமாகாணத்தில் 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 264 பில்லியன் ரூபா செலவிலான அபிவிருத்தி மற்றும் நலன்புரித் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

2013 ஆம் ஆண்டில் மட்டும் வடமாகாணத்தில் 49.4 பில்லியன் ரூபா செலவிலான உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

வடமாகாணத்தில் இடம்பெயர்ந்தவர்களின் நலன்புரித் திட்டங்களுக்காக அரசாங்கம் 23,933 மில்லியன் ரூபாவைச் செலவிட்டிருப்பதுடன், உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளுக்காக 221,444 மில்லியன் ரூபாவையும், சுகாதாரத்துறையின் அபிவிருத்திக்காக 20,410 மில்லியன் ரூபாவையும், கல்வித்துறை வளர்ச்சிக்காக 19, 561 மில்லியன் ரூபாவையும் அரசாங்கம் செலவிட்டிருப்பதாக நிதியமைச்சின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

வடமாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 25.9 வீதமாக அதிகரித்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் 16.2 வீதமாகக் காணப்பட்ட வளர்ச்சிவீதம் 2013ஆம் ஆண்டு 25.9 வீதமாக அதிகரித்துள்ளது.

வடமாகாணமானது இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் 4 வீத பங்களிப்பைச் செலுத்தியிருப்பதாக நிதியமைச்சு தெரிவித்தது.

அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் பல்வேறு வேலைத்திட்டங்கள் காரணமாக வடக்கு கிழக்கு மாகாணங்களின் வேலையின்மை வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. வடமாகாணத்தில் 6.1 வீதமாகக் காணப்பட்ட வேலையற்றோர் வீதம் 5.2 வீதமாகவும், கிழக்கு மாகாணத்தில் இந்த எண்ணிக்கை 15.5 வீதத்திலிருந்து 4.3 வீதமாகவும் குறைவடைந்திருப்பதாக நிதியமைச்சின் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (2)

யாழ். பல்கலைக்கழக மனைப் பொருளியல் பிரிவு நடத்தும்
யாழ்ப்பாணத்தில் முதலாவது

மனைப் பொருளியல் கண்காட்சி

ஜூன் 4 & 5

காலை 10.30- மாலை 4.30 வரையில்

1. மனை நிர்வாகம் & ஆடை நிர்மாணம்
2. உணவும் போஷாக்கும்
3. ஆரோக்கிய வாழ்வின் அடிப்படைகள்
4. மனித விருத்தி
5. உணவும் சமையலும் பாதுகாப்பும்

உள்ளிட்ட
ஒவ்வொரு வீட்டுக்கும்- ஒவ்வொரு மனிதருக்கும் -ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவசியமான ஏராளமான விடயங்களின் விசேட காட்சிப்படுத்தல்களுடன்

பழப்பானங்கள்- பாரம்பரிய உணவு வகைகள் பலகாரங்கள் நிறைந்த விசேட உணவுக் கூடங்கள்

நவீன சமையல் உபகரணங்கள், தையல் இயந்திரங்களின் பயன்பாடு தொடர்பான செயன்முறை விளக்கங்கள்

நவீன ஹொட்டேல் மாதிரி காட்சிப்படுத்தலும் செயற்பாட்டு விளக்கமும்

பாடசாலைகளில் மனைப் பொருளியல் கற்கும் மாணவர்களுக்கான கல்வி- தொழில் வழிகாட்டல்

பாடசாலை மாணவர்கள்- ஆசிரியர்கள்- இல்லத்தரசிகள்- மற்றும் எல்லோரும் கண்டு களித்து- உண்டு சுவைத்து - பயன்பெற வாருங்கள்.

பிரவேசம்: இலவசம்

இணைப்பாளர், மாணவர்கள்
மனைப்பொருளியல் பிரிவு
யாழ். பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணிசைப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சம்பந்தர் குருபூசையை முன்னிட்டு வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சைவ மகாசபை நடத்தும் பதிகப் பண்ணிசைப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் போட்டியில் திருஞான சம்பந்தரின் திருநீற்றுப் பதிகம்,மந்திரமாவது நீறு... எனத் தொடங்கும் பதிகம், திருநாவுக்கரசரின் நமச்சிவாயப் பதிகம் (சொற்றுணை வேதியன்... எனத் தொடங்கும் பதிகம்) ஆகிய இரு பதி கங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.


குறித்த போட்டியில் தரம் 6,7,8 ஐச் சேர்ந்த மாணவர்கள் ஒரு குழுவாகப் பங்கு பற்றலாம்.

ஒரு குழுவில் ஐந்து தொடக்கம் பதினைந்து மாணவர்கள் இடம்பெறலாம்.பாடல்களைப் பண்ணுடனும், பொருளுணர்ந்தும் பக்தி பூர்வமாகவும் பாடுதல் அவசியம். பாடல்களை பார்த்தும் பாடலாம், பொருள் கேட்கப்படமாட்டாது.

இப்போட்டிகள் யாவும் யாழ்.பிராந்தியத்திற்கு எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் வன்னிப் பிராந்தியத்திற்கு எதிர் வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மாங்குளம் மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் பொதுச் செயலாளர் சைவ மகா சபை, கல்லூரி வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 075 264 9863 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். (2)




# யாழ்.மாநகர சபையில் 72 பேருக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் சுகாதார தொண்டர்கள் 60 பேருக்கும் நூலக உதவியாளர்கள் 12 பேருக்கும் நேற்று முன்தினம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி யாழ்.மாநகர சபைக்கான 60 சுகாதார தொண்டர்களுக்கும் நூலக உதவியாளர்கள் 12 பேருக்குமாக 72 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுகள் மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணர்ாசா தலைமையில் மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்த நியமனம் வழங்கும் நிகழ்விற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

மாநகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் குறித்த நியமனத்தில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக 10 இற்கும் மேற்பட்ட சுகாதார தொண்டாகள் மாநகரசபை வாயிலில் காலை முதல் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# யாழ்.மாநகரசபைக்கு களங்கம் ஏற்படுத்தவே முயற்சிக்கின்றனர்

## யாழ்.மாநகரசபை ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தவே போராட்டங்களை சிலர் மேற்கொண்டு வருகின்றனர் என்று மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

72 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ்.மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த முதலாம் திகதி 87 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. அன்று கூறப்பட்டது போலவே இன்று 72 பேருக்கும் நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

அதன் படி யாழ்.மாநகர சபையில் நீண்டகாலம் வேலை செய்தவர்களில் பெரும்பாலானவர்கள் இன்றுடன் நிரந்தர நியமனத்தை பெறுகின்றார்கள்.

இவர்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் பணியாற்றவுள்ளனர். இருந்தும் இன்னும் சிறு தொகுதியினர் நிரந்தரம் கிடைக்க வேண்டியவர்களாகவுள்ளனர்.

இருந்தும் மாநகர சபையின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படுத்தும் செயற்பாட்டில் சில தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படுவது மிக வேதனையான விடயம். 10 பேர் வரையில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய போதும் அவற்றில் கூறப்பட்ட விடயங்களை பூர்த்தி செய்யாத நிலையில் அவர்களை தெரிவு செய்ய முடியாது இருந்தது

எனினும் விசேட அனுமதிகளை எடுத்து நியமனங்களை விரைவில் வழங்கி உதவுவோம் என்று அறிவுறுத்தியிருந்தேன்.

எனினும் அதனையும் மீறி சுலோகங்களைக் காட்டியது மிகவும் மனவருத்தமான செயல். பல எண்ணிக்கையானவர்களுக்கு மாநகர சபை வேலை வாய்ப்பை வழங்கி வருகின்றது. 2009,2010 ஆம் ஆண்டுகளில் இருந்து 30 பேர் பணியாற்றி வருகின்றனர். எனவே அவர்களையும் இணைத்துக் கொள்ளுமாறு அமைச்சரிடம் வேண்டுகோள் விடுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(2-6)

# செயற்றிட்ட உதவியாளர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தினால் ஒப்பந்த அடிப்படையில் செயற்றிட்ட உதவி யாளருக்கான பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்:

விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் முகாமைத்துவப்பட்டதாரியாக (முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேல்தரமாக)இருத்தல் அவசியம்.

விண்ணப்பதாரிகள் தமது சுய விபரக் கோவையினை சுயமாக தயாரித்து எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் உதவிப் பணிப்பாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# வீட்டின் கதவு உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் திருட்டு

(நல்லூர்)

வீட்டின் பின் பக்க கதவு உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளரினால் கோப்பாய் பொலிஸ் பிரிவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் நாயன்மார் கட்டு செம்மணி வீதி புண்ணியர் மடம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு வேளை இடம் பெற்றுள்ளது.

இதில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார்சைக்கிள், வீடியோ கமரா ஒன்று மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் என்பன திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை திருட்டுச் சம்பவம் இடம் பெற்ற முதல் நாள் அத்தெருவில் உள்ள வீடு ஒன்றில் சிலரின் நடமாட்டம் காணப்பட்டதாகவும் அப் பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் வைரமுத்து ரசனிராஸ் என்பவரது வீட்டிலேயே மேற்படி திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

இத்திருட்டுச்சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கோப்பாய் பொலிஸார் தேடி வருகின்றனர். (2-134)

# பயிலுநர் நிலஅளவையாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைநில அளவைத்திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இதற்கான கல்வித்தகைமைகளாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட நில அளவையியல் விஞ்ஞானமானி பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பதாரி 22 வயதுக்கு குறையாமலும் 33 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் நில அளவையாளர் நாயகம், நில அளவையாளர் நாயக அலுவலகம் , இல-150, கிருல வீதி, நாரஹேன் பிட்டி, கொழும்பு 05 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

# தடைதாண்டல் பரீட்சை

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு பெலவத்தை, பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பல் வேண்டும்.



அன்னையர் தினத்தை முன்னிட்டு கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நடைபெற்றது. இதில் அப் பிரதேச இளைஞர்கள் இரத்ததானம் வழங்குவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

821

## அன்னப்பறவைகளும் அன்பு சகோதரியும்

“வீர தேசம்’ என்ற நாட்டின் ராஜாவுக்கு ஆறு ஆண் குழந்தைகள், ஒரு பெண் குழந்தை. திடீரென ராணி இறந்துவிட, ராஜா ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண டார். அந்தப் பெண்ணோ, ஒரு சூனியககாரி. குழந்தைகளிடம் அவள் மோசமாக நடந்து கொண்டாள். இதனால், ராஜா ஒரு முடிவு செய்தார்.

அவருக்குச் சொந்தமான கோட்டை ஒன்று நடுக் காட்டில் இருந்தது. மந்திர நூல் உருண்டை ஒன்றை உருட்டிவிட்டு, அதன் பின்னால் சென்றால்தான் அந்தக் கோட்டைக்குச் செல்ல முடியும். அந்தக் கோட்டைக்குள் தன் குழந்தைகளை வைத்து, அவ்வப்போது சென்று பார்த்து வந்தார்.

இது சூனியக்கார ராணிக்குத் தெரிந்து விட்டது. ராஜா இல்லாத நேரமாகப் பார்த்து, அந்த நூல் உருண்டையை எடுத்தாள். அதை உருட்டிவிட்டு, கோட்டையை அடைந தாள். வெளியே இருந்தபடியே, “குழந்தைகளே, அம்மா வந்திருக்கிறேன்“ என்றாள். இதைக்கேட்டு, ஆறு இளவரசர்களும் வெளியே வந்தார்கள். அவர்கள் மீது மந்திரத்தை ஏவினாள் சூனியக்காரி. அவர்கள் அன்னப் பறவைகளாக மாறி, பறந்துபோனார்கள்.

இளவரசி வெளியே வராததால், அரண் மனைக்குத் திரும்பிவிட்டாள்.

அடுத்த நாள், கோட்டைக்கு வந்த ராஜா நடந்ததை அறிந்து அழுதார். “கவலைப்படாதீர்கள் அப்பா, நான் அண்ணன்களை மீட்டு வருகிறேன்” என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள் இளவரசி.

காட்டுக்குள் சென்றபோது மழை கொட்ட ஆரம்பித்தது. மழையில் நனைந்தபடியே, “எங்களைக் காப்பாற்ற யாரும் இல்லையா?“ என்று வாய்விட்டுக் கதறினாள் இளவரசி.




அப்போது தேவதை ஒன்று தோன்றி, “அழாதே, இந்த ஒற்றை படிப் பாதையில் சென்றால், ஒரு வீடு இருக்கும். அங்கே உன் சகோதரர்களைச் சந்திப்பாய். அவர்கள் ஒவ்வொருவருக்கும் உன் கையால் ஒரு சட்டையைப் பின்ன வேண்டும். ஒரு சட்டையைப் பின்னுவதற்கு ஆறு மாதங்கள் ஆகும். முழுமையாக முடியும் வரை நீ யாருடனும் பேசக் கூடாது“ என்றாள்.

இளவரசி தொடர்ந்து நடந்தாள். தேவதை சொன்ன வீடு வந்தது. மாலை நேரத்தில் ஆறு அன்னப்பறவைகள் வீட்டுக்கு வந்தன.

தான் அவர்களைக் காப்பாற்ற வந்திருப்பதாகத் தெரிவித்த இளவரசி, தேவதை கூறியதையும் அவர்களிடம் சொன்னாள்.

பிறகு அண்ணன்களுக்காக அவர்களிடம் ஒரு வார்த்தையும் பேசாமல் தொடர்ந்து சட்டையைப் பின்னிககொண்டிருந்தாள்.

ஒருநாள், பக்கத்து நாட்டு இளவரசன் வேட்டைக்கு வந்தான். காட்டுக்குள் வழி தவறியவன்,



இளவரசி இருந்த வீட்டை வந்தடைந்தான். “ஏதாவது சாப்பிடக் கிடைக்குமா?“ என்று கேட்டான்.

இளவரசி பதில் பேசாமல், உணவை அளித்தாள். அவளின் அழகும் அமைதியும் அவனுக்கு பிடித்துப்போயின. “நீ என்னைக் கல்யாணம் செய்துகொள்கிறாயா?“ என்று கேட்டான்.

இளவரசி பதில் சொல்லவில்லை. அந்த இளவரசன், அவளைத் தன் நாட்டுக்கு தூக்கிச்சென்றான். அவள் போகும் வழியில் நூல் உருண்டையை உருட்டியபடியே சென்றாள். மாலையில் வீட்டுக்கு வந்த அன்னப் பறவை சகோதரர்கள், அவள் விட்டுச்சென்ற நூல் உருண்டையைப் பார்த்து, அதன் வழியே அரண்மனையை அடைந்தனர்.

அங்கே இளவரசன், இளவரசியை மணம் முடித்திருந்தான்.

அன்னப்பறவைகள் தினமும் மாலையில் வந்து தங்கையைப் பார்த்துவிட்டு, அருகில் இருந்த மரங்களில் தங்கிக் கொண்டன. இளவரசிக்குக் குழந்தை பிறந்தது.

அந்த நாட்டு மந்திரிக்கு இளவரசியைப் பிடிக்கவேயில்லை. அதனால், இளவரசி தூங்கும்போது, குழந்தையை திருடிச் சென்று காட்டில் போட்டுவிட்டான். அந்தக் குழந்தையை அன்னப்பறவைகள் எடுத்துச் சென்றன.

அடுத்த நாள், “குழந்தை எங்கே?’ என இளவரசன் கேட்டபோது, அவள் பதில் சொல்லாமல் சட்டையைப் பின்னிக்கொண்டிருந்தாள். அதற்கு மேல் இளவரசன் ஏதும் கேட்கவில்லை.

இரண்டாவது குழந்தைக்கும், மூன்றாவது குழந்தைக்கும் இதேபோல நடந்தது. அப்போதும் இளவரசி பேசவில்லை. ஆத்திரமடைந்த இளவரசன், அவளைக் கொல்வதற்கு உத்தரவிட்டான்.

அப்போது இளவரசி சட்டைகளைப் பின்னி முடித்திருந்தாள். ஆறாவது சட்டையில் கை மட்டுமே பாக்கி.

அவளைக் கொலைக் களத்துக்கு அழைத்துச்சென்ற போது ஆறு அன்னப்பறவைகள் பறந்து வந்தன. இளவரசி தன் கையில் இருந்த சட்டைகளை அவற்றின் மீது வீசினாள்.

அன்னப்பறவைகள், மனிதர்களாக மாறின. ஆறாவது சட்டையில் கை இல்லாததால், ஆறாவது அண்ணனுக்கு கைக்குப் பதிலாக, அன்னத்தின் இறக்கையே இருந்தது.

சகோதரர்கள், சாபம் விலகி மனித உரு எடுத்ததும் அவர்களைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் வடித்து, பேச ஆரம்பித்தாள் இளவரசி.

நடந்ததை அறிந்த இளவரசன், மந்திரியைச் சிறையில் அடைத்தான். அன்னப் பறவைகளின் பாதுகாப்பில் இருந்த குழந்தைகள் அரண்மனைக்குக் கொண்டுவரப் பட்டன.

பிறகு அவர்கள், தந்தையைச் சந்தித்து நடந்ததைச் சொன்னார்கள். ராஜாவுக்கு ஏகப்பட்ட சந்தோஷம். அப்படியானால், அந்தச் சூனியக்கார ராணி? அவள் ஏற்கனவே சிறையில் அடைக்கப்பட்டிருந்தாள்.

☆☆☆☆☆☆☆☆☆☆☆

06.2014
01

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 193 - உரோமப் பேரரசர் டிடியஸ் ஜூலியானஸ் படுகொலை செய்யப்பட்டார்.
- 1215 - மொங்கோலியப் பேரரசன் செங்கிஸ் கான் பெய்ஜிங் நகரைக் கைப்பற்றினான்.
- 1485 - ஹங்கேரியின் மத்தாயஸ் வியென்னாவைக் கைப்பற்றினான்.
- 1533 - ஆன் பொலெய்ன் இங்கிலாந்தின் அரசியாக முடிசூடினாள்.
- 1605 - மொஸ்கோவில் ரஷ்யப் படைகள் மன்னன் இரண்டாம் ஃபியோத்ரையும் அவனது தாயாரையும் சிறைப் பிடித்தனர். இவர்கள் பின்னர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1792 - கென்டக்கி ஐக்கிய அமெரிக்காவின் 15ஆவது மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- 1796 - டென்னசி ஐக்கிய அமெரிக்காவின் 16ஆவது மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- 1812 - அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் மாடிசன் ஐக்கிய இராச்சியம் மீது போரை அறிவிக்கும்படி காங்கிரசைக் கேட்டுக்கொண்டார்.
- 1831 - ஜேம்ஸ் ரொஸ் வட முனையைக் கண்டுபிடித்தார்.
- 1855 - அமெரிக்க நாடுகாண் பயணி வில்லியம் வோக்கர் நிக்கராகுவாவைக் கைப்பற்றினார்.
- 1869 - மின்சாரத்தால் இயங்கும் வாக்களிக்கும் இயந்திரத்துக்கான காப்புரிமத்தை தோமஸ் எடிசன் பெற்றார்.
- 1910 - ரொபேர்ட் ஸ்கொட் தலைமையிலான ஆய்வுக் குழு தென் முனையை நோக்கிய பயணத்தை இங்கிலாந்தில் இருந்து ஆரம்பித்தது.
- 1946 - ருமேனியாவின் பிரதமர் இயன் அண்டனேஸ்கு மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.
- 1947 - சுதந்திரன் இதழ் கொழும்பில் இருந்து வெளியாக ஆரம்பித்தது.
- 1959 - நிக்கராகுவாவில் புரட்சி ஆரம்பமானது.
- 1962 - நாசி வதைமுகாம்களை உருவாக்கிய அடொல்ஃப் ஐக்குமன் இசுரேலில் தூக்கிலிடப்பட்டார்.
- 1964 - சிறேதொகோ தேசிய வனம் ஜப்பானில் அமைக்கப்பட்டது.
- 1971 - தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1978 - டோக்கியோ பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.
- 1979 - 90 ஆண்டுகளுக்குப் பின்னர் ரொடீசியாவில் முதற்தடவையாக கறுப்பினத்தவர்களின் அரசு பதவியேற்றது.
- 1980 - சிஎன்என் ஒலிபரப்புச் சேவையை ஆரம்பித்தது.
- 1981 - யாழ் பொது நூலகம் மே 31 நள்ளிரவு நேரம் இலங்கை காவல் துறையினரால் எரிக்கப்பட்டது.
- 2001 - நேபாள மன்னர் பிரேந்திராவும் அவரது குடும்பமும் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1947 - ரோன் வூட், அமெரிக்க இசைக் கலைஞர்
- 1953 - ரோனி டுன், அமெரிக்க இசைக் கலைஞர்
- 1959 - ஆலன் வல்டேர், பிரித்தானிய இசைக் கலைஞர்
- 1960 - சைமன் கல்லுப், பிரித்தானிய இசைக் கலைஞர்
- 1974 - அலனிஸ்மாரிஸ்சாட், கனேடிய இசைக் கலைஞர்

### இறப்புகள்

- 1968 - ஹெலன் கெல்லர், அமெரிக்கப் பெண் எழுத்தாளர் (பி. 1880)
- 1979 - வேர்னர் ஃபோர்ஸ்மன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1904)
- 1999 - கிறிஸ்தோபர் கொக்கரல், காற்று மெத்தை உந்தைக் கண்டுபிடித்தவர் (பி. 1910)
- 1996 - நீலம் சஞ்சீவ ரெட்டி, இந்தியாவின் ஆறாவது குடியரசுத் தலைவர் (பி. 1913)
- 2001 - பிரேந்திரா, நேபாள மன்னர (பி. 1945)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்



**அச்சுவினி, பரணி,**
**கார்த்திகை 1 ஆம் பாதம்**
**65/100**

**சுக ஸ்தானத்தில் குரு வருகை!**
**துணிவும் பணிவும் இனி தேவை!**
**மற்றவர்களின் தவறுகளைத்**
**தட்டிக் கேட்கத் தயங்காத**
**மேட இராசி நேயர்களே!**

நீங்கள் எதிர்பார்த்து காத்திருந்த குருப் பெயர்ச்சி இப்பொழுது வந்துவிட்டது. இது வரை மிதுன இராசியில் சஞ்சரித்து வந்த குரு பகவான் இப்பொழுது நான்காமிடம் எனப் படும் சுக ஸ்தானத்திற்கு செல்கிறார். வாகனம், வீடு, சுகம், கல்வி, தாய், கோவில் பணிகள், கொடுக்கல்- வாங்கல்கள் போன்றவற்றை விளக்கும் இடத்திற்கு குரு செல்வதால் அந்த ஸ்தானம் புனிதமடைகின்றது.

கடகத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை மூன்று இடங்களில் பதிவாகிறது. குறிப்பாக ஆயுள் ஸ்தானம், தொழில் ஸ்தானம், விரய ஸ்தானம் என்று வர்ணிக்கப்படுகின்ற மூன்று இடங்களும் குருவின் பார்வையால் தோஷங்கள் நீங்கப்பெறுகின்றன. எனவே தான் குரு பார்க்க கோடி நன்மை என்று அழைக்கிறோம்.

இப்பொழுது பெயர்ச்சியாகும் குரு சாதாரண இடத்திற்குச் செல்லவில்லை. கடக இராசியில் உச்சம் பெறுகிறார். நவக்கிரகத்தில் சுபக்கிரகம் என்றும், நல்லவன் என்றும் வர்ணிக்கப்படுகின்ற குரு நல்ல பலன் பொருந்திய நேரத்தில் போராட்டமான வாழ்க்கையைக் கூட பூந்தோட்டமாக மாற்றிக் காட்டுவார். ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்போடு வாழ்க்கையை நன்றாக அமைத்துக்கொள்வீர்கள்.

எனவே, அதற்கு அடித்தளமாக அருகில் இருக்கும் புராதன கோவில்களுக்குச் சென்று, அங்குள்ள குருவின் சன்னிதியில் நின்று வழிபடுவதோடு மட்டுமல்லாமல் அதன் பரிபூரண பார்வையையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மனதில் பட்டதை**
**மறுகணமே செய்பவர்கள்!**

நீங்கள் மனதில் பட்டதை மறுகணமே செய்து முடிப்பீர்கள். ஒப்படைத்த பொறுப்புகளை ஒரு நிமிடத்தில் செய்வீர்கள். ஓரிரு நாட்களிலும் செய்து முடித்துக் கொடுப்பீர்கள். முன்கோபம் உங்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கும்.

உறுதியான கொள்கைப்பிடிப்பை நீங்கள் மேற்கொண்டிருப்பதால்தான் உன்னதமான

## சுக ஸ்தானத்தில் குரு வருகை! துணிவும் பணிவும் இனி தேவை!

எதிர்காலத்தை வரவழைத்துக்கொள்ள முடிகிறது. குடும்பத்தில் உள்ளவர்கள் உங்களை அனுசரித்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருப்பீர்கள். இருந்தாலும் ஆதாயம் தரும் விடயங்களில் அலட்சியம் காட்டாமலேயே அவர்களோடு ஒத்துப்போவீர்கள்.

இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்குப் பெயர்ச்சியாகி வந்த குரு கொட்டிக் கொடுக்கப்போகிறாரா? தட்டுப்பாடுகளைத் தகர்த்தெறியப்போகிறாரா? இல்லை வட்டியும் முதலுமாக வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போகிறாரா என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**மன்னவன் நான்கில் நிற்க**
**மலைபோல் துயர் வந்தாலும்**
**கண்ணெதிரில் பனியாய் மாறும்**
**கவலைகள் அனைத்தும் ஓயும்!**
**முன்னாளில் இருந்த நோய்கள்**
**முற்றிலும் விலகி ஓடும்!**
**பொன்னான ஒப்பந்தங்கள்**
**புதுமையாய் வந்துசேரும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது குரு நான்கில் நிற்கும் பொழுது அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கத்தால் குறைகள் ஏற்பட்டாலும் கூட, நிறைவான பலன்களும் கிடைக்கும். காரணம் அஷ்டமத்தில் பாதிப்பங்கு வலிமையுடைய அர்த்தாஷ்டம குருவாக இருக்கிறது. அதன் பார்வையால் நன்மை ஏற்படுமே தவிர எதிர்பார்த்த பலன்கள் ஓரளவே கிடைக்கும். முழுமையான பலன்களை நாம் பெற வேண்டுமானால் வியாழன் தோறும் விரதமிருந்து குரு பகவானை வழிபாடு செய்ய வேண்டும்.

இடம், பூமி, விற்பனையால் லாபம் கிடைக்கும். இருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். அண்டை, அயலார் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வது நல்லது. ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். வாகனம் வாங்க உகந்த நேரம் இது.

**குரு பார்வையால் கோடி நன்மை!**

இதுவரை மூன்றாமிடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் இப்பொழுது நான்காம் இடத்தில் சஞ்சரித்து 8,10,12 ஆகிய இடங்களைப் பார்க்கப்போகிறார். அதன் பார்வை பலத்தால் சிக்கல்கள் எல்லாம் தீரும். சிரமங்கள் குறையும். மக்கள் போற்றும் விதத்தில் மகத்தான வாழ்க்கையும் அமையும். அந்த அடிப்படையில் இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக

**எட்டினை குருதான் பார்த்தால்**
**இருந்திடும் நோய்கள் தீரும்!**
**பத்தினை குருதான் பார்த்தால்,**
**பணியினில் தொய்வு அகலும்!**
**பனிரெண்டைக் குருதான் பார்த்தால்**
**பயணத்தால் பலன்தான் கிட்டும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

# மேடம்



எனவே, பாயில் படுத்தவர்கள் பம்பரமாய்ப் பணிபுரிவர். நோய்கள் அகலும். இடமாற்றம், ஊர் மாற்றத்திற்கு விண்ணப்பித்தவர்கள் நினைத்த ஊருக்கு மாறுதலாகி வரும் வாய்ப்பு கிட்டும். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு கிட்டும்.

தொழில் வளர்ச்சி மேலோங்கும் விதத்தில் குருவின் பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிகிறது. எனவே, தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்துகொண்டே இருக்கும். பொன்னான வாய்ப்புகள் எப்பொழுது வரும் என்று ஏங்கிக்கொண்டிருந்த உள்ளங்களுக்கு நல்ல எதிர்காலம் வரப்போகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைவீர்கள் உடன் பிறப்புகள் கூட உதவிக்கரம் நீட்ட முன் வருவர். அதன் விளைவாக ஒப்பற்ற புதிய தொழில் ஒன்றையும் தொடங்க முன்வருவீர்கள்.

பயணங்கள் அதிகரிக்கும். அந்நிய தேசத்திலிருந்து அழைப்புகள் வரவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு எண்ணிபடியே வாய்ப்புகள் வந்து மகிழ்விக்கும். மண் வாங்கலாமா? மனை வாங்கலாமா? இல்லை, பொன், பொருள் வாங்கலாமா என்று சிந்தித்துக் கொண்டிருந்த உங்களுக்கு வீடு கட்டிக் குடியேறும் யோகம் முதல் நாடு விட்டு நாடு செல்லும் யோகம் வரை வந்து சேரும்.

**சஞ்சாரப் பலன்கள்**

குரு தன் சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (13.06.2014 முதல் 28.06.2014 வரை) :- விரயங்கள் மேலோங்கியிருக்கும், பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். பங்காளிப்பகை மாறும். வெளிநாட்டு முயற்சிகளில் இருந்த தடைகள் அகலும். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு கூட்டு முயற்சிகளில் இலாபம் குவிப்பீர்கள். அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

சனி சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (29.06.2014 முதல் 27.08.2014 வரை):- தொழில் வளம் மேலோங்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். வியாபாரப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். குழந்தைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். கூடுதல் இலாபம் கிடைப்பதற்கான கிளைத் தொழில்கள் தொடங்க முன்வருவீர்கள். பால்ய நண்பர்கள் உங்களுக்குப் பலமாக இருப்பர்.

புதன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது (28.08.2014 முதல் 02.12.2014 வரை):- உடல் நலத்தைப் பேணிப் பாதுகாப்பது நல்லது. சிறுசிறு ஆரோக்கியக் குறைபாடுகள் ஏற்பட்டு அகலும். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். எதிரிகளின் பலம் மேலோங்கியிருக்கும் இந்த நேரத்தில் உதிரி வருமானங்கள் வருவதில் கூட சிக்கல்கள் ஏற்படலாம். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து இணைவர். குடும்பச் சுமை கூடும். பொதுக் காரியங்களில் ஈடுபட்டிருப்போருக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

**வளர்ச்சி தரும் சிறப்பு வழிபாடு!**

செவ்வாய்க்கிழமை தோறும் வள்ளி மணாளனை வழிபாடு செய்யுங்கள். யோகபலம் பெற்ற நாளில் வலம்புரி விநாயகர், செல்வ முத்துக் குமரன், வைத்தியநாதர், தையல் நாயகி, அங்காரகன் ஆகியோரை வழிபட்டு வளர்ச்சியை கூட்டிக்கொள்ளுங்கள்.

**அக்கறை செலுத்த வேண்டிய**
**வக்ர காலம்!**

குரு பகவான் 03.12.2014 முதல் 21.12.2014 வரை மக நட்சத்திரக் காலில் அதிசாரமாகச் செல்கின்றார். அதில் டிசம்பர் 17 முதல் வக்ர கதியில் இயங்குகிறார். தொடர்ந்து 14.04.2015 வரையில் குரு வக்ர கதியில் சஞ்சரிக்கின்றார்.

இதுபோன்ற வக்ர காலங்களில் விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது நல்லது. 9,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக குரு விளங்குவதால் வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி, மாறி வந்து கொண்டேயிருக்கும். வளர்ச்சி வரும் பொழுதே அதை ஏற்றுக்கொள்ளுங்கள். தளர்ச்சி வரும்பொழுது தக்க விதத்தில் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

இக்காலத்தில் கூட்டு முயற்சியில் மாற்றம் ஏற்படும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பெற்றோர் வழி ஒத்துழைப்பு குறையலாம். பிரியமானவர்களுக்காக செலவிட்டு மகிழ்வீர்கள். கடன்சுமை கொஞ்சம் கூடும். பிள்ளைகளை அதன் போக்கில் விடாமல் தகுந்த முறையில் கண்காணித்துக்கொள்வது நல்லது.

**மேட இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

மேட இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக உடல் நலம் சீராகும். உற்சாகம் உள்ளத்தில் குடி கொள்ளும். திட்டங்களைச் செயற்படுத்துவதில் சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. பொன், பொருள் சேர்க்கை சென்ற ஆண்டைக் காட்டிலும் சற்று அதிகமாகவே இருக்கும். குடும்பச் சுமை கூடும். கணவன்-மனைவிக்குள் அப்போதைக்கப்போது பிரச்சினை வந்தாலும் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலம் ஒற்றுமையை பலப்படுத்திக் கொள்வீர்கள்.

குடும்பப் பெரியவர்கள் உங்கள் சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுப்பர். தாய் வழித் தனலாபம் உண்டு. குருவின் வக்ர காலத்தில் யாரையும் நம்பி செயற்பட இயலாது. ஆரோக்கியத்திற்காக சிறிது தொகையை செலவிடுவீர்கள். பிள்ளைகளின் திருமணக் கனவை நனவாக்குவீர்கள். குல தெய்வ வழிபாடும், குரு வழிபாடும் உங்கள் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**நாளை இடபம்..........**



**குருப் பெயர்ச்சி நேர ஜாதகம்**

| | | | |
|---|---|---|---|
| | சுக்ரன் கேது | சூரியன் புதன் (வ) | |
| | குருப்பெயர்ச்சி 13-6-2014 | | வியாழன் |
| | | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | செவ்வாய் |

***சுப ஸ்ரீ ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (13.06.2014) மாலை 6.03 மணிக்கு புனர்பூசம் நட்சத்திரம் நான்காம் பாதத்தில் கடக இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். இந்த வீடு குருவிற்கு உச்ச வீடாகும்.***

குருவின் வக்ர காலம்

**➢13.06.2014 முதல் 28.06. 2014 வரை புனர்பூசம் 4 இல் நட்சத்திரக் காலில் குரு. (தனது சாரம்) ➢29.06. 2014 முதல் 27.08 2014 வரை பூசம் நட்சத்திரக்காலில் குரு. (சனி சாரம்) ➢28.08.2014 முதல் 02. 12.2014 வரை ஆயிலியம் நட்சத்திரக் காலில் குரு. (புதன் சாரம்) ➢03.12.2014 முதல் 21.12. 2014 வரை மகம் நட்சத்திரக் காலில் குரு அதிசாரமாக செல்கிறார். ➢17.12. 2014 முதல் 21.12.2014 வரைகேது சாரத்தில் குரு வக்ர கதி. ➢22.12. 2014 முதல் 14.04.2015 வரை ஆயிலி யம் நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் வக்ர கதியில் குரு செல்கிறார். ➢15.04. 2015 முதல் 04.07.2015 வரை ஆயிலி யம் நட்சத்திரம் புதன் சாரத்தில் நேர் கதியில் குரு செல்கிறார். ➢ 05.07. 2015 அன்று குரு சிம்ம இராசியில் பிரவேசிக்கிறார்.**

**ஜோதிடக் கலைமணி**
**சிவல்புரி சிங்காரம்**

**அன்பு வாசகர்களே,**

**தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்த ஸ்வாமி எழுதிய எண் ஜோதிடம், குருப் பெயர்ச்சி பலன்கள் முடிந்ததும் தொடர்ந்து வலம்புரியில் வெளிவரும். ஆ.ர்.-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் தேர்தல் முடிவுகள் இலங்கைக்கு கூறும் செய்தி என்ன?

(நேற்றைய தொடர்ச்சி)



இந்த நிலையில் தற்போது தான் இலங்கையின் போர்கள் மற்றும் வன்செயல்களுடன் தொடர்பில்லாத ஓர் புதிய ஆட்சி அதிகாரம் இந்தியாட்சி பீடம் ஏறுகிறது.

டில்லியின் புதிய நிர்வாகத்தை கடமைப்படுத்தும் விதத்தில் மோடி அரசிற்கு ஏதாவது கடப்பாடுகள் இருந்தாலும் கூட அதனை கையாளும் தனித்துவமான கடந்த கால நுட்ப அனுபவங்கள் அதற்கு கிடையாது.

இவ்விதமாக இந்தியாவின் தெற்கத்திய அயல் நாடாகிய இலங்கை மட்டிலான அதனது அரச கொள்கையானது மாற்றத்துடன் கூடிய ஒரு தொடர்ச்சியாகவே இருக்கும் என இலங்கை எதிர்பார்க்க முடியும்.

இதன்படி இனப் பிரச்சினையானது தேசிய, பிராந்திய மற்றும் ஐ.நா.ம.உ.சபை சம்பந்தமானதாக இருப்பதுடன் புவியியல் சார் மூலோபாய களமுனை சம்பந்தமாக கூடுதல் அக்கறை செலுத்துவதாகவும் இருக்கும்.

அத்துடன் ஓரளவு கிட்டிய சமகாலத்தில் சிக்கல்களுக்கு உள்ளாகி இருக்கும் வாணிப மற்றும் பொருளாதார விடயங்களையும் அணைத்து செல்வதாகவே இருக்கும்.


நம்பிக்கை மற்றும் ஊகத்தின் அடிப்படையிலான எதிர்பார்ப்பு

இலங்கையின் போர்க்காலம் அதற்கு முந்திய-பிந்திய வருடங்களின் போது இலங்கை மட்டில் இந்தியா ஆரம்பத்தில் இருந்தே சம்பந்தப்பட்டிருந்தது.

சர்வதேச மட்டத்திற்கு இலங்கை இனப்பிரச்சினை எடுத்து கொள்ளப்பட்ட போது இந்தியா மேற்கொண்டது போன்ற முடிவுகள் தொடர்ந்தும் எடுக்கப்படுவதே பாதுகாப்பானது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு சம்பந்தப்படாத விதத்தில் டில்லியிலுள்ள புதிய அரசு பார்த்துக் கொள்ள வேண்டும்.

இலங்கை மட்டிலான இந்திய கொள்கையை மீளவும் நிலைப்ப



டுத்தி கொள்வதற்கான மிகச் சரி யான ஒரு முயற்சியாகவே இது இருக்கும்.

ஆனாலும் ஐ.நா.ம.உ. சபையின் இலங்கை மட்டிலான வாக்களிப்பை தவிர்ப்பது என்ற மன்மோகன் சிங் அவர்களது முடிவானது துணிச்சலான ஒன்றாக இருந்த போதிலும் மிகவும் காலம் தப்பிய ஒன்றாகவே இருந்தது.

அதனாலேயே அந்த முடிவானது புதியதொரு அரசாங்கத்திற்கு பொறுப்புகளை சுமத்தும் நிலையை உருவாக்கியது.

இந்தியாவின் புதிய அரச மாற்றத்துடன் ஆட்சிக்குவரும் புதியதோர் இந்தியப் பிரதமரும் அவரது வெளிவிவகார அமைச்சரும் அவர்களது அரசுடன் இணைந்து தமது இலங்கைக்கான கொள்கை சார் செயற்பாடுகளை இலங்கையின் பழைய வாக்குறுதிகளுக்கு உயிர்ப்பூட்டும் விதத்தில் உடனடியாகவே ஆரம்பிக்க இருக்கிறார்கள்.

இச் செயற்பாடுகள், இனத்துவ மற்றும் புவியியல் கேந்திர முக்கியத்துவ வர்த்தக முதலீட்டு களமுனைகளில் ஆரம்பிக்கும் எனலாம்.

தேர்தலுக்குப் பிந்திய இந்தியா, அனைத்து முனைகளிலும் இலங்கை முன்னேறிச் செல்லும் என்ற தனது



எதிர்பார்ப்புடன் இந்தியாவின் பிரதான அக்கறைக்குரிய பிரதேசங்களுக்கு வெளியேயும் இலங்கைக்கான ஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்கி பகிர்தலுடன் செயற்படும் என எதிர்பார்க்கும் என்பதால் ஒருவர் இன்னொருவரது இழப்பில் எழுச்சி பெறுவது இடம்பெறாது.


எமது முந்தைய அரசுகள் விடயத்தில் இதற்கு மாறாகவேதான் நிகழ்ந்தது.

இந்தியா வகிக்கும் பாத்திரத்

**வாக்குறுதிகள் தொடர்ந்தும் வாக்குறுதிகளாகவே இருக்கக்கூடாது என்னும் தலைப்பில் என்.சத்தியமூர்த்தி எழுதிய ஆய்வுக் கட்டுரை சண்டே லீடரில் வெளியானது. அக்கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாக்கப்படுகிறது. தமிழில்: யோகர்**

தில் இனப்பிரச்சினையே தொடர்ந்தும் உச்சத்தில் வைத்துப் பார்க்கப்பட்டாலும் அது சில காரணங்களின் பொருட்டு தமிழ்நாடு என்ற காரணிக்குப் புறம்பாகவே நோக்கப்படும்.

ஆனாலும் தேர்தலுக்குப் பிந்திய ஒரு இந்தியாவின் சிங் அரசு ஏற்கனவே ஆரம்பித்து செயற்பட்டுக் கொண்டிருந்தது போன்ற வழியே தொடரும். அதாவது பரஸ்பர நலன்கள் அதிகரிக்கப்படும் விதத்தில்



இருதரப்பு உறவுகளும் தொடர்ந்தும் ஆழமானதாகவும் விசாலமாகவும் பரஸ்பரம் விஸ்தரிக்கப்படும்.

எந்தத் தரப்பினருக்கும் தனி இழப்புக்கு இடமிருக்காது. இது இலங்கைத் தமிழர்களை ஒரு பக்கமும் இலங்கை அரசை மறு பக்கமும் உள்ளடக்குவதுடன் பனிப்போருக்குப் பிந்திய இந்திய நண்பனும் ஒரு வழியில் மேற்கின் கூட்டாளியுமான இந்தியாவின் பாரம்பரிய அதிக்க வலயத்திற்குள் வாலாட்டும் சர்வதேச சமூகத்தையுங்கூட ஒரு விதத்தில் உள்ளடக்குகிறது.

தேசிய பார்வையில் உண்மையான தேசியத்தலைவர்களாக கணிக்கப்படக்கூடிய தலைவர்கள் மத்தியிலிருந்து குறிப்பிடத்தக்க ஓர் பிரதமர் தெரிந்து கொள்ளப்படும் சாத்தியமற்ற விதமான தேர்தலுக்குப் பிந்திய நிலைமையொன்றினை கருத்திற் கொண்டு பார்த்தால், நிலையான அரசாங்கமொன்றுக்கு தலைமை தாங்கி நடத்தக்கூடிய எந்தவொரு பலம்வாய்ந்த தலைவரும் தமிழ்நாட்டின் அந்த தமிழின அபிமானங்கொண்ட போட்டி திராவிட அரசியல் செயற்பாடுகளை கட்டுப்பாட்டில் கொண்டிருக்க வேண்டிய சந்தர்ப்பமெதனையும் நிச்சயம் தவறவிடமாட்டார்கள்!

அதேநேரம், தமிழ்நாட்டு முதலமைச்சர்களுடன் எவருமே, அவரோ இவரோ எவறாயினும் இலங்கைத் தலைமைத்துவத்திற்கு! எதிரான தமது அதிருப்தியை வெளிக்காட்டவோ அல்லது தொடர்ந்தும் தமது எதிர்ப்பை முன்வைப்பதற்கு ஒன்றுக்கு இரு தடவை சிந்தித்துப் பார்க்கப் போவதுமில்லை.

இருநாட்டு தமிழ் தலைமைத்துவங்களுக்கும் மேற்படி விடயம் பொதுவான ஒன்றாயாகும்.

இது மாற்றமின்றித் தொடரும் ஒரே செயற்பாடாக இருக்குமானால் ஒன்றுபட்ட இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது எட்டாக் கனியாகவே இருக்கும்.

(முற்றும்)

# எங்கள் மண்ணில் நடமாடிய ஞானகுரு ஞானசேகரம் ஐயா

ஈழமணித்திருநாட்டிலமைந்துள்ள யாழ்ப்பாணம் நீர்வளம், நிலவளம், பொருள் வளங்களை மட்டுமன்றி அருள் வளத்தை அபரிமிதமாகப் பெற்ற பொன்னகராகும்.

இத்தகைய பேறுபெற்ற யாழ்ப்பாணத்தில் ஒரு சித்தர் பரம்பரை உருவாகி அருள்வளம் சுரந்து கொண்டிருக்கின்றது.

கடையிற்சுவாமிகள், அவரது சீடன் செல்லப்பா சுவாமிகள், அவரது சீடன் சிவயோக சுவாமிகள் என்னும் குரு பரம்பரையினர் யாழ்ப்பாணத்தைப் பண்படுத்தி ஆன்மீக வழிஎயக் காட்டிச் சென்றனர்.

கடையிற் சுவாமிகள் யாழ்.நகரக் கடைகளுக்குச் செல்வார்,கடை வீதிகளில் உலாவருவதால் கடையிற் சுவாமிகள் என்று அழைக்கப்பட்டார் என்பர்.

இச் சுவாமிகளின் கால்பட்ட கடைகள், வீடுகள் எங்கும் குறைகள் நிவர்த்தியாகின. செல்வம் கிடைத்தது, பொருள் வளம் பெருகியது.

இத்தகைய கடையிற்சுவாமிகள் ஒருமுறை வண்ணார்பண்ணையைச் சேர்ந்த செல்லத்துரை என்பவருக்குக் குழந்தையில்லாக்குறையை நிவர்த்தி செய்யத் திரு எண்ணங்கொண்டார்.

### ஞானகுருவின் பிறப்பு

ஒருநாள் செல்லத்துரையின் வீட்டுப் படலையில் நின்று கடைச்சாமியார் ஒரு இறைச் சித்துண்டைக் கடித்துக் கொடுத்து இதை உண் என்று செல்லத்துரைக்கு அருள் ஆணையிட்டுச் சென்றார்.

சுவாமியின் அருளால் செல்லத்துரை நாகரத்தினம் தம்பதியினருக்கு 1.6.1918 ஆம் ஆண்டு ஓர் அழகிய தவப்புதல்வன் பிறந்தான். குழந்தைக்கு



ஞானகுரு ஞானசேகரம்

ஞானசேகரம் என்னும் நற்பெயர் சூட்டினர்.

### சிறுபராயமும் கந்தன் வழிபாடும்

தலையாழி, கொக்குவில் என்னும் தன் வசிப்பிடத்தில் இருந்து சிறுவன் ஞானசேகரம் நல்லூர்க் கந்தனை தரிசிக்க அதிகாலையில் தன் மாமனாராகிய சபாரட்ண முதலியாருடன் செல்வார். சிறுவயதிலேயே புலாலை வெறுத்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய பிரபல பாடசாலைகளில் கல்வி கற்றார். பதினெட்டாம் வயதில் பிஸ்கால் அலுவலகத்திலும் பின்னர் காட்டுக்கந்தோர் இலாகாவிலும் பிரதம லிகிதராகக் கடமையாற்றினார்.

1945 இல் வண்ணார்பண்ணை பொறியியலாளர் செல்லத்துரையின் மகள் ராஜலஷ்மியைக்கரம் பிடித்து ஆறுகுழந்தைகளைப் பெற்றார்.

### இயல்,இசை,நாடக ஈடுபாடு

ஞானசேகரம் வேட்டி, நஷனல் ஆடையையே விரும்பி அணிவார்.

இளம் வயதில் பாடசாலையில் இசை, நாடக நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினார். பின்னர் இந்தியா சென்று பிரபல நடனக்கலைஞர் திருவழுவூர் இராமையாபிள்ளையிடம் நடனக் கலையை ஆர்வத்துடன் கற்றுக் கொண்டார்.

1944 களில் கொக்குவில் இந்து, யாழ்.இந்து, யாழ். இந்து மகளிர் கல்லூரிகளில் தன் ஓய்வு நேரங்களில் பாடசாலைகளின் வேண்டுகோளுக்கிணங்க நடனக் கலையைக் கற்றுக் கொடுத்தார்.

மாணவ , மாணவியரைத் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள கண்டி,கொழும்பு போன்ற இடங்களுக்கு திருமதி சரஸ்வதி பாக்கியராஜா போன்ற இசைக்கலைஞர்களுடன் சென்றார். இதனால் மாணவரும் பாடசாலைகளும் வெற்றியும் புகழும் ஈட்டின.

### சமூக சேவை

ஞானசேகரம் சிறுபராயம் முதல் இறுதி மூச்சிருக்கும் வரை சமூகத்திற்காக, ஆன்ம ஈடேற்றத்திற்காக செய்த தொண்டுகள் எண்ணிலடங்கா. அவற்றுள் முக்கியமானதாக இரத்மலானை இந்துக் கல்லூரி ஆரம்பித்தமையை குறிப்பிடலாம்.

தமிழர்களை அக்கல்லூரியில் கற்பிக்க வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுத்தமை இன்று ஓர் வரப்பிரசாதமாக தமிழ் மக்களுக்கு கிடைத்துள்ளது. 1957 இல் இனக் கலவரம் வேகவேகமாக மூள ஆரம்பித்த வேளை தன் அயல் வாழ் தமிழர்களையும் தன்னுடன் அழைத்து முள்வேலிகள் கடந்து இரத்மலானை விமான நிலையம் வந்தடைந்து பின் யாழ்ப்பாணம் வந்தடைய ஆவன செய்தார்.

1987 இல் இந்திய அமைதிப்படையினரின் தாக்குதலின் போது கொக்குவில் இந்துக் கல்லூரியில் தஞ்சமடைந்த நிலையிலுள்ள பொதுமக்களுக்கு [illegible] செய்தார்.

### சிவயோகர் சுவாமிகளின் நாமமிடல் நிகழ்வு

சிவயோகரின் உறவும் தொடர்பும் ஞானசேகரம் ஐயாவுக்கு இளமை முதல் சுவாமியின் இறுதிக்காலம் வரை இருந்தது. சுவாமி பலமுறை பல ஆசீர்வாதங்கள், எச்சரிக்கைகள், போதனைகள், ஆணைகள் என்பவற்றை ஞானசேகரம் ஐயாவுக்கு அன்புப் பிரசாதமாக வழங்கியுள்ளார்.

ஒருமுறை சுவாமியின் முன் பலரும் கூடியிருந்தனர். அப்போது சுவாமி ஒவ்வொருவரின் பெயர்களையும் வினவினார். பின்பு தனது திருவாயால் நல்லநாதன், ஞானசேகரம் எனப் பெயர்களைச் சொல்லி ஐயாவைப் பார்த்து நீ ஞானசேகரம் இல்லை. இவர் நல்லசேகரம் என்று திருநாமஞ் சூடினார்.

யோகர் சுவாமிகள் பலருக்கு இனக் கலவரம் வரப் போவதை பல வகையாக துடிதுடிப்புடன் பூடகமாக கூறியிருந்தார்.

ஒருமுறை சுவாமி ஞானசேகரத்திடம் புத்தரின் போதனைகளடங்கிய புத்தகம் ஒன்றைக் கொடுத்து வாசி என்றார்.

புத்தரின் கருணைத் தோற்றமும் போதனைகளும் ஞானசேகரத்திற்கு யோகரால் கொடுக்கப்பட்டதால், அவர் ஒருபோதும் இன விரோதம்,இனப் பகை, கோபம், குரோதம் என்னும் மன நிலைகளை கடந்து நிதானமாகச் செயற்பட்டார்.

### எம்மதமும் சம்மதமே

புத்தரின் போதனைகள் மட்டுமன்றி யேசுநாதர், இஸ்லாம் மதங்கள் பற்றிய போதுமான அறிவும் ஞானசேகரத்திற்கு இருந்தன. அவரவர் சமயத்தின் சாராம்சங்களை எடுத்தியம்பி சமய வேறுபாடற்ற சமநோக்குடையவராகத் திகழ்ந்தார்.

### பகவான் ஸ்ரீ சத்தியசாயி ஈடுபாடு

1966 களில் ஞானசேகரம் ஐயா பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின் லீலைகளால் மட்டுமன்றி அவரது போதனைகளால் ஈர்க்கப்பட்டார். இதனால் பகவானின் போதனைகளை சாதனைகளாக திரு கோண மலை, கொழும்பு,திநெல்வேலி, கொக்குவில், தாவடி, மந்திகை சமித்திகளில் செயற்படுத்தினார்.

பல சமித்திகளில் ஆன்மீக உரைகள், பஜனை, சத்சங்கம் பாலவிகாஷ் குருப் பயிற்சிப்பட்டறைகள் வைத்து சான்றிதழ்களை வழங்க ஆவன செய்தார்.

### ஞானகுருவாகத் தாவடியில்

1984களில் தாவடியைச் சேர்ந்த சீமெந்துக் கூட்டுத்தாபன கணக்கியலாளர் மகேஸ்வரன், ஞானசேகரம் ஐயாவை தனது தாவடியில்லத்திற்கு அழைத்தார்.

ஐயாவும் அங்கு ஓம்கார சாதனை முதல் திருநீற்றுப்பதிக சாதனை வரை பல்வேறு சாதனைகளை செய்யலானார்.

தாவடியில் இன்றுவரை இச் சாதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் சித்தன்கேணி, மானிப்பாய் என ஐயா பல இல்ல சாதனைகளைத் தொடக்கி வைத்தார்.

அவரது இறுதி மூச்சுவரை 16. 05.1990 வரை இச் சாதனைகளை நேரந்தவறாது சீராகச் சிறப்பாக செய்தார்.

ஐயா கடுமையான சாதனைகளை திடமுடன் செய்து காட்டி மகேஸ்வரன் அவர்களையும் அங்கு கூடியிருந்த அன்பர்களையும் வழிநடத்தினார்.

இன்றும் சாதனைகள் தொடர்கின்றன. ஞானகுரு ஞானசேகரம் ஐயாவின் 96 ஆவது அகவையாகிய இன்றைய நன்நாளில் அவர் தம் அற்புத வாழ்க்கைச் சரித்திரத்தைப் படித்துப் பேறு பெறுவோமாக .

திருமதி சண்முகயோகினி ரவீந்திரன்
சிரேஷ்ட ஆங்கில
விரிவுரையாளர், யாழ்.
பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச நிர்வாகம் சிறப்பாக செயற்பட நரேந்திரமோடி 10 அம்சத்திட்டங்கள்

நரேந்திர மோடி தலைமையில் பாராளுமன்றத் தேர்தலை சந்தித்த பாரதீய ஜனதா கட்சி அமோக வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் மத்தியில் ஆட்சியை பிடித்தது.

இதையடுத்து மத்தியில் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கூட்டணி மந்திரிசபை கடந்த 26 ஆம் திகதி பதவி ஏற்றது.

மறுநாள் மோடி தலைமையில் மந்திரிசபையின் முதலாவது கூட்டம் நடந்தது.

இதில் வெளிநாட்டு வங்கிகளில் குவிக்கப்பட்டுள்ள கறுப்பு பணத்தை மீட்டுக்கொண்டுவரவும், இது தொடர்பான விசாரணையை நடத்தவும் உச்சிநீதிமன்றத்தின் உத்தரவின் படி சிறப்பு புலனாய்வு குழுவை அமைக்க முடிவு எடுக்கப்பட்டது.

முன்னாள் நீதிபதி தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டும் விட்டது.

இந்த நிலையில் நரேந்திர மோடி தலைமையில் மத்திய மந்திரி சபை கடந்த வியாழக்கிழமை இரண்டாவது முறையாக கூடியது.


இந்த கூட்டத்தில் மந்திரிகளுடன் நரேந்திர மோடி வெளிப்படையாக பேசினார்.

குறைந்த அளவிலான தனது அரசைக் கொண்டு சிறப்பான நிர்வாகத்தை தர வேண்டும் என்பதே தனது நோக்கம் என அவர் கோடிட்டுக்காட்டினார்.

தனது தலைமையிலான ஆட்சி நிர்வாகம் எப்படி நடைபெற வேண்டும் என்பது குறித்து அவர் எடுத்துரைத்தார்.

அப்போது அவர் மந்திரிகள் ஆட்சி நிர்வாகத்திலும் அரசின் திட்டங்கள் மக்களைப் போய்ச் சேருவதிலும் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதிலும் தங்களது கவனத்தை செலுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பொது மக்களிடமிருந்தும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் வருகிற கடிதங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தீர்வுகாண வேண்டும், அவர்கள் எழுப்புகிற பிரச்சினைகளுக்கு பதில் கடிதமும் எழுத வேண்டும் என்றும் மந்திரிகளுக்கு நரேந்திர மோடி உத்தர



விட்டார்.

முதல் 100 நாளில் மேற்கொள்ள வேண்டிய செயற்றிட்டத்தை மந்திரிகள் வகுத்து, அவற்றை செயற்படுத்துவது குறித்தும் திட்டமிடுமாறு மந்திரிகளை அவர் அறிவுறுத்தினார்.

மத்திய அமைச்சர்கள் தங்களது இராஜாங்க மந்திரிகளுக்கு பணிகளை பிரித்து ஒதுக்கவும் ஆலோசனை வழங்கினார்.

மேலும் மாநில அரசுகளிடம் இருந்து வரும் கடிதங்களை பரிசீலித்து அவற்றுக்கு என்ன தீர்வு என்பதை விரைவாக பதில் மூலம் தெரிவிக்க வேண்டும் என்றும் மத்திய மந்திரிகளுக்கு நரேந்திர மோடி உத்தரவிட்டார்.

# மோடி அரசாங்கத்தினை உன்னிப்பாக கவனிப்போம்

## காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி



(கொல்கத்தா)

மக்களவைத் தேர்தலில் பா.ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியை கடுமையாக விமர்சித்த திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி, மோடி பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளவில்லை.

கட்சியின் பொதுச்செயலாளர் முகுல் ராய் மற்றும் நிதி மந்திரி அமித் மித்ராவை அனுப்பி வைத்தார்.

இந்நிலையில், மக்களவையில் 34 எம்.பிக்களை கொண்டுள்ள திரிணாமுல் காங்கிரஸ், மோடியின் அரசாங்கத்தை உன்னிப்பாக கவனித்து வருகிறது.

மோடி அரசு மக்கள் ஆதரவு அரசாக செயற்பட்டால் பாராட்டுவோம் என்றும், அவ்வாறு செயற்படாமல் மக்கள் நலன்கள் பாதிக்கப்பட்டால் பாய்ந்து தாக்குவோம் என்றும் மம்தா கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற கட்சி கூட்டத்தில் பேசிய மம்தா, பா.ஜனதா ஆட்சிக்கு வந்ததற்கு காங்கிரஸ்தான் காரணம் என்று குற்றம் சாட்டினார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் இருந்து வெளியேறிய பின்னர் காங்கிரசின் மோசமான நாட்கள் ஆரம்பித்தன.

மக்கள் விரோத நடவடிக்கையால் ஒருவரின் நம்பிக்கையையும் அவர்கள் பெறவில்லை.

மேற்கு வங்காளத்தில் திரிணாமுல் காங்கிரசின் சிறப்பான ஆட்சிக்கு பரிசாக, மக்களவைத் தேர்தலில் மொத்தம் உள்ள 42 தொகுதிகளில் 34 இல் திரிணாமுல் காங்கிரசை மக்கள் வெற்றி பெறச் செய்துள்ளனர் என்றும் மம்தா குறிப்பிட்டார்.

# ஈகுவடார் முன்னாள் ஜனாதிபதிக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை



(கொய்டா)

தென் அமெரிக்காவில் உள்ள ஈகுவடார் நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர் ஜமீல் மகுவத். இவர் கடந்த 1999 ஆம் ஆண்டில் பதவியில் இருந்தார்.

அப்போது அவர் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு வழி வகுத்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

அப்போது அவர் பல நாட்கள் வங்கிகளை மூட உத்தரவிட்டார். அதனால் நாட்டில் பணத்தின் மதிப்பு குறைந்தது. பண வீக்கம் காரணமாக மிக குறைந்த விலைக்கு எண்ணெய் விற்பனை செய்தார்.

இதனால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி காரணமாக வறுமை ஏற்பட்டது. அதை தொடர்ந்து இராணுவ புரட்சி உருவானது. எனவே 2000 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு தப்பி ஓடிவிட்டார்.

எனவே இவர் மீது 'இன்டர் போலில் (சர்வதேச பொலிசில்) புகார் செய்யப்பட்டது. ஈகுவடார் நாட்டில் உள்ள நீதிமன்றிலும் இவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

ஆனால் தன் மீது கூறப்பட்ட புகாரை அவர் திட்ட வட்டமாக மறுத்தார்.


இருந்தும் இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு 12 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது.

இதற்கிடையே, அவருக்கு இன்டர் போல் பிடியாணை பிறப்பித்துள்ளது.



அமெரிக்காவுக்கு விஜயம் செய்த இஸ்தோனியா வெளியுறவு அமைச்சர் உர்மாஸ்பியாட் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரியை வோஷிங்டனில் சந்தித்து கைலாகு வழங்குவதைப் படத்தில் காணலாம்

# தீவிரவாதிகள் ஊடுருவலை தடுக்க அதி விரைவு ரோந்து கப்பல்



(திருவனந்தபுரம்)

நவீன வசதிகள் கொண்ட ரோந்து கப்பல் ஒன்று, கேரள கப்பல் படைக்கு வழங்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலம் விழிஞ்சத்தில் துறைமுகம் உள்ளது.

இங்கு கப்பல்படைக்கு சொந்தமான கப்பல்கள் மூலம் ரோந்து பணிகள் நடந்து வருகிறது.

கடல் வழியாக தீவிரவாதிகள் ஊடுருவலை தடுக்கவும், கடலில் மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் எதிர்பாராதவிதமாக நடுக்கடலில் இயற்கை சீற்றத்தில் சிக்கி தவிக்கும் போது அவர்களை மீட்கவும் படகுகள் மூலம் கப்பல் படையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இந் நிலையில் விழிஞ்சத்தில் துறைமுகத்திற்கு 'சி-407' என்ற அதிநவீன ரோந்து கப்பல் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

நவீன வசதிகள் அனைத்தும் கொண்ட இந்த கப்பல் அதிவிரைவாக செல்லக்கூடியது ஆகும்.

இந்த கப்பலில் 54 வீரர்கள் இருப்பார்கள். கப்பலை சுற்றி 14 நவீன எந்திர துப்பாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த கப்பலை மத்திய கப்பல் படை அதிகாரிகள் விழிஞ்சம் கப்பல் படை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இந் நிகழ்ச்சியில் கேரள பொலிஸ் டி.ஜி.பி. பாலசுப்பிரமணியன் உட்பட கப்பல் படை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தீவிரவாதிகள் கடல் வழியாக ஊடுருவுவதை தடுக்க இக்கப்பல் பயன்படுத்தப்படும்.

# இந்தியாவின் முன்னாள் புலனாய்வு அதிகாரி தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமனம்



இந்தியாவின் முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரி அஜித் டொவால், புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர்பான அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியாகியுள்ளது. டொவால், இந்தியாவின் பாதுகாப்பு நிபுணராக கருதப்படுகிறார்.

டொவலை பொறுத்தவரை அவர் உள்ளக பாதுகாப்பு விடயங்கள் மாத்திரமின்றி வெளிநாட்டு பாதுகாப்பு விடயங்களிலும் பரீட்சமானவர்.

பயங்கரவாத தடுப்பு விடயங்களிலும் எல்லைப்பாதுகாப்பு விடயங்களிலும் அவர் முக்கியமானவராக உள்ளார்.

எனவே, அவரின் நியமனம் முக்கியமானதாக கருதப்படுகிறது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்ற பதவியை பொறுத்தவரையில் இலங்கைப் பிரச்சினையில் அது முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

காங்கிரஸின் ஆட்சியில் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த சிவ் சங்கர் மேனன், இலங்கையின் இனப்பிரச்சினை மற்றும் பாதுகாப்பு பிரச்சினை என்பவற்றில் முக்கிய பங்கை ஆற்றினார்.

டொவால், 1968 ஆம் ஆண்டின் ஐபிஎஸ் அதிகாரியாக கேரளாவில் பணியில் சேர்ந்தார்.

1988 ஆம் ஆண்டு இந்தியாவின் கீர்த்தி சக்கர என்ற இரண்டாவது பெருமைக்குரிய விருதை பெற்ற முதல் பொலிஸ் அதிகாரியாக கருதப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றுப்போனதா தமிழகம்?



பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதும், தமிழ் நாட்டிலிருந்து கடுமையான எதிர்ப்புகள் கிளம்பியிருந்தன. இந்த அழைப்பை இரத்துச் செய்ய வேண்டும் என்று தமிழ் நாட்டின் பெரும்பாலான அரசியல் கட்சிகள் குரல் எழுப்பியிருந்தன.

இதுவரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஏனைய இலங்கை அரசாங்கத் தலைவர்களுக்கும் செங்கம்பளம் விரித்து வரவேற்று வந்த காங்கிரஸ் கட்சியின் புதுடெல்லியில் உள்ள பேச்சாளரும் முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசனும் கூட, இந்த அழைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தமை விந்தைதான். தமிழ் நாட்டின் பிரதான கட்சிகள் அனைத்துமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விடுக்கப்பட்டிருந்த அழைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், அதை மீளப்பெறவும் வலியுறுத்தியிருந்தன. ஆனால், அந்த எதிர்ப்புகள் எதையும் பாரதிய ஜனதாக் கட்சித் தலைமை பொருட்படுத்தவில்லை. தமது முடிவில் பா.ஜ.க.தலைமை உறுதியாக இருந்தது.

அதன் காரணமாக தமிழ் நாட்டில் உள்ள கூட்டணிக்கட்சிகள் மட்டுமின்றி, பா.ஜ.கவினது பல்வேறு நண்பர்களும்கூட பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்கவில்லை. இவ்வாறு கலந்துகொள்ளாமல் புறக்கணித்தவர்களில் தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதா, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச்செயலர் வைகோ, நடிகர் ரஜினிகாந்த், தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர் விஜயகாந்த் உள்ளிட்டோர் முக்கியமானவர்கள். இந்தச் சம்பவம் ஒரு விடயத்தை தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளது. அதாவது, இலங்கைப் பிரச்சினை விவகாரத்தில் புதுடெல்லியின் மீதான தமிழ்நாட்டின் அழுத்தங்கள் இனிவரும் காலத்திலும் குறையப் போவதில்லை என்பதே அது.

காங்கிரஸ் கூட்டணியின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டின் தாளத்துக்கு மன்மோகன் சிங் அரசாங்கம் ஆட்டம் போடுவதாகவும் அதனால் இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை சீரழிந்து போய்விட்டதாகவும் சில தரப்பினர் நெடுங்காலமாக குற்றஞ்சாட்டி வந்தனர். இப்படியான நிலையில் நரேந்திர மோடி அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் தனிப்பெரும்பான்மை பலம் கிடைத்த போது, இனிமேல் இந்திய அரசின் முடிவுகள் மீது தமிழ்நாடு செல்வாக்குச் செலுத்த முடியாது என்றே இலங்கை அரசாங்கம் கருதிக்கொண்டது. அத்தகையதொரு நிலைமை பரீட்சிப்பதற்கான வாய்ப்பும் இலங்கை அரசாங்கத்துக்கு உடனேயே கிடைத்துவிட்டது.

அதாவது அயல் நாடுகளின் தலைவர்களுக்கு பதவியேற்பு நிகழ்வுக்கு அழைப்பு விடுக்கும் நரேந்திர மோடியின் முடிவையடுத்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் நிகழ்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதையடுத்தே தமிழ்நாட்டில் எதிர்ப்புகள் கிளம்பியிருந்தன. இது இலங்கை அரசுக்கு எதிரான உணர்வுகள் தமிழ்நாட்டில் அடங்கி விடவில்லை என்பதை எடுத்துக் காட்டியிருந்தாலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை புது டெல்லிக்கு வர விடாமல் தடுக்க முடியவில்லை.

அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை புதுடெல்லிக்கு வரவிடாமல் தடுப்பதில் தமிழக அரசியல் கட்சிகள் தோல்வியைச் சந்தித்துள்ள போதிலும், இலங்கை விவகாரத்தில் மத்திய அரசாங்கத்தின்மீது தமிழகம் செல்வாக்குச் செலுத்தத்தக்க நிலையில் இல்லை என்ற இலங்கை அரசாங்கத்தின் கருத்து முற்றிலும் உடன்பாடானது என்று கூற முடியாது.

இப்போதுதான், இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையிலான புதிய ஆட்டம் தொடங்கியிருக்கிறது. முன்னரெல்லாம் தமிழ் நாட்டிலிருந்து கிளம்பும் எத்தகைய எதிர்ப்பையும் இலங்கை அரசாங்கம் கண்டுகொள்ளாதது போலவே பதிலளிக்கும். இந்திய மத்திய அரசுக்கும் தமக்கும் இடையில்தான் உறவு என்றும் மாநில அரசு பற்றித் தாம் கவலைப்படவோ, கருத்துக் கூறவோ போவதில்லை என்றும் அரசாங்கம் கூறி வந்தது நினைவில் இருக்கலாம். ஆனால், தேர்தல் முடிவுகள் வெளியாகி நரேந்திர மோடி அரசாங்கத்துக்கு தனிப்பெரும்பான்மை பலம் கிடைத்துவிட்டது என்றவுடன், இனித் தமிழகத்தின் ஆதிக்கம் புதுடெல்லியில் இருக்காது என்று நிம்மதி தெரிவித்திருந்தார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

அவரேதான், முன்னர் தமிழ்நாட்டைப் பற்றியெல்லாம் இலங்கை அரசாங்கம் கவலைப்படவில்லை என்று கூறியிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. எப்போதுமே இலங்கை அரசாங்கத்தினால் தமிழகத்தையிட்டுக் கவலைப்படாமல் இருக்க முடியாது. ஏனென்றால், இலங்கை குறித்த ஒட்டுமொத்த இந்தியாவுடனான கொள்கைகளில் அது செல்வாக்குச் செலுத்தக்கூடிய அமைவிடத்தில் உள்ளது. இந்தியாவின் வடக்கிலோ அல்லது கிழக்கிலோ, மத்திய பகுதியிலோ தமிழ்நாடு இருந்திருந்தால் இலங்கை விவகாரத்தில் தமிழகத்தின் கருத்து அவ்வளவுக்கு செவிமடுக்கப்படாமல் போகலாம். ஆனால், இலங்கைக்கு மிக நெருக்கமாக இந்தியாவின் கடைசி எல்லையாக தமிழ்நாடு அமைந்திருப்பதால், இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் உள்ள தமிழர்களுக்கு இடையில் வரலாற்றுக்கு முந்திய காலம் தொடக்கம் தொடர்புகள் இருந்து வருவதால், தமிழ்நாட்டையிட்டு இலங்கை ஒருபோதும் கவலைப்படாமல் இருக்க முடியாது. நரேந்திர மோடி அரசாங்கத்துக்கு தனிப்பெரும்பான்மை கிடைத்துவிட்டதால், இலங்கை விவகாரத்தில் தமிழ்நாட்டின் அழுத்தங்களுக்கு அடிபணியாது என்ற கருத்து இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

இங்கு அடிபணிதல் என்பதைவிட, அதற்கு அப்பாற்பட்ட இராஜதந்திரம் ஒன்று உள்ளதென்பதை மறுக்க முடியாது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதுடெல்லிப் பயணத்தைத் தடுக்க முடியாமல் போனது, தமிழ் நாட்டின் அழுத்தங்களுக்குக் கிடைத்த தோல்விதான். ஆனால், இதில் வெற்றி காணமுடியாது என்பது தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளுக்குமே தெரியாமல் போயிருக்காது.. ஆனாலும், இந்த விவகாரத்தில் மத்திய அரசாங்கம் இணக்கத்துக்கு வராது என்று தெரிந்திருந்தும், அவை தமது முடிவிலும் பிடியிலும் உறுதியாக நின்று எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்த அழைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மட்டுமான தனிப்பட்ட அழைப்பு அல்ல. அயலில் உள்ள அனைத்து நாடுகளுக்கானது, சார்க் நாடுகளின் தலைவர்களுக்கானது. இப்படியானதொரு முடிவை எடுக்கும் போது, இந்திய அரசாங்கம் ஒருபோதும் இலங்கையை விலக்கி வைக்க முடியாது. அதுபோலவே தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் கோரியதுபோல, விடுக்கப்பட்ட அழைப்பை இரத்துச் செய்யவும் முடியாது. இவை இரண்டையும் புதுடெல்லி செய்திருந்தால், இரு நாடுகளுக்கும் இடையில் தீராப்பகையாக உருவெடுத்திருக்கும். கிட்டத்தட்ட அது மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிரான நரேந்திர மோடி அரசாங்கத்தின் போர்ப் பிரகடனம் போலவே இருந்திருக்கும்.

ஏற்கனவே இந்தியாவுக்கு பாதுகாப்பு ரீதியாக சவால்விடும் நாடுகளான பாகிஸ்தானுடனும் சீனாவுடனும் இலங்கை நெருக்கமான உறவுகளை வைத்துக் கொண்டுள்ள நிலையில் பதவியேற்பு நிகழ்வுக்கு இலங்கைக்கு மட்டும் அழைப்பு விடுக்காமல் போயிருந்தால் அது பாரதூரமான விவகாரமாக மாறியிருக்கும். அதுபோலவே விடுக்கப்பட்ட அழைப்பை இரத்துச் செய்திருந்தால், அது பாரிய இராஜதந்திர அவமதிப்பாக மாறியிருக்கும். அண்டை நாடுகளுடனான வெளிவிவகாரக் கொள்கையை மன்மோகன் சிங் அரசாங்கம் தவறாக கையாள்வதாக குற்றஞ்சாட்டிய நரேந்திர மோடி, அதே தவறுக்குத் தாமும் துணைபோவதை ஒருபோதும் விரும்பமாட்டார். அயல் நாடுகளுடன் நட்புறவு கொண்டு இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் என்பதே நரேந்திர மோடி அரசாங்கத்தின் கொள்கையாகத் தெரிகிறது.

மன்மோகன் சிங் ஆட்சிக் காலத்தில் சீர்கெட்டுப் போயிருந்த அயல் நாடுகளுடனான உறவுகளை புதுப்பித்துக் கொள்வதற்கே, நரேந்திர மோடி தனது பதவியேற்புக்கு எல்லா சார்க் நாடுகளின் தலைவர்களையும் அழைத்திருந்தார். அவரது இந்த இராஜதந்திரத்துக்கு இப்போதைக்கு கை மேல் பலன் கிடைத்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட சூழலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்காமல் தவிர்ப்பதோ, அழைப்பை இரத்துச் செய்வதோ புதுடெல்லியால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இது தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளின் தலைவர்களுக்குத் தெரியாத விவகாரம் அல்ல. ஆனால், இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அவை கொண்டுள்ள நிலைப்பாடுகளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்ப்பு உணர்வும் போராட்டங்களை நடத்தவும் எதிர்ப்பைத் தெரிவிக்கவும் நிகழ்வைப் புறக்கணிக்கவும் காரணமாகின. எவ்வாறாயினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வருகையைத் தடுக்க முடியாது போனாலும், இலங்கை விவகாரத்தில் தமிழ்நாட்டின் விருப்பங்களுக்கு மாறாக இந்திய மத்திய அரசு நடந்து கொள்ள முற்படக்கூடாது என்ற கருத்து நரேந்திர மோடி அரசுக்கு இதன்மூலம் தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதுவும் இந்த விவகாரத்தில் தமிழ்நாட்டில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஒரே நிலைப்பாட்டில்தான் உள்ளன என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, நரேந்திர மோடி அரசாங்கத்துக்கு இதுவொரு மறைமுக அழுத்தமாகவே அமைந்துள்ளது. வெளிநாடு ஒன்றுடனான உறவில் உள்நாட்டு அழுத்தங்களுக்கு இடம்கொடுப்பதில்லை என்ற நிலைப்பாட்டை மோடியின் அரசினால் அவ்வளவு இலகுவாக எடுக்க முடியாது. சுப்பிரமணியன் சுவாமி போன்ற இலங்கை அரசுக்கு ஆதரவான சிலர் வெளிவிவகாரக் கொள்கையில் உள்நாட்டுத் தலையீடுகளுக்கு இடம் கொடுக்க முடியாது என்றும் அது முற்றிலும் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரம் என்றும் கூறுகின்றனர். இங்கு அதிகாரம் என்பதல்ல பிரச்சினை. உள்நாட்டு மக்கள் கொடுத்த ஆணையிலிருந்தே மத்திய அரசுக்கான அதிகாரம் பிறந்தது. எனவே உள்நாட்டு மக்களின் விருப்பங்களையும் அரசாங்கம் புறக்கணிக்க முடியாது. அதைவிட வெளிநாட்டு உறவுகளுக்காக உள்நாட்டு உறவுகளை குலைத்துவிடவும் முடியாது.

அதுவும் 37 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தமிழ் நாட்டின் ஆட்சியையும் வைத்துக் கொண்டிருக்கின்ற அ.தி.மு.க. போன்ற கட்சிகளை அவ்வளவு இலகுவாக நரேந்திர மோடியாலோ பா.ஜ.க. அரசினாலோ உதறித் தள்ளிவிட முடியாது. அது மத்திய-மாநில அரசாங்கங்களுக்கு இடையில்தான் விரிசலை ஏற்படுத்தும். தென்மாநிலங்களில் காலூன்றத் தடுமாறும் பா.ஜ.கவுக்கு இது போன்ற விரிசல் ஏற்படுவது பின்னடைவை ஏற்படுத்தும். தமிழகத்துடனான உறவு என்பது நரேந்திர மோடிக்கு அவசியம் என்பதால் இலங்கை விவகாரத்தில் தமிழ் நாட்டின் விருப்பங்களை அவரால் புறக்கணித்துச் செயற்பட வழியில்லை. தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும் இந்த விவகாரத்தில் உள்ள சிக்கலைப் புரிந்துகொண்டுள்ளதால்தான் நரேந்திர மோடிக்கு எதிராகவோ, பா.ஜ.க. அரசா ங்கத்துக்கு எதிராகவோ போராட்டங்களை நடத்தவோ, அறிக்கைகளை வெளியிடவோ இல்லை.

மத்திய அரசுடன் இணங்கிப் போய்த்தான் அதனைக் கையாள வேண்டும் என்று தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள் புரிந்து கொண்டிருப்பதால், தந்திரமான முறையில் காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளன.

எனவே, காங்கிரஸ் அரசாங்கத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் ஏற்பட்டிருந்தது போன்ற இடைவெளி இம்முறை ஏற்பட வாய்ப்பில்லை. அவ்வாறானதொரு இடைவெளி ஏற்பட்டால்தான், அது இலங்கைக்கு வெற்றியாகும். நரேந்திர மோடி அரசாங்கம் நாடாளுமன்றத்தின் ராஜ்ய சபையில், போதிய பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருக்கவில்லை. எனவே, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் தயவு எப்போதும் மத்திய அரசுக்குத் தேவைப்படுகிறது.

அதுவும் பா.ஜ.கவின் கொள்கைகளை கடுமையாக எதிர்க்கும் மேற்கு வங்காள அரசு போன்றவற்றுடன் ஒப்பிடுகையில், தமிழ் நாட்டின் ஜெயலலிதா அரசாங்கத்தின் ஆதரவைப் பெறுவது ஒன்றும். பா.ஜ.கவுக்கு அவ்வளவு சிரமமான காரியமில்லை. எனவே, தமிழ்நாட்டு அரசாங்கத்துடன் உறவைக் கெடுத்துக்கொள்ள மத்திய அரசு விரும்பாது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விடுக்கப்பட்ட அழைப்பினால், மத்திய- மாநில அரசுகளுக்கு இடையில் நல்லுறவு கட்டியெழுப்பப்படுவதற்கான ஒரு வாய்ப்பு தவறவிடப்பட்டுள்ளதாக ஜெயலலிதா சுட்டிக்காட்டியிருந்தார். எனவே, தமிழ்நாடும் அந்த உறவுக்குத் தயாராகவே உள்ளது.

இலங்கை அரசுக்கு சார்பான முடிவுகளை மத்திய அரசாங்கம் தன்னிச்சையாக எடுக்க முடியாது என்றே கருதலாம். இப்படியான நிலையில், தமிழ்நாட்டின் எதிர்ப்பை குறைத்து இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமக்குள்ள அக்கறையை வெளிப்படுத்தி, சமநிலையை பேணுவதான தோற்றத்தை உருவாக்க நரேந்திர மோடி சில முன்னகர்வுகளை மேற்கொள்ளலாம். அதற்கு அவர் தமிழத் தேசியக் கூட்டமைப்புக்கு கூடிய விரைவில் அழைப்பு விடுத்து அவர்களைச் சந்திக்கக் கூடும். அதற்கான சாத்தியங்கள் புதுடெல்லியில் உள்ளதாகவே தெரிகிறது.

அதேவேளை, இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை நரேந்திர மோடி ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால், 'அவர் எப்போது, எப்படி இலங்கைக்கு செல்வார் என்பது புதிய சர்ச்சையாக உருவெடுக்கும்.

மன்மோகன் சிங் பத்தாண்டு பதவிக் காலத்தில் 1998 இல் ஒரேயொரு முறை அதுவும் சார்க் மாநாட்டுக்காகவே கொழும்பு வந்திருந்தார். பலமுறை இலங்கை அரசாங்கம் அழைத்தும் அவர் தனிப்பட்ட, அதிகார பூர்வ பயணத்தை மேற்கொள்ளவில்லை. பொதுநலவாய மாநாட்டின் போதும் தமிழ் நாட்டின் எதிர்ப்புகளால் கொழும்பு செல்லவில்லை. இந்தநிலையில், இலங்கை விவகாரத்தில் நரேந்திர மோடி அரசாங்கம் எப்படிச் செயற்படப்போகிறது என்று முடிபுகட்ட இன்னொரு வாய்ப்பு உருவாகியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று உடனடியாகவே கொழும்பு செல்ல நரேந்திர மோடி முடிவெடுத்தால், அவர் தமிழ்நாட்டை உதாசீனப்படுத்துகிறார் என்றோ, இலங்கை அரசுக்கு சார்பாக மாறிவிட்டார் என்றோ உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். மாறாக மன்மோகன் சிங் போல, இவரும் கொழும்புப் பயணத்தை இழுத்தடித்தால், கூடிய விரைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக சவுத் புளொக்கின் கதவுகள் திறக்கப்பட்டால், மத்திய அரசின் மீதான தமிழ்நாட்டின் செல்வாக்கு அல்லது பிடி தளர்ந்து போகவில்லை என்பதை இப்போதைக்கு உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

-கே. சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்து சம்மேளனம் நடத்தும் கட்டுரை, கவிதை போட்டி

அகில இலங்கை இந்து சம்மேளனம் (HINDFOS) நடத்தும் கவிதை, கட்டுரை போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய இறுதித் திகதி நீடிக்கப்பட்டு 28.07.2014 என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மேற்படி சம்மேளனம் அறிவித்துள்ளது.

அத்துடன் ஆக்கங்களுக்கான புதிய தலைப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி நிபந்தனைகளாக இந்த திறந்த போட்டிக்கு ஒருவர் எத்தனை ஆக்கங் களை வேண்டுமானாலும் அனுப்பி வைக் கலாம்.

ஆக்கங்களை அனுப்புபவர் தனது பெயர், முகவரி, செல்லிடப்பேசி இல. மின்னஞ்சல் முகவரி, தொழில் விபரம் போன்றவற்றை தனித்தாளில் எழுதியோ தட்டச்சு செய்தோ ஆக்கத்துடன் இணைந்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆக்கங்களை அனுப்பும் மாணவர்கள் அதிபரின் கையொப்பத்துடன் அனுப்பிவைப்பது சிறந்தது. பல்கலைக்கழக மாணவர்களாயின் உறுதிப்படுத்தல் அவசியம் இல்லை.

### கட்டுரை தலைப்புக்கள்

ஆறுமுக நாவலரும் திருக்கேதீஸ்வரம் புனர்நிர்மாணமும் (1500-2000 சொற்கள்), ஆறுமுக நாவலரின் மதமாற்றத்திற்கெதிரான கண்டனப் பேருரைகள் (1500-2000 சொற்கள்), போர்த்துக்கேயர்கள் முதல் ஆங்கிலேயர் வரை இந்துக்கள் மீதான அடக்குமுறைகளும் அவற்றில், இருந்து இந்துக்கள் மீண்டெழுந்த வரலாறும் (1500-2000 சொற்கள்), சுவாமி விவேகானந்தர் மதமாற்றம் தொடர்பாக ஆற்றிய உரைகளின் தொகுப்பு (800-1000 சொற்கள்), கடந்த 1200 வருடங்களாக பாரதத்தில் இடம்பெற்ற மொகல்லாயர்களின் படையெடுப்பின் போது, இந்துக்கள் மீது நடைபெற்ற கொடூரங்களும் மனித வுரிமை மீறல்களும் (1500-2000 சொற்கள்), இந்து சமயத்தில் இருக்கின்ற அளவுக்கதிகமான சுதந்திரமும் ஜனநாயகத்தன்மைகளும் காரணமாக ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள்/பின்னடைவுகள் (800- 1000 சொற்கள்), ஆறுமுக நாவலரின் இந்து சமூக சமய பணி (800-1000 சொற்கள்), இந்துக்களை திட்டமிட்டு மதம் மாற்றும் பன்னாட்டு அரசசார்பற்ற மற்றும் சமய நிறுவனங்களின் முயற்சியை முறியடித்தல் (900-1100 சொற்கள்) என்பனவாகும்.

### கவிதைப் போட்டி

ஹைகூ நடைசாரா கவிதையாயிருத்தல் வேண்டும், புதுக்கவிதை, மரபுக்க விதை ஆகிய இரண்டு வடிவங்களிலும் எழுதலாம், பிறமொழி சொற்களின் கலப்பு ஏற்றுக் கொள்ளப்படும், கவிதை நான்கு வரிகளுக்கு குறையாத அல்லது நான்கு வரிகளுக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

### கவிதை தலைப்புக்களாக

மதமாற்றம் எனும் தீ...., வீரசிவாஜி பிறந்திராவிட்டால்!, சாதியை விரட்டுவோம்!, 1000 ஆண்டு அடிமையாய் போன பாரதமே!, ஓ இந்துப் பெண்ணே!, ஏ.... வீர விவேகானந்தா என்பவாகும்.

தெரிவு செய்யப்படும். 40 வெற்றியாளர்கள் தமிழகத்தில் வைத்து விருது வழங்கி கௌரவிக்கப்படுவர். ஆக்கங்களை போட்டி ஒருங்கிணைப்பாளர், நா. அருண்காந்த் ஜீ, இல. 103/2, மஹா வித்தியாலய மாவத்தை, கொழும்பு- 13 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக விபரங்களை 0774936997 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக் கொள்ளலாம். (அ)

# மாநாடு தொடர்பில் இணையத்தில் பார்வையிடலாம்

முதலாவது சர்வதேச சுதேச மருத்துவத்துறை ஆய்வு மாநாடு கம்பஹா விக்கிரமராட்சி. ஆயுள்வேத நிறுவனத்தினால் 24.07.2014-26.07.2014 வரை நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக மேலதிக தகவல்களை www.kln.ac.lk/institutes/wickramarachchi/index.php/symposium.html எனும் இணையத் தளத்தில் பார்வையிடுமாறு வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் டாக்டர் திருமதி சி.துரைரட்ணம் கேட்டுள்ளார். (அ)

# மதக் கடும் போக்குவாதத்தை மக்கள் எதிர்க்கின்றனர்


## பிரித்தானிய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

மதக் கடும்போக்குவாதம் தொடர்பில் இலங்கை மக்கள் அதிருப்தியடைந்துள்ளதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார். ஜோன் ரான்கீன் வடமத்திய, வடமேல் மாகாணங்களுக்கு விஜயம் செய்து மக்களை நேரடியாக சந்தித்திருந்தார். மதக் கடும்போக்குவாதத்தை அனைத்து மக்களும் எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ளார். மதங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு நாட்டின் நல்லிணக்க முனைப்புக்களுக்கு உதவியாக அமையும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஸ்ரீமஹாபோதி, ருவான்வெலிசேயா, திருக்கேதீஸ்வரம், புத்தளம் பெரிய பள்ளிவாசல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய மத வழிபாட்டுத் தலங்களுக்கு விஜயம் செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் மக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனப்பணியாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள் உள்ளிட்ட பலரையும் சந்தித்து அவர்களின் கருத்துக்களையும் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளையும் அறிந்து கொண்டதாகத் தெரிவித்துள்ளார். இந்தப் பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுத் திட்டங்களை வழங்க பிரித்தானியா தொடர்ச்சியாக இலங்கைக்கு ஒத்துழைப்ப வழங்கும் என ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார். (2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815, 021 567 1532



யாழ். மல்லாகம் நீதவான் முகாமில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை முற்போக்கு தமிழ்த் தேசிய கட்சி பொதுச் செயலாளர் விஜயகாந்த் வழங்குவதைப் படத்தில் காணலாம். இவ் உதவிகளை புலம் பெயர் தமிழரான டேவிட் ராஜ்குமார் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிட த்தக்கது

(படம்: மானிப்பாய் செய்தியாளர்)

# நலன்புரி நிதியம் உருவாக்க 50 மில்லியன் நிதியொதுக்கீடு

(கொழும்பு)

ஓய்வுநிலை ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு உதவுவதற்காக நலன்புரி நிதியமொன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நிதியத்துக்கு ஆரம்ப கையிருப்பாக 50 மில்லியன் ரூபா வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினூடாக ஒதுக்கப்படவுள்ளது.

முழு நேரம் பங்களிப்பு செய்து ஓய்வுபெற்ற ஊடகவியலாளர், கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு இந்த நிதியத்தினூடாக உதவிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்நிதியத்திற்கு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்திற்கு கிடைக்கும் வருமானத்தில் 10 வீதத்தையும் தாமரைத் தடாகம் மஹிந்த ராஜபக்ஷ அரங்கினூடாகக் கிடைக்கும் வருமானத்தில் 10 வீதத்தையும் வழங்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கான சட்டம் தயாரிக்கும் பணியை சட்டவரைஞர் திணைக்களத்துக்கு வழங்கவும் அமைச்சரவை அனுமதி அளித்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார். (2)

# வாரம் ஒரு தகவல்

## முட்டைகள் பலவிதம்

மாணவர்களே! இன்றைக்கு முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் விலங்கினங்களைப் பற்றிப் பாடம் நடத்தப் போகிறேன். அதற்கு முன் உங்களிடம் ஒரு கேள்வி....

“கேளுங்கள் சேர்.”

“குஞ்சு பொரிக்காத முட்டையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?”

“பார்த்திருக்கிறோம் சேர் ”

“எங்கே ? ”

எங்கள் பரீட்சைத் தாளில் நீங்கள் போடுற முட்டையெல்லாம் குஞ்சு பொரிக்கிறதில்லை சேர். ”

“தமாஷான பிள்ளைகள். நான் பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் ஒரு முட்டையைப் பற்றிச் சொல்லப் போகிறேன்!. “சொல்லுங்கள் சேர்”

“இருதய நோய் உள்ள நோயாளிகள் சாப்பிடுவதற்கு அவுஸ்திரேலியாவில் கொலஸ்ரோல் இல்லாத முட்டையொன்றை கண்டு பிடித்திருக்கிறார்களாம்”

“ அது எப்படியிருக்கும்? ”

“அதில் மஞ்சட்கரு இருக்காது. சாதாரண முட்டையில் உள்ளதை விட 90 சதவீதம் கொலஸ்ரோல் குறைவாக இருக்கிறதாம்.

“இது ஒரு நல்ல கண்டுபிடிப்பு தான் சேர்.

சரி...பாடத்தை ஆரம்பிக்கலாமா?“ஆரம்பிக்கலாம் சேர். ”

“அதற்கு முன் உங்களிடம் இன்னொரு கேள்வி கேட்கப் போகிறேன்”

“கேளுங்கள் சேர். ”

“கோழி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கிறது. ஒட்டகம் ஏன் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதில்லை? யாருக்காவது பதில் தெரியுமா? ”

“அது ஒட்டகத்துக்கே தெரியும் சேர்.”

“என்ன தெரியும்”

“தான் முட்டை போட்டால், போடும் போதே அது தரையில் விழுந்து உடைந்து விடும் என்று ”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவங்கள்

(கரணவாய்)

கப்பூதூ நுணுப் பாவளை காட்டுக் கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக் கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெற்று 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய பரி பாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2-60)

✔ ✔ ✔ ✔ ✔ ✔

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற் சவம் நாளை திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும்.

இதற்கமைய, எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு சப் பறத் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

மஹோற்சவ காலத்தில் காலை 9 மணிக் கும் மாலை 5.30 மணிக்கும் வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (2)

# ஆய்வுகூடங்கள் இல்லாத நிலையில் ஆயிரம் பாடசாலைகள் உள்ளன

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

**கல்விப் பொது தராதர (உ/த) பரீட்சை வினாப்பத்திரங்களை தயார் செய்யும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் சிலரை நீக்கி தனக்கு சார்பானவர்களை கல்வி அமைச்சர் பந்துல குண வர்த்தன நியமித்துள்ளதாக ஐ.தே.க.வின் குருணாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் குற்றம் சுமத்தியுள்ளார்.**

ஐ.தே.கட்சியின் தலைமையகமான சிறி கொத்தாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகை யில்,

கல்விக்கான நிதியொதுக்கீடுகளை குறைப் பதற்கு காரணமாக அமைந்த சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு மேற்கொண் டுள்ள உடன்பாடுகள் தொடர்பிலான உண்மை தன்மையை எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க விரைவில் வெளியிடுவார்.

அதேபோன்று நாட்டில் தற்போது கல்வித் துறை ஊழல்கள் நிறைந்ததொன்றாக மாற றப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்து டன் உடன்பாடொன்றை மேற்கொண்டு இலவச கல்வி முறையினை சீரழிப்பது தொடர்பிலான கருத்துக்களை எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளி யிட்டிருந்தார்.


இதற்கமைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பட்டு கல்விக்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதித் தொகையை குறைத்து வருகின்றது. ஆறு சதவீதமாக கல்விக்கு ஒதுக்கிடப்பட்ட வீதமானது தற் போது நான்கு சதவீதமாக குறைக்கப்பட் டுள்ளது.

அத்துடன் பாடசாலைகளின் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு அரசினால் உரிய வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாத காரணத்தினால் பெற்றோர்களே தமது பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக உழைத்ததில் ஒரு பங்கை பாடசாலையின் மேம்பாட்டுக்கு செலவிடுகின்றனர்.

இதன் காரணமாக தற்போது நாட்டில் மின்சார வசதிகள், நீர் வசதிகள், இரசாயன கூடங்கள் இல்லாத ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் காணப்படுகின்றது. இதற் கான மூல காரணம் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்ட உடன் பாடுகளே ஆகும்.

இதேவேளை கல்விப் பொதுத்தராதர (உ/த) பரீட்சை வினாப்பத்திரங்களை தயார் செய்யும் பல்கலைக்கழக பேராசிரியர்களை அப்பதவியிலிருந்து கல்வி அமைச்சர் நீக்கி யுள்ளார்.

இதற்கமைய பொருளியல் துறை சார்ந்த வினாப்பத்திரத்தை தயார் செய்யும் குழுவின் சிரேஷ்ட பேராசிரியரான டெனி அத்துபத் துவை நீக்கியதுடன் இன்னும் சிலரையும் நீக்கியுள்ளார் என அவர் குற்றம் சாட்டி யுள்ளார். (2)



அளவெட்டி அலுக்கை நாவலடி ஞான வைரவர் ஆலய மணிக் கூட்டுக் கோபுர கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது கலசம் வைக்கப்படுவதை படத்தில் காணலாம்.

# இலங்கையில் பாரியளவில் போசாக்கு பிரச்சினை

## ஐ.நா. முகவர் நிறுவனம் தெரிவிப்பு

இலங்கை பாரியளவில் போசாக்கு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் களுக்கான முகவர் நிறுவனம் தெரிவித் துள்ளது.

சிறுவர்களும் பெண்களும் பாரியள வில் போசாக்கு பிரச்சினைகளை எதிர் நோக்கி வருவதாக எச்சரிக்கை விடுத் துள்ளது.

இரும்புச் சத்து குறைபாட்டினால் ஏற் படக் கூடிய அனிமியா எனும் நோயினால் அதிகளவான பெண்களும் சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

மூன்றில் ஒரு சிறுவர்களும், நான்கில் ஒரு பெரியவர்களும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாலர் பாடசாலை செல்லும் மாணவ மாணவியரும் கர்ப் பிணித் தாய்மார்களுமே அதிகளவில் இந்த நோயினால் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனிமியாவால பாதிக்கப்பட்ட கர்ப்பிணி களுக்கு பிறக்கும் குழந்தைகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவ தாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஞாபகசக்தி குறைபாடு, குறைந்த எடை, வளர்ச்சிப் பிரச்சினை என பல் வேறு நோய்களுக்கு இரும்புச் சத்து குறை பாடு ஏதுவாகின்றது என அறிவிக்கப்பட் டுள்ளது. (2)

# புலிச்சந்தேக நபரின் கடவுச்சீட்டை தூதரக அதிகாரிகளே புதுப்பித்தனர்

தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர் என கூறப்படுபவரின் கடவுச் சீட்டை கோலா லம்பூருக்கான இலங்கைத் தூதரக அதி காரிகள் புதுப்பித்துக் கொடுத்துள்ளனர்.

காலாவதியான கடவுச் சீட்டை இல ங்கைத் தூதரக அதிகாரிகளிடம் வழங்கி புதுப்பித்துக் கொண்டதாக குறித்த புலிச் சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் படைப் பிரிவு இரண்டாம் நிலைத் தலைவ ராக கருதப்படும் குசாந்தன் எனப்படும் முள்ளிச்செல்வம் என்பவரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடவுச் சீட்டை புதுப்பித்துக் கொடுத்த தூதரக அதிகாரிகள் குசாந்தனை அடை யாளம் காணவில்லை என சிங்களப் பத்தி ரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மலேசிய பயங்கரவாதத் தடுப்புப் பிரி வினரே குசாந்தனை கைது செய்துள்ளனர்.

இவர் உள்ளிட்ட மூன்றுபேரை கடந்த 15 ஆம் திகதி மலேசிய அதிகாரிகள் கைது செய்ததுடன், கடந்த 25 ஆம் திகதி இவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

குறித்த மூன்று பேரிடமும் பயங்கரவாதத் தடைப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர். (2)

# வாஸின் வழக்குத்தீர்ப்பு செப்டெம்பர் மாதம் 22 இல்

கொழும்பு வட பிராந்தியத்திற்கு பொறுப் பான முன்னாள் பிரதி பொலிஸ்.மா அதிபர் வாஸ் குணவர்தன, புலனாய்வுப் பிரிவினரை அச்சுறுத்தியமை தொடர்பிலான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி அறிவிக்கப்படும் என எதிர்பார் க்கப்படுகிறது.

புலனாய்வுப் பிரிவின் துணை பொலிஸ் அத்தியட்சகர் சானி குணவர்தன மற்றும் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களை வாஸ் குணவர்த்ன அச்சுறுத்தியதாகத் தெரிவித்து வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பிலான விசா ரணைகள் நேற்றுமுன்தினம் கொழும்பு உயர் நீதிமன்றில் நடைபெற்றது.

பிரபல வர்த்தகர் முஹம் சியாமின் படுகொலை தொடர்பில் வாஸ் குணவர்தன, அவரது புதல்வர் உள்ளிட்ட சிலரிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விசாரணைகளின் போது வாஸ் குணவர்தன, தமக்கும் சக அதிகாரிகளுக்கும் மரண அச்சுறுத்தல் விடுத்ததாக சானி அபேசேகர தெரிவித்துள் ளார்.

இந்த நிலையில் இவர் மீது சுமத்தப்பட்ட 6 குற்றச்சாட்டுகளுக்கு செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படுமென எதிர் பார்க்கப்படுகின்றது. (2)

# வீரவன்ச சிறந்த நடிகர்

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

தேசிய முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச ஒரு சிறந்த நடிகர் என ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஹிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் பிரதமராக மோடி பதவியேற் கும் முன்னரே அவரை இலங்கைக்கு வருகை தருமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்தது.

விமல் வீரவன்ச இரண்டு மூன்று கூட்டங்களை நடத்தி அரசாங்கத்தை விமர் சித்ததும், அவரது 12 யோசனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி சந்தர்ப்பம் வழங்கினார்.

வாக்குகள் பிரிந்து விடும் என்று ஜனா திபதி பயந்தார். விமல் அரசாங்கத்தில் இருந்து வெளியேற மாட்டார். அவர் ஒரு சிறந்த நடிகர்.

அரசாங்கத்திற்கு கெட்டகாலம் தொடங்கி விட்டது என்று புரிந்து கொண்ட விமல் இந்த நாடகம் நடிக்க ஆரம்பித்து விட்டார்.

மேலும் உண்மை எது, பொய் எது என்பதை விரைவில் அறிந்து கொள்ள முடியும் என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் களசம்

## வாள்களின் உறைவிடங்கள்

மரணங்களின்
குவியல் தகவல்களே
முழுவியளமாகின்றன
விடிகாலையில்
வெள்ளை வயற்பரப்புகளில்.

அச்சம்
அகலித்துப்போன
இதயங்களுக்குள்
மிச்சம் மீதியாய்
எதுவுமில்லை இப்போது
உயிர் ஒன்றைத் தவிர.

செப்புச் சன்னங்கள் பல
துயில் கொள்ளும் காலமதில்
வாள்களின் உறைவிடங்கள்
வரலாறு எழுதுகின்றன.
வன்ம உணர்வுகளுடன்.

மனிதத்தைத் தேடி
அலையும்
ஆத்மாக்களுக்கு நடுவில்
அரியாசனம் கொண்டிருக்கிறது
அராஜகம்
நீதிதேவனின்
பதிலறியா நிலையில்!

**அலெக்ஸ்பரந்தாமன்,**
**புதுக்குடியிருப்பு.**

## வடிவங்கள்

மரணத்தின்
மறுவடிவம்
நித்திரை!

வாழ்க்கையின்
நிழல் வடிவம்
சினிமா!

ஈர்ப்பின்
இன்னொரு வடிவம்
காதல்!

அறிவின்
கரு வடிவம்
கல்வி!

இணைவின்
பகை வடிவம்
பிரிவு!

ஒற்றுமையின்
முரண் வடிவம்
வேற்றுமை!

**விவேகானந்தனூர் சதீஸ்,**
**கிளிநொச்சி**

## திருமணப் பேச்சு

வனிதையர் வாழ்வுதனை
வளமாக்க என்று!
இருபத்தொரு வயதில் முளைவிடும்
திருமணப் பேச்சு!
முளைவிடும் போதே – மொட்டுகளுக்கு
ஆனந்தத்தோடு சேர்ந்து
கணவன் பற்றிய எதிர்பார்ப்பு!
பின்னர் அதுவே
அழகு, வரதட்சணை!
இரண்டும் இல்லாததால் அம்மொட்டு
அடுப்படிக்கு செல்கிறது.
மணப்பந்தலில் அமரும் வரை – எத்தனை
திருமணப் பேச்சு!
ஒவ்வொரு பேச்சும் – பெண்ணுக்கு
சோக செய்தியையே – சுமந்து வருகிறது!
இதனால் வாடுவது இளம் மொட்டுமட்டுமல்ல!
தாய்ப்பூவும்தான்!
முளைவிட்ட மொட்டு
எத்தனையாவது திருமணப் பேச்சில்
திருமணப் பூ ஆகப்போகிறது?

**V.தனா,**
**கோண்டாவில்.**

## இமயம் தொட...

நினைவுகள் எனும்
நூலிழையில்
சிக்கிக் கொள்
ஒவ்வொரு இழைகளிலும்
உன்னை ஒட்டிக்கொள்
உன் உணர்வுகளை
நீயே உசுப்பேற்றி
உனக்குள்ளேயே நீ எரி
சமூகத்திற்காய் சமூகமாய்...

மாவை.நா. கஜேந்திரன்

## ஒழிக...

அனைத்து மொழிகளும்
அழியட்டும்
மொழிக் கலவரம் எனும் பெயரால்
அழியும் உயிர்களைக் காப்பதற்கு...

**தி.அரன்றாஜ்,**
**அளவெட்டி.**

## நால் ஆட்சி

கொற்றவன் கொண்ட கொடுங்கோற் கஞ்சி;
உற்றவனுடன் நற்றவனும் நாடற்றவனாகினன்
'நாடென்ன நாடா வளர்த்தனன்'னென
வினவியதன் பலன்
நாயிற் கடையராகினன்.
கொற்றவனுடன் சில சிற்றவரும் சேர்ந்து
மற்றவர் பின் முற்றவரை அற்றவராக்கவே;
கொற்றவனும் பின் அற்றவனாகுவான்.

**மேகலைவன்.**

# மௌனத்தின் தேடல் - 206



## தோல்விகளின் தோழன்

வாழ்வின் வெற்றிக்காகப்
போராடும் சிறுவர்களே...!
தோல்விகளை உங்கள்
தோழனாக்கி விடுங்கள்
அப்போதுதான் வாழ்வின்
வெற்றிக்கு எதிரிகள்
இருக்கமாட்டார்கள்...!

இ.சிந்துஜன், தாவடி.

## ஒற்றுமை

அடம்பன் கொடியும்
திரண்டால் மிடுக்கு
உங்கள் ஒற்றுமையில்
தெரிகின்றது – நாளைய
உலகின் வளர்ச்சி.
சிரித்தவாறு செயற்படுங்கள்
உங்கள் கரங்களில்
நிச்சயம் வெற்றி...!

என்.அர்ச்சனா, நிதர்சன் கிறீம்கவுஸ்.

## துணிந்து நில்

இறுகக் கட்டியணைத்து
முறுவலிக்கும் சிறுவர்களே!
பொறுமையோடு நிதானமாக
உறுதியோடு தடைகளைத் தகர்த்து
வீறுநடை போட்டுத் துணிந்து
ஏறுங்கள் வெற்றிச் சிகரத்தில்
நூறு கரங்கள் உங்களைப்
பொறுப்போடு அணைக்கும்.

துரை, தென்மட்டுவில்.

## கரம் கோர்த்து விட்டோம்

வேம்பு வீழ்த்தப்பட்டாலும்
விதைகள் அழிக்கப்படவில்லை
வேங்கைகள் நாங்கள்
நாளைய விடுதலைக்காய்
தமிழர் என்ற உணர்வுடன்
கரம் கோர்த்து விட்டோம்.

அ.நளினாசினி, கோண்டாவில்.

## கண்ணுக்குள் உண்மை

கண்ணை மூடி
"கூலிங்கிளாஸ்" அணிந்து
கும்மாளமாய் நட்பு என
கூறிக்கொண்டு இன்று
குதூகலிக்கிறீர்கள்
ஒரேயொரு தடவை
கண்ணாடியை கழற்றி பாருங்கள்
உங்கள் கண்களில்
உண்மையான நட்பு
தாண்டவம் ஆடுகிறதா என...?

தயா.மோகனரூபன்,
யா/விக்ரோறியா கல்லூரி, சுழிபுரம்.

## தூரம்...!

என் காதல்!
கடலைப் போல
பரந்து விரிந்து
கிடக்கின்றது – அந்த
வானத்தைப்போல
எட்ட முடியாத
தூரத்தில்...!

கிரு.செந்தூரன், பருத்தித்துறை.

## நண்பேண்டா

அன்பு காற்று ஒருநாள்
வீசாமல் விடலாம்
உறவுகள் ஒருநாள்
பிரிவை தரலாம்
இனிக்கும் காதல்
ஒருநாள் வலியை தரலாம்
என்றும் கூடவே
இருப்பேன் என்ற
நட்பு பிரிவை தரும்
என் மூச்சு காற்று
நிற்கும் வேளையில்
நண்பேண்டா

ஆனந்த் அபி, பருத்தித்துறை.

## மறந்து விடாதீர்

வாழும் பருவத்தில்
வாழ்வைச் சீரழித்து
பண்பாட்டை மறந்து
கறுப்புக் கண்ணாடி அணிந்து
உலகை இருளாக்கி பார்த்து
இரட்டிப்பு மகிழ்ச்சி அடையாதீர்
பாதகச் செயல்களைக் காண
சமுதாயத்தின் கண்களில்
பூதக்கண்ணாடி அல்லவா
அணிந்திருக்கின்றது
அது உங்கள் வாழ்வை
பாதாளம் நோக்கி தள்ளிவிடும்.

க.அபர்ணா, வட்டுக்கோட்டை

## வாயில்லா பிராணி

நாம் தமிழர்கள்
எம் தமிழ் மண்
பேசியது தமிழ் – மொழி
என்றதனால் – அன்று
வாயில்லாப் பிராணியானோம்
ஆனால் நீங்கள் .
துடிப்புள்ள தன்மானமுடைய
சிறுவர்கள் நீங்களாயினும்
காட்டுக்களை தகர்த்து எறியுங்கள்.

வளர்மதி யுகன்,
யா/செங்குந்தா இந்துக் கல்லூரி.

## மகிழ்ச்சியின் உதடுகள்

பொங்கும் ஒற்றுமைகள்
விழித்திடும் இதயங்கள்
கூடப்பிறந்த சகோதரர்
மாதிரித்தான் நண்பர்களின் நட்பு.

பா.டிலக்ஷன், யா/செ.இ.க.

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –207



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 06.06.2014 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.


குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுபறியிலிருந்த பூநகரி வைத்தியசாலை

## புதிய கட்டடம் திடீரென திறப்பு



(பூநகரி)

பூநகரி பொது வைத்தியசாலையின் கட்டடவேலைகள் பூர்த்தியடைந்து ஆறுமாதங்கள் கடந்த நிலையில் யார் திறப்பது என்ற இழுபறி நிலையிலிருந்த வைத்தியசாலையின் புதிய கட்டடத்தொகுதி நேற்று முன்தினம் திடீரென திறக்கப்பட்டு வைத்திய சேவைகள் நடைபெற்று வருகின்றன.

பூநகரி பொது வைத்தியசாலை அமைப்பதற்கான அடிக்கல் கடந்த 2011ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நாட்டப்பட்டது.

இந்நிலையில் சுமார் 300 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக் கட்டடத்தின் வேலைகள் அனைத்தும் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பே நிறைவடைந்தது.

எனினும், புதிய வைத்தியசாலைக் கட்டடத்தை திறந்து மக்கள் பாவனைக்கு விடாது யார் அதிதியாக வந்து கட்டடத்தை திறப்பது என்ற இழுபறி நிலை காணப்பட்டது.

இந்நிலையில், நிரந்தர கட்டமின்றி தற்காலிகமாக பூநகரியிலுள்ள தனியார் வீடொன்றிலேயே வைத்தியசாலை இயங்கி வந்தது.

இங்கு சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் மர நிழலின் கீழே வைத்து கவனிக்கப்பட்டு வந்தனர்.

அத்தோடு போதிய மருத்துவ வசதிகளின்மையால் இங்கு வரும் நோயாளர்களில் பெரும்பாலானோர் அம்புலன்ஸ் வண்டிகளின் உதவியுடன் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளுக்கே கொண்டு செல்லப்பட்டனர்.

இவ்வாறாக வைத்திய சேவையை பெற்றுக்கொள்வதில் இப்பகுதி மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வந்தனர்.

எனினும், வைத்தியசாலையை மக்கள் பாவனைக்கு விடுவதற்கு எவரும் முன்வரவில்லை.

பூநகரி பிரதேச மக்களின் இக்கட்டான நிலையை கருத்திற்கொண்டு வலம்புரி பத்திரிகை ஒரு மாதத்திற்கு முன்னர் இக் கட்டடத்தை மக்கள் பாவனைக்கு விட்டு வைத்திய சேவையை வழங்குமாறு வலியுறுத்தியிருந்தது.

இதன்பிரகாரம் பூநகரி மக்கள் வைத்திய சேவையில் எதிர்கொள்ளும் அவல நிலையை நேரில் சென்று பார்வையிட்ட கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நேற்று முன்தினம் புதிய வைத்தியசாலையை திறந்து மக்கள் பாவனைக்காக விட்டுள்ளார்.

எவ்வித ஆடம்பரமுமின்றி இக் கட்டடம் நேற்று முன்தினம் பால் காய்ச்சி திறந்து வைக்கப்பட்டது.

வைத்தியசாலை திறக்கப்பட்ட இரு நாட்களிலும் சுமார் 200 இற்கும் மேற்பட்ட நோயாளர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

போதிய வைத்தியர் இன்மையால் தற்போது வருகின்ற நோயாளர்களின் பிரச்சினைக்கு அப்பிரதேசத்தில் இதுவரை காலமும் வைத்திய சேவையை வழங்கி வந்த வைத்தியர் ப.கோகுலனே முன்னெடுத்து வருகின்றார்.

இப்பிரதேச மக்களுக்கு பூரண வைத்திய சேவையை ஆற்றுவதற்கு போதிய வைத்தியர்கள் நியமிக்கப்பட்டு வைத்தியசாலைக்குச் செல்லும் 200 மீற்றர் தூரமான பாதையையும் புனரமைக்க வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது. (9-84)

## சங்காபிஷேகம்

பூநகரி கெங்குறுபிட்டி பெரும்படை அம்மன் ஆலயத்தின் மணவாளக் கோல சங்காபிஷேகமும் ஐயனார் பெருமானுக்கு கும்பாபிஷேகமும் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதன்படி இன்று காலை 10 மணிக்கு விஷேட பூசைகள் இடம்பெற்று பிற்பகல் 2 மணிக்கு எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. அத்தோடு, நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து இவ்வாலயத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை பொங்கல் மடை நிகழ்வும் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை விசாகப் பொங்கலும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (9-84)

## கும்பாபிஷேகம்

பூநகரி சித்தங்குறிஞ்சி ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தானத்தின் கும்பாபிஷேக விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதன்படி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பக்தர்களின் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.

நாளை திங்கட்கிழமை அதிகாலை 5.30 முதல் 7.14 மணி வரை கும்பாபிஷேகமும் காலை 10 மணிக்கு அபிஷேகமும் மாலை 6 மணிக்கு விசேட பூசை, வசந்தமண்டபபூசை என்பனவற்றைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வரவுள்ளது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-84)




# கடைத்தொகுதிகளில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்குக

(பூநகரி)



பூநகரி பிரதேச சபையின் கீழுள்ள சந்தை மற்றும் 30 கடைத்தொகுதிகள் என்பனவற்றில் வியாபாரம் நடைபெறாமையினால் வெறிச்சோடிய நிலையில் அவை காணப்படுகின்றன.

இங்குள்ள 30 கடைத் தொகுதிகள் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் பகிரங்க ஏலத்தில் விடப்பட்டன.

குறித்த கடைத்தொகுதிகளைப் பெறுவதற்காக முற்பணம் செலுத்திய வர்த்தகர்களில் கடைத்தொகுதிகள் கிடைக்கப்பெறாதவர்கள் செலுத்திய முற்பணத்தை தருமாறும் அதன் பின்னரே கடைத்தொகுதிகளை திறக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் முற்பணம் செலுத்தியவர்களுக்கான பணத்தினை மீளளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதேச சபையினர் கூறிய போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சூழ்நிலையினால் கடைத்தொகுதிகளும் சந்தைக் கட்டடங்களும் வியாபார நடவடிக்கைகளைத் தொடர முடியாமல் சோபையிழந்து காணப்படுகின்றன.

எனவே, பூநகரி பிரதேச சபையினர் குறித்த கட்டடத்தொகுதியில் வியாபார நடவடிக்கைகளைத் தொடர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-84)



முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோர் வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்ட வேளை... (படம்:-என்.குமார், முல்லைத்தீவு செய்தியாளர்)

# கரைச்சி பி.சபையை மீறி மாட்டிறைச்சி விற்பனை

(கிளிநொச்சி)



கரைச்சி பிரதேச சபையினரால் தடை விதிக்கப்பட்ட உருத்திரம் மாட்டிறைச்சி கடையில் மீண்டும் இறைச்சி விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

உருத்திரபுரம் பகுதியிலுள்ள இரண்டு மாட்டிறைச்சிக் கடைகளில் பசு மாட்டின் இறைச்சி விற்பனை செய்யப்பட்டதையடுத்து இவ்விரு கடைகளையும் மூடுமாறு பிரதேச சபை அறிவித்திருந்தது.

இந்நிலையில், நேற்றுக்காலை கடையின் பின் பக்கமாக இறைச்சி விற்பனை இடம்பெற்றுள்ளது.

தகவலையறிந்த பிரதேச சபையினர் அவ்விடத்திற்கு வந்தபோது விற்பனையில் ஈடுபட்டவர்கள் ஓடி மறைந்துள்ளனர்.

எனினும், 25 கிலோகிராம் மாட்டிறைச்சி, மோட்டார் சைக்கிள், இரு தலைக்கவசம் என்பவற்றை பிரதேச சபையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில், பிரதேச சபையின் கட்டளையை மீறி விற்பனையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நாளைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடரப்படவுள்ளது. (9-27)

# புகைத்தல் எதிர்ப்பும் கொடி வாரமும்

(கிளிநொச்சி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் சமூக அபிவிருத்தி பிரிவினால் முன்னெடுக்கப்படும் சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு தினத்துடன் கொடி வாரமும் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி கண்டாவளை பூநகரி பளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஏழு வங்கிகளான வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி வங்கிகள் ஊடாக நேற்று முதல் ஜூன் மாதம் 15 ஆம் திகதி வரை கொடி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதேவேளை கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஸ்கந்தபுரம் வங்கி சங்க நிர்வாகத்திற்கு உட்பட்ட புகைத்தல் மற்றும் பிரதேசங்களில் போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு ஒன்று கூடல் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஸ்கந்தபுரம் முருகன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

அத்தோடு வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், அக்கராயன், ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம், கோணாவில், ஊற்றுப்புலம், புதுமுறிப்பு, உருத்திரபுரம் வடக்கு உருத்திரபுரம் மேற்கு, சிவநகர் ஆகிய கிராம அலுவலகர் பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்கள் விழிப்புணர்வு கலந்துரையாடலில் பங்குகொண்டு பயன்பெற முடியும் என ஸ்கந்தபுரம் வங்கிச் சங்கத்தின் வலய உதவியாளர் சி.ஜெயதீபன் தெரிவித்துள்ளார். (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலீடுகளை ஈர்ப்பதில் இலங்கை முன்னேறியுள்ளது

## மத்தியவங்கி ஆளுநர்

இலங்கையின் பொருளாதாரம் சராசரியாக ஆண்டுக்கு ஏழெட்டு சதவீதம் வரை வளர்ந்து, அதன் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு முன்பில்லாத அளவுக்கு அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

வட்டி விகிதம் குறைந்து, பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டு பொருளாதாரம் முன்னைக்கு மேம்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இலங்கைக்குள் வெளிநாட்டு முதலீடுகளின் வரத்து மந்தமாக இருப்பதாகவே கூறப்படுகிறது.

இந்நிலையில், மேற்குலக முதலீட்டாளர்களை இலங்கைக்கு வரவேற்கும் நோக்குடன் இலங்கையிலிருந்து ஒரு குழு பிரிட்டன் வந்து தொழிலதிபர்களையும் நிதி நிர்வாகிகளையும் சந்தித்து வருகிறது.

அக்குழுவின் அங்கமாக பிரிட்டன் சென்றுள்ள இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் கப்ரால், சீனாவிலிருந்து மட்டுமல்லாமல் ஏனைய வெளிநாடுகளின் முதலீடுகளை ஈர்ப்பதிலும் இலங்கை முன்னேறியுள்ளதாக தெரிவித்துள்ளார். (2)

# முப்பது வருடங்களாக திருத்தப்படாத வீதி

மருதங்கேணி பருத்தித்துறை வீதி நீண்ட காலமாக திருத்தப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மருதங்கேணி பகுதியில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் கடந்த 30 வருட காலமாக மேற்குறிப்பிட்ட வீதி திருத்தப்படாதுள்ளது.

எனவே, மேற்குறித்த வீதியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடமராட்சி மாமுனை கலைமகள் சனசமூக நிலையத்தினால் உரிய அதிகாரிகளிடம் சுட்டிக் காட்டப்பட்டது. தவறும் பட்சத்தில் வெகுஜன போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் அவர்கள் சுட்டிக்காட் டியிருந்தனர்.

ஆனால் இது வரையும் குறித்த வீதி திருத்துவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே குறித்த வீதியை மக்களின் சீரான போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் திருத்தித் தருமாறும் இல்லையெனில் ஏற்கனவே அறிவித்தபடி போராட்டத்தை நடத்த போவதாகவும் மேற்படி சனசமூக நிலையம் அறிவித்துள்ளது. (அ-19)

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் மாபெரும் கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரியின் மாபெரும் கல்விக் கண்காட்சி எதிர்வரும் 05,06, 07 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் மேற்படி கல்லூரியின் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை முதுநிலை விரிவுரையாளர் மற்றும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட ஆலோசனைச்சபை உறுப்பினருமான முனைவர் தகனமணி, சர்வதேச அரிமாக்கழகங்களின் 30681 இறுகான உப ஆளுநரும் யாழ். தேசியகல்வியியற் கல்லூரி சிரேஷ்ட ஆலோசனைச் சபை உறுப்பினருமான வைத்திய கலாநிதி லயன். வை.தியாகராஜா ஆகியோர் கலந்துகொண்டுசிறப்பிக்கவுள்ளனர்.

இக்கண்காட்சி முன்பள்ளி, ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, ஆசிரிய வாண்மைத்துவ அம்சங்கள், பொதுவானவை எனும் துறைவாரியாக இடம்பெறவிருக்கின்றது.

முன்பள்ளியில் மகிழ்ச்சிகரமான கற்பித்தல் செயலொழுங்கு, பொழுது போக்கு அம்சங்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், நாடக ஆற்றுகைகள் என்பனவும் ஆரம்பக்கல்வி என்பதில் தமிழ், கணிதம், சுற்றாடல்சார் செயற்பாடுகள், நாடக ஆற்றுகைகள், சித்திரம், ஆக்க செயற்பாடுகள், விசேட கல்விச் செயற்பாடுகள் என்பனவும் இடைநிலைக் கல்வி என்பதில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், இசை, நடனம், நாடகமும் அரங்கியலும், விளையாட்டு விஞ்ஞானம், ஆங்கிலம், சித்திரம், சாரணியம், அனர்த்த முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் என்பனவும் இடம்பெறும்.

ஆசிரிய வாண்மைத்துவ அம்சங்கள் என்பதில் உளவியல், ஆலோசனை வழிகாட்டல், சமூகவியல், கல்வித்தத்துவம், பாடசாலை முகாமைத்துவம், கற்பித்தல் சாதனங்கள் ஆகிய அம்சங்களும் பொதுவானவை என்பதில் வீதிப்பாதுகாப்பு நடைமுறைகள், புத்தகக் கண்காட்சியும் விற்பனையும், வங்கியியல் நடைமுறைகள், ஆயுர்வேத மருத்துவம், சமூக மருத்துவம், உள்ளூர் உற்பத்திப் பொருட்கள், விவசாய உபகரணங்களும் விற்பனையும், விவசாய விதைகள், உரவகைகளின் விற்பனை, பொழுது போக்கு அம்சங்களும் விளையாட்டுக்களும், சாகச வித்தைகள், இலத்திரனியல் சாதனங்கள் என்பனவும் இடம்பெறும்.

பயனுள்ள இக்கண்காட்சியைப் பார்வையிட்டுப் பயன்பெறவுள்ள பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் நிர்வாக ஒழுங்கிற்காக முன்கூட்டியே தத்தமது அதிபரூடாக பதிவு செய்து கொள்ளுமாறு பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் கேட்டுள்ளார். (2)

# கவிதை நூல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை-ஞானாலயம் வழங்கும் சித்தம் அழகியார்-06 மயானகாண்டம் கவிதைநூல் அறிமுகம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும்.

இக்கவிதை நூலுக்கான விமர்சன உரையை குப்பிளான் ஐ.சண்முகன் வழங்கவுள்ளார். ஆர்வமுள்ள அனைவரும் பங்குகொள்ளலாம். (2-19)

# பிரிவுத்துயர் பகிர்வு



### நாகலிங்கம் செல்வலிங்கம்

வவுனியா செட்டிக்குளத்தை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்வலிங்கம் கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு Ferdinand-Porsche-Straße 5,21684 Stade,Germany என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### ஐயாத்துரை சங்கரப்பிள்ளை

யாழ்.நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் கொழும்பு சொய்சாபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சங்கரப்பிள்ளை கடந்த 28 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு கல்கிசை பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### பரசுராமன் சிவபாதசுந்தரம்

கல்முனையைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரசுராமன் சிவபாதசுந்தரம்(முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.



### நாகலிங்கம் செல்லத்துரை

யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்லத்துரை கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சித்துபாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சுப்பிரமணியம் ராஜேஸ்வரி

வேலணையைப் பிறப்பிடமாகவும் பிரான்சை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ராஜேஸ்வரி கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு La Salle Funeraire Menilmontant,7 Boulevard de Menilmontant 75011 Paris,France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி பொன்னையா அன்னப்பிள்ளை

யாழ்.சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வடமராட்சி பொலிகண்டி பாலாவியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அன்னப்பிள்ளை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்றுபூதவுடல் முற்பகல் 10 மணிக்கு ஊறணி மாயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சண்முகலிங்கம் சிவராஜன்

பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட சண்முகலிங்கம் சிவராஜன் (ஆங்கில ஆசிரியர்) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுழிபுரம் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### விவேகா புஸ்பகுமார்

வவுனியாவைப் பிறப்பிடமாகவும் வவுனியா கூமாங்குளம், ஓமந்தையை வசிப்பிடமாகவும் கொண்ட விவேகா புஸ்பகுமார் நேற்று முன்தினம்வெள்ளிக்கிழமைஅன்றுகாலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் அரசங்குளம் ஓமந்தையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.



### திருமதி முருகேசு இராசம்மா

யாழ்.வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் கட்டை கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இராசம்மா கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### மயில்வாகனம் நாகலிங்கம்

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை பெரேரா ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்டமயில் வாகனம் நாகலிங்கம் (முன்னாள் மஸ்கெலியா எஸ்டேட் தலைமை லிகிதர்) கடந்த 28 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது சித்தங்கேணி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சிற்றம்பலம் நல்லையா

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் நல்லையா கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# கைப்பணி அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கைப்பணி அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம்,நாவலர் வீதியிலமைந்துள்ள நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.என மேற்படி சங்கத்தின் செயலாளர் க.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்விற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.இதன்போது இலகுகடன் பெற்றுக் கொள்ளல். ... தொழில் அபிவிருத்தி, மூலப்பொருள் பெறுவது.தொழிற்பயிற்சி வழங்குதல் போன்ற ... தொடர்பாகவும் அமைச்சர் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி மேற்கு சனசமூக நிலைய மென்பந்தாட்ட அரையிறுதி ஆட்டம்

## நுணாவில் பாரதி, மட்டுவில் வளர்மதி இன்று மோதல்

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தென்னமராட்சி பிரதேச கழகங்களுக்கிடையிலான அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் 12 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை கைதடி மத்திய குமரநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் நுணாவில் பாரதி விளையாட்டு கழகத்தை எதிர்த்து மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)



மட்டுவில் வளர்மதி



நுணாவில் பாரதி

## மாகாணமட்ட கபடிப் போட்டியில் பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.சாதனை





பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த. பாடசாலையிலிருந்து அணிகள் மாகாணமட்ட கபடிப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன.

முல்லைத்தீவில் இடம்பெற்று வரும் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்டப் போட்டிகளுக்கே இவ் அணிகள் பங்குபற்றவுள்ளன.

15 வயதுப் பிரிவு பெண்கள் அணி வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றதுடன் மாவட்ட மட்டத்தில் 3 ஆவது இடத்தை சுவீகரித்து மாகாண மட்டப் போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளது.

19 வயது பெண்கள் அணி வலய மட்டத்தில் முதலாம் இடத்தை தட்டியது. இவ் அணி தொடர்ச்சியாக 3 ஆவது வருடமாக வலயச் சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது.

இவ் அணியும் மாவட்ட மட்டத்தில் 3 ஆவது இடத்தை சுவீகரித்து மாகாண மட்டப் போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளது. (சு-23)

## வடக்கு கண்ணகை சம்பியன்

கைதடி வடக்கு நவபுரம் நவ சன சமூகநிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நவசக்தி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் மட்டுவில் வடக்கு கண்ணகை வி.க.அணி கைதடி மின்னொளி வி.க.அணியைத் தோற்கடித்து சம்பியனாகியது.

நவசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மட்டுவில் வடக்கு கண்ணகை வி.க.அணியும் கைதடி மின்னொளி வி.க. அணியும் களமிறங்கின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மின்னொளி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

கண்ணகை அணியின் வீரர்களின் அபார பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 15.2 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அணியின் பானு 51 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் கண்ணகை அணியின் சார்பில் மதி, செந்தூரன் ஆகியோர் தலா 4 இலக்குகளையும் ஜெரி, ஜேஸி ஆகியோர் தலா ஓர் இலக்கையும் சாய்த்தனர்.

104 ஓட்டங்கள் வெற்றி இலக்காக துடுப்பெடுத்தாடிய கண்ணகை அணி 14.3 பந்து பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடைந்து சம்பியனாகியது. அணி சார்பில் மைந்தன் 42 ஓட்டங்க்ளையும் வாகீசன் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். (சு-23)

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

அராலி ஏ.எல்.விளையாட்டுக் கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து வலிகாமம் காற்பந்தாட்ட லீக் அனுசரணையில் நடத்திய அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு செ.ஈஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் என். நவரட்ணராஜாவும் வலி.மேற்கு பிர தேச சபை உறுப்பினர் என்.நடனேந்திரனும் வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலக்கிருஷ்ணனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் இறுதிப் போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும் நாமகள் பி அணியும் மோதவுள்ளது. (சு-23)

## இன்றைய போட்டி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 40 வயதிற்கு மேற்பட்ட அணிக்கும் அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தரும் 40 வயதிற்கு மேற்பட்ட அணிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டியொன்று இடம்பெறவுள்ளது.

இப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இரு பிரதேசங்களினதும் நட்புறவை வளர்ப்பதோடு ஒருங்கிணைவை ஏற்படுத்தும் விதமாகவே இப்போட்டிகள் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள், அறிவித்துள்ளனர். (சு-23)









கம்பர்மலை கலாவாணி முன்பள்ளி விளையாட்டு விழா கடந்த திங்கட்கிழமை கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலமென்று அசை இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.
- திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடமாகாண முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் திட்டங்கள் தேவை

தனித்து நுகர்வில் மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கும் சமூகமாக தமிழ் இனம் மாறிவிட்டது என்ற உண்மையை ஏற்றுத்தான் ஆக வேண்டும். இதன் காரணமாக வடமாகாணத்தில் கேள்வி (Demand) நிலவுகின்றதே தவிர, நிரம்பல் (Supply) இல்லாமல் போய் விடுகிறது.

ஒரு இனம் நுகர்வுக்கு மட்டுமே பங்களிப்பு செய்யும் போது அதற்கான நிரம்பல் வெளியிடங்களில் இருந்தே கொண்டுவரப்படும்.

இந் நிலையில் வடக்கு மாகாணத்தின் பொருளாதாரம் வெளியேறிக்கொண்டிருப்பது ,தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

எனவே ஒரு இனம் தனது நுகர்வுக்காகவேனும் நிரம்பல் செய்தாகவேண்டும். எனினும் அது பற்றிய முயற்சிகள், எத்தனிப்புகள் எங்களிடம் இல்லை எனலாம்.

மல்வானையில் விளைந்த றம்புட்டான் பழம் வடபுலத்தின் சந்தைகளில் பெரும் விற்பனையாகிக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

றம்புட்டான் ஒன்றின் விலை குறைந்ததாக இருந்தாலும் அங்கிருந்து விற்பனைக்காக வருகின்ற றம்புட்டானின் எண்ணிக்கை ஏராளம்.

எனவே குறைந்த விலை; அதிகப்படியான விற்பனை என்ற பொருளியல் நுட்பத்தினூடாக இலாபம் உழைக்கும் முயற்சி நடைபெறுகிறது. இந்த முயற்சியில் சிங்கள, முஸ்லிம் மக்கள் ஈடுபடுகின்றனர்.

அதேநேரம் சந்தைக் குத்தகை, நிலவாடகை என்பவற்றில்ருந்து விலக்குப்பெறும் வகையில் வீதியோரங்களில் வைத்தும் வாகனங்களில் வைத்தும் றம்புட்டான் விற்பனை செய்யப்படுவதைக் காணும்போது தென்பகுதியில் இருக்கக் கூடியவர்களின் முயற்சியாண்மை குறித்து நாம் சிந்திப்பது அவசியம்.

இது தவிர அன்னாசிப் பழ விற்பனை முதல் ; கட்டில், கதிரை, மேசை உட்பட வீட்டுக்குத்தேவையான மின்சாதனப் பொருட்கள் வரையான விற்பனையில் தென்பகுதி முயற்சியாளர்கள் வடமாகாணம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

ஆனால் எங்கள் வடமாகாண முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் தென்பகுதிச் சந்தையில் விற்பனையாவதிலும், அதன் அளவிலும் நாங்கள் மிகவும் இடர்படுகின்றோம்.

எங்கள் மண்ணில் உருளைக்கிழங்கு அதிக விளைச்சல் என்றால், அதனைச் சந்தைப்படுத்துவதில் ஏகப்பட்ட இழுபறிகள்.

இன்று, நாளை என்ற நாட்கடத்தல்கள் உருளைக் கிழங்கை சேதப்படுத்த; அதன் உற்பத்தியாளர்கள் நட்டமடைகின்றனர். இதனால் அந்த முயற்சியிலிருந்து விலகுகின்ற பரிதாப நிலை ஏற்படுகின்றது.

எனவே எங்கள் முயற்சியாளர்களை நாம் ஊக்கப்படுத்துவதுடன் முயற்சியாளர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்கச் செய்யவேண்டும்.

முயற்சியாளருக்கான ஊக்குவிப்பும் அவர்களுக்கான மானியக் கிடைப்பனவுகளும் அவர்களுக்கு இலாபத்தைக் கொடுக்க, ஊக்குவிப்பு தானாகவே ஏற்படுத்தப்படும். இந் நிலைமையானது எங்கள் வடபகுதியில் இருக்கக் கூடிய விளை நிலங்களை பசுமையாக்கும்.

கூடவே கடற்றொழிலாளர்களுக்கான ஊக்குவிப்புகள் எங்கள் கடல் வளத்தை பன்மடங்காக அதிகரிக்கும்.

ஆக, இது பற்றி நாம் சிந்தித்து எங்கள் மண்ணில் உற்பத்தி முயற்சிகள் முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பது அவசர, அவசிய தேவையாகும்.

# உரும்பிராயில் நள்ளிரவு வேளை 2 வீடுகளில் துணிகரக் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் நள்ளிரவு வேளையில் இரண்டு வீடுகளில் இடம் பெற்றதிருட்டுச் சம்பவத்தில் சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் என்பன பறிபோயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோவிலடியிலுள்ள வைத்தியர் ஒருவரின் வீட்டில் நேற்றுமுன்தினம் அதிகாலை சுமார் 10 பவுண் நகை மற்றும்ஒரு தொலைபேசி ஆகியன கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக உரிமையாளரால முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்தவர்கள் உறங்கிக் கொண்டிருந்த போது வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் மேற்படி பொருட்களை கொள்ளையடித்து சென்றுள்ளதாகவும் அவை 5 இலட்சத்து 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பெறுமதியினை கொண்டது எனவும் உரிமையாளர் முறையிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் உரும்பிராய் மேற்கில் மானிப்பாய் வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம் பெற்ற திருட்டுச் சம்பவத்தில் சுமார் 2 இலட்சம் ரூபாய் பணமும் 12 பவுண் தங்க நகைகளும் திருட்டுப் போயுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-6)

## மிதிவெடி வெடித்து மாணவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கிளாலியில் மிதிவெடி வெடித்து பாடசாலை மாணவன் ஒருவர் படுகாயமடைந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த கிளி/றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கல்வி பயிலும் உதயகுமார் கவிகரன் (வயது 14) என்ற மாணவனே படுகாயமடைந்தவராவார்.

நண்பர்களுடன் கடற்கரைக்குச் சென்றபோது நிலத்தில் புதையுண்டிருந்த மிதிவெடி வெடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந் மாணவன் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-6,11)

## யோகா பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். யோக அரங்கத்தினர் நடத்தும் யோகா பயிற்சியின் புதிய பிரிவின் ஆரம்ப நிகழ்வு நல்லூர்த்தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இன்று 4.30 மணிக்கு யோக அரங்க இயக்குநர் எஸ். உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பண்டிதர் வ.ஆ.தங்கமயில் திருமந்திரத்தில் யோகாசனம் எனும் தொனிப் பொருளிலும் மூத்த யோகாசன ஆசான் வே. ந.சிவனேஸ்வரராஜா இயற்கை நலவாழ்வு என்ற விடயம் பற்றியும் சிறப்புக்கருத்துரைகளை வழங்குவர்.

யோகா பயிற்சி வகுப்புக்கள் காலை 6 மணி தொடக்கம் காலை 7 மணி வரை தொடர்ந்து 2 மாதங்கள் தினமும் நடைபெறும். ஆரோக்கியத்திற்கு அவசியமான ஆசனம், பிரணாயாமம், தியானம் மற்றும் சாந்தவழி முறைகள் அனுபவமுள்ள யோகாசன ஆசிரியர்களால் பதஞ்சலி யோக முறையில் நுட்பமாகப் பயிற்சி வழங்கப்படுவதுடன் பெண்களுக்கான மேலதிக பயிற்சிகள் பெண் ஆசிரியரால் வழங்கப்படும். பயிற்சி நெறியை பூர்த்தி செய்பவர்களுக்கு கையேடும் சர்வதேச அங்கீகாரம் பெற்று சான்றிதழும் வழங்கப்படும்.

ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து பயன்பெறலாம் என்று யாழ்.யோக அரங்கத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### வேண்டிப் பணிந்திடடி

ஆவது மில்லையடி அழிவது மில்லையடி
தேவரு மில்லையடி - சின்னத்தங்கம்
சிவனே முழுதுமுண்மை
ஆசையை விட்டிடடி அதுவேசிவ பூசையடி
காசைக் கருத்தில்வைத்துச் - சின்னத்தங்கம்

# "நற்செய்தியால் நம் வாழ்வு மாற்றம் பெற்று,இயேசுவின் விண்ணேற்புப் பெருவிழாவில் அர்த்தம் பெறட்டும்"

## இதுவே இன்றைய (01/06/2014) செய்திக்கான வேதாகம வெளிப் படுத்தாகும்.

நாம்இயேசு விண்ணேற்றமடைந்த திருவிழாவை இனறு கொண்டாடுகின்றோம். இயேசு இறைசித்தத் தை நிறைவேற்ற பொறுமையோடு துன்பங்களை தாங்கினார். இதனால் இறைவன் இயேசுவை உயர்த்தினார்.


## பரமபிதா காட்டிய பாதை

இயேசுவும் விண்ணேற்படைந்தார். இயேசு உலகமுடிவு வரை எந்நாளும்நான்உங்களுடன்இருக்கிறேன் என்று கூறி எம்முடன் இருக்கிறார். பொதுவாக மற்ற சமயங்களில் கடவுள என்பவர் எங்கோ இருந்து மக்களைப் பார்த்துக் கொண்டு இருக்கிறவர் போல சித்தரிக்கப்படுகிறார். ஆனால், கிறிஸ்தவ சமயத்தில் கடவுள் மக்களோடு இருக்கிறவராக தன்னை வெளிப்படுத்துகிறார். பைபிள் முழுவதும் கடவுள் மககளோடு, குறிப்பாக ஏழை, எளிய மக்களோடு, துன்பப்படுகிற, துயரத்தால் வாடுகிற மக்களோடு தன்னையே இணைத்துக் கொள்கிறார் என்பது திட்டவட்டமாகச் சொல்லப்படுகிறது. இயேசு எம்மோடு பயணித்திருக்கிறார். தங்க இயிருக்கிறார். எம்மை வழிநடத்தியிருக்கிறார். கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உணர்வே எமக்கு மகிழ்வைத்தர வேண்டும். வேதனைகளால், பாரங்களால் துவண்டு, வாழ்வையே சுமையாக எண்ணிக்கொண்டிருக்கும் எமக்கு மிகப்பெரிய ஆறுதலாகும்.

இயேசுவின் விண்ணேற்பு ஆண்டவன்பார்வையில் நாமும்இயேசுவைப் போல் உண்மைக்காக நீதிக்காக அன்பிற்காக நம்பிக்கையுடன் வாழும்போது உயர்த்தப்படுவோம் என்ற நம்பிக்கையை அளிக்கின்றது. உண்மைக்கு சாட்சியம் பகிர்வதே எனது பணி என்று கூறிய இயேசு தான் உயிர்தெழுந்தபின் தனது உயிப்புப்பற்றி உலகிற்கு அறிவிககவும் அதற்கு சாட்சியம் பகிரவும் அழைப்பு விடுக்கிறார். உலகில் நற்செய்தியையும் மீட்பையும் அறிவிப்பதற்காக நாம் அனுப்பப்படுகின்றோம்.

உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம்நறசெய்தியைப்பறைசாற்றுங்கள்." உலகில வாழ்கின்ற அனைவருக்கும் இந்நற்செய்தி அறிவிக்கப்படவேண்டும் என்பதே, இயேசுவின் விருப்பம். இயேசு உலகில் ஆற்றிய அதே பணியைத் தொடர்ந்து ஆறுவதே எமக்கு தரப்பட்டஹுப்பு எமது முககிய பணி "நறசெய்தி அறிவித்தலே". இதைநம்வெறும் வார்த்தைகளால் வடித்துவிடக்கூடாது. மாறாக, நற்செய்தி என்பது ஒரு வாழ்க்கை முறை. இயேசுவின் போதனையை உள்ளத்தில ஏற்று, அதன் படிவாழ்ந்து சான்று பகிர்தலே நற்செய்தி அறிவிப்பின் முக்கிய அம்சம். இவ் வாறு நாம் நற்செய்திக்கு நம் வாழ்வின் ஊடாக சான்று பகிரந்தால் எவருமே நற்செய்தியை அன்னியமாகப் பார்க்க மாட்டார்கள்.

நீதியில், நேர்மையில் உரு வாகும் விடுதலையும், வெற்றியும் தன் மக்களுக்கு உண்டு என்று இறைவன் உறுதி அளிக்கிறார்.



இன்றைய மற்றும் நாளைய உலகையும் குறித்து நம்பிக்கை இழந்திருககும் நமக்கு, பிளவுகள், பிரிவுகள், ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றால்நிறைந்துவெறுப்பை உமிழ்ந்து வரும்இன்றைய உலகிற்கு நீதியை நிலைநாட்ட நேர்மையைக் கடைபிடிக்க இயேசு வின்விண்ணேற்பு எமக்கு வழிகாட்டட்டும்.


சிலுவைப்பாடுகளின் கொடூரமான நிலையிலும் தந்தை தன்னை காப்பாற்றி உயிர்த்தெழச் செய்வார் என உறுதியாக இயேசு நம்பினார். சிலுவைப்பாடுகளே இயேசுவின் மாட்சியின் வெளிப்பாடுகளாயின. அதுவே உன்னதமான மகிமைபெற வழிவகுத்தது. அதுவே இன்று நாம் கொண்டாடும் விண்ணேற்பு விழா. இயேசு மாட்சி மையடைதலின் முழுமை இன்றைய விண்ணேற்பு நிகழ்விலே நிறைவடைகின்றது. இயேசு அடை இந்த மாட்சியிலும் மகிமையிலும் மதி மயங்கிஇருக்க நாம் அழைக்கப்படவில்லை. மாறாக எமக்கு தரப்பட்ட பண்ியை நிறைவேற்றவே அழைக்கபடுகின்றோம். இவ்வுலகை அன்பு நிலவும் ஓர்இடமாக, நீதி தவழ்கின்ற தளமாக நம்பிக்கை முளைத்திடும் திடலாக மாற்றிய மைத்திட நாம் உழைக்க வேணடும் என்பதே நற்செய்தி அறிவிப்பின் முக்கிய அம்சமாகும். நற் செய்தியால் நம் வாழ்வு மாற்றம் பெற்று. இயேசுவின் விண்ணேற்புப் பெரு விழாவில் அர்த்தம பெறட்டும்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைவிமர்சனம்






தந்தையை கொன்றவர்களை பழி வாங்கும் கதை.

கோட்டையபட்டினம் தேசத்து மன்னன் நாசர். இந்நாட்டில் தலைமை படைத்தளபதியாக இருப்பவர் கோச்சடையான். இவருக்கு ராணா, சேனா என இரு மகன்கள். கோச்சடையான் சிவபக்தர். சிறந்த வீரரும் கூட. அதனால் நாட்டு மக்கள் அவர் மேல் அளவு கடந்த அன்பு வைக்கின்றனர். இது நாசருக்கு பிடிக்கவில்லை. ஆகையால் கோச்சடையானை எப்படியாவது அழிக்க வேண்டுமென்று முயற்சிக்கிறார்.

இந்நிலையில் ஒருநாள் கோச்சடையான், தனது போர் வீரர்களை அழைத்துக் கொண்டு வேறு நாடுகளுக்கு சென்று போருக்கு தேவையான குதிரைகளை வாங்கி கப்பலில் கொண்டு வருகிறார்.

அப்போது கோட்டைய பட்டினத்தின் எதிரி நாடான கலிங்கபுரியை ஆட்சி புரியும் ஜாக்கி ஷெராப்பின் படை வீரர்கள் மறைந்திருந்து கோச்சடையான் கப்பல்கள் மீது பாய்ந்து சண்டையிடுகிறார்கள். அப்போது நடக்கும் சண்டையில் அனைவரையும் விரட்டியடிக்கிறார் கோச்சடையான்.

கலிங்கபுரி வீரர்கள் தப்பித்து சல்லும் செல்லும்போது கோச்சடை யானின் கப்பல்களில் இருக்கும் உணவு களில் விஷத்தை கலந்துவிட்டு செல்கிறார்கள். அதை உண்ணும் கோச்சடையானின் வீரர்கள் உயிருக்கு போராடுகிறார்கள்.

இவர்களை காப்பாற்றுவதற்காக கோச்சடையான் அருகிலிருக்கும் கலிங்கபுரிக்கு சென்று அரசர் ஜாக்கி ஷெராப்பை சந்தித்து, தன் போர் வீரர்களை காப்பாற்றும்படி கேட்கிறார். அதற்கு, ஜாக்கி ஷெராப் அவர்களை காப்பாற்றுவதென்றால், நீ கொண்டு வந்த வீரர்களையும், குதிரைகளையும் என்னிடமே கொடுத்துவிட்டு செல்லவேண்டும் என்று கூறுகிறார்.

அதற்கு கோச்சடையானும் சம்மதித்து அவரிடமே அனைத்தையும் விட்டுவிட்டு தனது சொந்த நாட்டுக்கு திரும்புகிறார். இருப்பினும், எப்படியாவது தனது வீரர்களை தன்னுடைய நாட்டுக்கு திரும்ப அழைத்துச் செல்வேன் என்று ஜாக்கி ஷெராப்பிடம் சூளுரைத்துவிட்டு வருகிறார்.

ஆனால், கோட்டையபட்டின அரசர் நாசரோ கோச்சடையானை பழிவாங்க இதுதான் சரியான தருணம் என்று அவர்மீது தேசத்துரோக குற்றம் சுமத்தி அவரை கொல்ல உத்தரவிடுகிறார்.

இவை அனைத்தையும் அறியும் கோச்சடையானின் இளைய மகனான ராணா தனது அப்பாவின் கனவை நிறைவேற்ற முடிவெடுக்கிறார். நிறைவேற்றினாரா இல்லையா என்பதே மீதிக் கதை.

மோஷன் கேப்சர் தொழில் நுட்பத்தில் அபாரமாக வந்துள்ள அனிமேஷன் படம். கோச்சடையான், ராணா, சேனா என மூன்று கேரக்டரில் ரஜினி கலக்குகிறார்.

இவரது உடல் மொழி, ஸ்டைல்கள் படத்திற்கு பெரிய பலம். கோச்சடையான் ரஜினி ஆடும் சிவதாண்டவம் கைதட்ட வைக்கிறது. ரஜினி பேசும் வசனங்கள் தத்துவங்களாக அனல் கக்குகின்றன. போர்க்கள காட்சிகளில் கிராபிக்ஸ் மிரட்டலாக உள்ளது. மொத்தத்தில் 'கோச்சடையான்' புதிய தொழில்நுட்ப அதிசயம்.

## பார்த்தீபனின் ஒரு கோடி ரூபாய் சவால்


நடிகரும், இயக்குனருமான பார்த்தீபன் தற்போது "கதை திரைக்கதை வசனம் இயக்கம்" என்ற படத்தைத் தயாரித்து இயக்கி வருகின்றார். இந்தப் படத்தில் கதை என்று எதுவும் கிடையாது என்று கூறியுள்ள அவர் ரசிகர்களுக்கு சுவாரஸ்யமான சவால் ஒன்றையும் அளித்துள்ளார். இந்தப் படத்தின் முதல் பாதியை மட்டும் பார்த்துவிட்டு அடுத்த பாதியில் என்ன நடக்கும் என்று சரியாகக் கூறுபவருக்கு தான் ஒரு கோடி ரூபாய் பரிசளிக்க இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். முதல் பாதியில் தான் வெளியிடும் தகவலைக் கொண்டே படத்தின் பிற்பாதியை யூகிக்க முடியும் என்ற பார்த்தீபன் முதல் பாதியில் தான் எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் கூறுகின்றார்.



ப்ரியமான கணவன்: கணவர் ராஜ்குமாருடன் ஸ்ரீப்ரியா...




## விக்ரமின் அடுத்த படம் ரெடி



"ஐ" படத்திற்குப் பிறகு விக்ரம் விஜய்மில் டன் இயக்கத்தில் நடிக்கிறார். இதில் சமந்தா ஹீரோயினாக நடிக்கிறார். இப் படத்தை ஃபாக்ஸ் ஸ்டார் நிறுவனத்துடன் இணைந்து ஏ.ஆர்.முருகதாஸ் தயாரிக்கிறார். இப்படத்திற்கு டி.இமான் இசையமைக்கிறார். இப்படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பு இன்று தொடங்கியிருக்கிறது. மேலும் படத்தின் முதல் காட்சியும் படமாக்கப்பட்டுள்ளது.

இப்படத்தை அக்டோபர் மாதத்திற்குள் முடிக்க திட்டமிட்டுள்ளதாம் படக்குழு. இது பற்றி ஏ.ஆர்.முருகதாஸ் தனது டுவிட்டர் பக்கத்தில், "ஏ.ஆர்.எம் புரொடக்ஷன், ஃபாக்ஸ் ஸ்டார் தயாரிப்பில் விக்ரம் சமந்தா நடித்து விஜய்மில்டன் இயக்கும் படத்தின் படப்பிடிப்பு இன்று துவங்கியது. படத்தின் முதல் காட்சியும் படமாக்கப்பட்டுவிட்டது" என குறிப்பிட்டுள்ளார்.

## சுருதியின் வருத்தம்

சுருதிஹாசனின் அரை குறை ஆபாச படங்கள் சமீபத்தில் இன்டர்நெட்டில் பரவி பரபரப்பை ஏற்படுத்தின. ஏவடு என்ற தெலுங்கு படத்தில் பாடல் காட்சியொன்றில் சுருதிஹாசன் நடித்த போது இப்படங்கள் எடுக்கப்பட்டு இருந்தன. இவற்றை வெளியிடக் கூடாது என்று அப்போதே தயாரிப்பாளரிடம் உறுதி வாங்கி இருந்தார். ஆனால் அதை மீறி இப்படங்கள் இணைய தளங்களில் பரவி உள்ளது.

இதனால் சுருதிஹாசன் அதிர்ச்சியில் உள்ளார். ஆபாசபடங்களை வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தி பொலிசில் புகார் அளித்துள்ளார். சினிமா படப்பிடிப்புகளை படம் எடுக்கும் பத்து போட்டோ கிராபர்களை பிடித்து விசாரித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தை வீழ்த்தியது இலங்கை சிங்கங்கள்

## சங்கா சதம்



இங்கிலாந்துக்கு எதிராக இடம் பெற்ற 4 ஆவது ஒருநாள் போட்டியில் சங்காவின் சதம் கைகொடுக்க இலங்கை அணி 7 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான 5 போட்டிகள்கொண்ட ஒருநாள் தொடரில் 2 : 1 என்ற கணக்கில இங்கிலாந்து அணி முன்னிலை பெற்றிருந்தது.

இந் நிலையிலேயே இரு அணிகளுக்குமிடையிலான 4 ஆவது ஒருநாள் போட்டி நேற்று லோட்ஷில் இடம்பெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி இலங்கை அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக் கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை அணி சார்பாக சிறப்பாக துடுப்பெடுத்தாடிய குமார் சங்கக்கார 112 ஓட்டங்களையும் டில்சான் 71 ஓட்டங்களையும் அஞ்சலோ மத்தியூஸ் 30 ஓட்டங்களையும் பெறுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக கெர்னி 4 விக்கெட்டுக்களையும் ஜோர்டான் மற்றும் அன்டர்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பின்னர் 301 ஓட்டத்தினை வெற்றிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டிழப்பிற்கு 293 ஓட்டங்கள் எடுத்து 7 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் பட்லர் 121 ஓட்டங்களையும் பொபாரா 51 ஓட்டத்தினையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் மலிங்க 3 விக்கெட்டுக்களையும் அஜந்த மெண்டிஸ் 2 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணியின் பட்லர் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான 5 ஆவதும் இறுதியானதுமான ஒருநாள் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (க)






## இன்றைய போட்டி

(தும்பளை)

உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் உதய்தாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைப்பந்தாட்ட போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றது.

பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் முதலாவது போட்டியில் வதிரி டயமன் B அணியை எதிர்த்து நாகர்கோயில் இளந்தென்றல் அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் போட்டியில் அல்வாய் நண்பர்கள் அணியை எதிர்ந்து கட்டைக்காடு சென் மேரிஸ் அணி மோதவுள்ளது. (க-19)

## மாற்றுத்திறனாளி மீனவரின் படகு இயந்திரம் களவு !

(யாழ்ப்பாணம்)

யுத்தப் பாதிப்புக்களை எதிர்கொண்ட நிலையில் வாழ்வாதாரத்தை உயர்த்த போராடிக் கொண்டிருக்கும் மீனவர் ஒருவரின் படகு இயந்திரத்தை இனம் தெரியாத நபர்கள் இருவர் மோசடி செய்துள்ளனர் என வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு புதுமாத்தளனைச் சேர்ந்த மகாலிங்கம் மனோகரன் என்ற மாற்றுத்திறனாளியின் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான படகு இயந்திரமே மோசடி செய்யப்பட்டுள்ளது.

இம் மோசடியில் ஈடுபட்ட இருவரும் அடையாளம் காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குறித்த நபர் பல தரப்பினரிடம் முறையிட்ட போதும் மோசடி செய்யப் படகு இயந்திரம் மீட்டுக்கொடுக்கப்படவில்லை என்றும் முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குறித்த படகு இயந்திரத்தை மீட்டுக்கொடுத்து உதவ வேண்டுமென மாகாணசபை உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## ஐ.நா. தீர்மானம் குறி...

மட்டக்களப்பிலும் நடைபெற்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுமந்திரன, செல்வம் அடைக்கலநாதன், பொன. செல்வராசா, பா.அரியநேத்திரன் மற்றும் சீ.யோகேஸ்வரன் ஆகியோரும் மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பலரும் இந்தச் சந்திப் புகளில் கலந்து கொண்டனர்.

ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு மாதங்களாகின்ற நிலையில் இந்தத் தீர்மானம் தொடர்பில் மக்கள் மத்தியில் நிலவும் சந்தேகங்களையும் சிலரால் ஏற்படுத்தப்படும் குழப்பங்களையும் நீக்குவதே தமது நோக்கம் என தெரிவித்தார் சுமந்திரன்.

விசாரணை தொடர்பாக மக்கள் மத்தியில் நம்பிக்கை வர வேண்டும், விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்றும் அப்படி நம்பிக்கை வந்தால்தான் அவர்களும் அதில் பங்குபற்ற முன்வருவார்கள், இல்லையேல் அது அர்த்தமற்றது என ஒதுங்கி கொள்வார்கள் என றும் சுமந்திரன் குறிப்பிட்டார். (எ-11)

## மயங்கி...

உறுப்பினர் மாவை சேனாதிராஜா மயங்கி சரிந்து வீழ்ந்த நிலைமையானது அங்கு கூடியிருந்த பலர் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து சிறிது நேரத்தின் பின்னர் அவர் பழைய நிலைக்கு திரும்பிய பின்னர் ஆதரவாளர்கள் மத்தியில் பதற்றம் நீங்கியது. (எ-11)




அந்தியேட்டி

வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் சிவஸ்ரீ கா.விக்னேஸ்வரன்
(அப்பன் ஐயா)

அவர்களின் 90ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள் 31.05.2014 சனிக்கிழமை நேற்று ஒட்டிசுட்டான் கெருடமடு தீர்த்தக் கரையில் நடைபெற்றது.

வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 01.06.2014 ஞாயிற்றுக் கிழமை இன்று அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



– குடும்பத்தினர்
கரிப்பட்ட முறிப்பு
மாங்குளம்.

(C-7548)


## மோடியின்...

இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது சுஷ்மா ஸ்வராஜ் தலைமையில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கை சென்றிருந்தது.

இதன்போது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட இடங்களில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களையும் அரசியல் தலைவர்களையும் சுஷ்மா ஸ்வராஜ் தலைமையிலான குழு சந்தித்தது.

இந்நிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விரைவில் இலங்கை செல்லக்கூடும் என்று கூறப்படுகிறது. அதற்கு முன்னதாக சுஷ்மா ஸ்வராஜ் அங்கு செல்வார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இந்தியாவின் வெளிவிவகார அமைச்சராக சுஷ்மா ஸ்வராஜ் நியமிக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சி கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

## அண்ணன்...

நான் அம்பாந்தோட்டையில் தேர்தலில் குதிக்கமாட்டேன். நான் கொழும்பில்தான் தற்போது வசிக்கிறேன். இங்கிருந்துதான் அரசியலுக்குள் நுழைவேன்.

25 வருடங்களுக்கு மேல் எனது குடும்பம் அரசியலில் பொறுப்பான பணிகளை ஆற்றியிருக்கின்றது.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நீதியரசராக கல்வி கற்றவர்தான். ஆனால் அவர் தற்போது சிறந்த நிர்வாகியாகச் செயற்படவில்லை.

அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடிப்படை வாதத்துக்குள் அழுந்திப் போயிருக்கின்றார். மக்களுக்கு சேவை செய்வதற்கான அதிகாரங்கள் அவருக்கு இருக்கின்றன.

ஆனால் அவற்றைப் பிரயோகித்து நிறைவேற்றும் திறமையற்றவராகவே அவர் உள்ளார் என கோத்தபாய ராஜபக்ஷ இச் செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்...

லாளர் ஜோன் கெரி இதனைத் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

சுஷ்மாவின் புதிய பதவிக்கு வாழ்த் தினை தெரிவித்த ஜோன் கெரி, இலங்கையில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளில் இந்தியா அவதானம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பிலும் கருத்து கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நீண்டகாலமாக தொடரும் இந்த பிரச்சினைக்கு, இந்த ஆட்சியிலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்று ஜோன் கெரி வலியுறுத்தியதாகவும் ஆங்கில இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது. (எ-11)


### நிரந்தர தொழில்வாய்ப்புகள்

தரம் 6 முதல் O/L, A/L கல்வியுள்ள/ அற்ற அனைவருக்கும் நிரந்திர தொழில்வாய்ப்புகள். சம்பளம் 19000/=, 25000/=, 35000/= உணவு+ தங்குமிடம் சகாய விலைகளில். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் நவீன தொழிற்சாலைகளான ஜேம்/தேங்காய் பால்மா/ கிளவுஸ்/ பொலித்தீன்/ தேயிலை/ குளிர்பானம்/ சொலட்/ பிஸ்கட்... மற்றும் பல தொழிற்சாலைகளுக்கு + பொதியிடல் + லேபல் + உற்பத்தி + களஞ்சிய பிரிவு 18-50 வயது ஆண்-பெண் தேவை. வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்பு. (நண்பர்கள்/ குழு/ தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்)

மேலதிக விபரங்களுக்கு. தொடர்பு:-0775561883

(சி-7536)

### பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

கே.என்.ஆனந்தன்

A/L-2016

சனி, ஞாயிறு } பிரிவு-I → 8-9; பிரிவு-II → 12-01

→ கலைப்பிரிவு, தொழில்நுட்பப்பிரிவு மாணவர்களுக்கான தெரிவுப் பாடம்

→ A/L-2014 சனி, ஞாயிறு-10-11

திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி } 7-8

→ A/L-2015 சனி, ஞாயிறு பிரிவு-I 9-10; பிரிவு-II 11-12

வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

(6542)


## அரசை மிரட்ட...

யில் இட்டுச் செல்வதற்கான யோசனைகள் அடங்கிய புதிய வேலைத்திட்டம் ஒன்றை வெளியிட அரசாங்கத்துடன் தற்போது முறுகலை ஏற்படுத்தி கொண்டுள்ள ஜாதிக ஹெல உறுமய நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த வேலைத்திட்டத்தை அரசாங்கம், அரசியல் கட்சிகள், மத தலைவர்கள் மற்றும் பொது அமைப்புகளிடம் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

இந்த வேலைத்திட்டத்தில் அடங்கியுள்ள யோசனைகளை ஏற்றுக்கொள்ளும் வேட்பாளருக்கே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (எ-11)


### கோழிக்குஞ்சு விற்பனை

Lanka Farm இன் உயர்தர ஊர்க் கோழிக் குஞ்சுகள் (கினிராஜ்) விற்பனைக்கு உண்டு. விலை 70/=

ஒருசோடி முயல் (ஒரு மாதத்துக்கு மேற்பட்டது) 1000/=, வாத்து-150/=

தொடர்பு:-0777531344 -திருநெல்வேலி

(6543)

### German Institute

German, Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் Germany யிலிருந்து வந்த ஆசிரியரால் Embassy exam க்கு ஏற்றவாறு நடைபெறுகின்றது. 02.04.2014 அன்று நடைபெற்ற பரீட்சையில் எம்மிடம் 16 மாணவர்கள் 65-88 வரை புள்ளிகளை பெற்றுள்ளார்கள்.

Mrs.P.Kajenthini, ஆரியகுளத்தடி.

தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரவும்.

T.P:-0771604823

(6548)


## அமெரிக்க...

க்குழுவில் கடந்த மார்ச் மாதம் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் இந்தியா நடுநிலை வகித்திருந்தது. இத் தீர்மானத்திற்கு அமைய இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை மேற் கொள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் விரைவில் விசாரணைக் குழு ஒன்றும் நியமிக்கப்படவுள்ளது.

இது குறித்தும் புதுடில்லி அதிகாரிகளுடன் நிஷா தேசாய் பிஸ்வால் முக்கிய ஆலோசனை நடத்துவார் என்றும் கூறப்படுகின்றது. (எ-11)

## கோதுமை...

றங்களும் ஏற்படாதென அச்சங்கம மேலும் தெரிவித்துள்ளது. (எ-11)

## கூட்ட...

த்தை நடத்துவார் என்று முதலமைச்சர் அலுவலகத்தின் தகவல்கள் தெரிவிப்பதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ-11)


### Study in New Zealand

* Business Management
* Computing & IT
* Hospitality Management
* Engineering
* Travel & Tourism
* Quantity Surveying
* Cookery

For Scholarships Apply Before 31st July 2014

# Entry with G.C.E O/L # IELTS Not required
# Very low Course fee # Free ipad
# Classes 3 days a week, 4 days for P/T Jobs
# Free English Class for post graduate students
# Financial Sponsorships

வெளிநாட்டில் படிக்க, உழைக்க எமது இலவச சட்ட ஆலோசனை மூலம் பலர் பயன் பெற்றுள்ளனர் .......

ICS Study Overseas

77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்

107-B 1/1, Galle Road, Colombo - 06

021 4926222 , 077 3013060

(சி-7542)

### Jet D Express Courier Service

விரைவு பாதுகாப்பு உத்தரவாதம்

| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 Kg 1000/- | |
| Canada | Over 5 Kg 1100/- | |
| Norway | Over 5 Kg 1000/- | |
| Italy | Over 5 Kg 1000/- | |
| France | Over 5 Kg 1000/- | Over 11 Kg 750/- |
| Germany | Over 5 Kg 900/- | Over 11 Kg 700/- |
| London | Over 5 Kg 800/- | Over 11 Kg 600/- |
| Australia | Over 5 Kg 900/- | Over 11 Kg 750/- |
| Netharland | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |
| Swiss | Over 5 Kg 1000/- | Over 11 Kg 850/- |
| Denmark | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |

Note : 25Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு.

உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடையும்..

*Note : கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும். வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக்கொள்ளலாம்

குறிப்பு : கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வீடுகளில் வந்து பெற்றுக் கொள்ளப்படும்.

இல. 27, முதலாம் மாடி, நவீன சந்தை (தனம்ரெக்ஸ் மேல்) யாழ்ப்பாணம். 021 221 9150, 0772187 301

No. 77E, Manning Place, Wellawatta, Colombo - 06. T.P : 0112363873, 0776067599

(சி-7535)

### Teesside University

UK இல் உயர்கல்வி கற்பதற்கான அரிய வாய்ப்பு

IELTS இல்லை என்ற கவலையை விடுங்கள்

**UNDERGRADUATE**

Business and Accounting
- Business Management (Final Year Top-Up)
- International Management (Final Year Top-Up)

(CIM / CIMA / ACCA / HNDA / Edexcel HND தகுதியோடு Top-Up)

Engineering
- Civil Engineering (Top UP)
- Aerospace Engineering
- Auto Motive Engineering (Top Up)
- Electrical and Electronic Engineering (Top Up)
- Mechanical Engineering

**POSTGRADUATE**

Business and Accounting
- Master of Business Administration (MBA)
- International Management (M.Sc)

Engineering
- Civil Engineering (Pg.Dip / M.Sc)
- Electronic and Communication (Pg.Dip / M.Sc)
- Mechanical Engineering (Pg.Dip / M.Sc)
- Bio Technology (Pg.Dip / M.Sc)

June 15 க்கு முன் விண்ணப்பிக்கவும்

எமது சேவை முற்றிலும் இலவசம்

APSS International

No: 35, Nelson Place, Colombo 06

Contact: Prof. K. Chandirabose

077 386 7695

Official Representative

உறுதிப்படுத்துவதற்கு tees.ac.uk/international Web site ஐ பார்க்கவும்

(சி-7545)

### சிங்கர் தரும் இரட்டைச் சலுகைகள்

* விலைக்கழிவு
* வட்டியின்றிய இலகுதவணைக் கொடுப்பனவு

* பழைய ஒன்றுக்கு 10,000 ரூபா அல்லது 8,000 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

35,999/= (Fully Automatic - 7 kg)

* 3,750 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

21,249/= (Semi Automatic - 6 kg)

அனைத்து சலவை இயந்திரங்களுக்கும் 4 வருட உத்தரவாதம்

SAMSUNG சலவை இயந்திரங்களுக்கு 25000/= வரை மாற்று முறை விலைக்கழிவு

lenovo

lenovo LEN - NB - - i3 - 4G
Intel Core i3 (4th Gen)
15.6"HD Display, 4 GB, 500 GB
DVD RW, Webcam, Wifi, B.T
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
ரூ. 88,899/=
காசுக் கொள்வனவுக்கு ரூ. 8,890/= விலைக்கழிவு

LEN - NB -i5
Intel Core i5 (4th Gen)
15.6"HD Display, 4 GB, 500 GB
DVD RW, Webcam, Wifi, B.T
3 வருட உத்தரவாதம் இலவசம்
~~ரூ. 99,799/=~~
ரூ. 89,819/=

SINX - 243AT
Intel celeron Dual Core
14" Display, 2 GB, 320 GB
DVD RW, Wifi, Webcam,
3 வருட உத்தரவாதம் இலவசம்
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
காசுக் கொள்வனவுக்கு ரூ. 4,000/= விலைக்கழிவு
ரூ. 49,999/=

HP- i3-14NB
Intel Core i3 (4th Gen)
14"HD LED Display, 2 GB, 500 GB HDD, DVD RW, Wifi, Webcam.
ரூ. 64,999/=

HP- i3-15NB
Intel Core i3 (4th Gen)
14"HD LED Display, 2 GB, 500 GB HDD, DVD RW, Wifi, Webcam,
ரூ. 93,399/=
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
காசுக் கொள்வனவுக்கு ரூ. 13,400/= விலைக்கழிவு

கடனட்டைகளுக்கு 24 மாத வட்டியின்றிய கொடுப்பனவு வசதி (நிபந்தனைக்குட்பட்டது)

| ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | சுன்னாகம். | மானிப்பாய். | சங்கானை | சாவகச்சேரி | கொடிகாமம் | நெல்லியடி. | பருத்தித்துறை | கிளிநொச்சி | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 021 222 5408 | 021 224 0555 | 021 225 5343 | 021 225 1100 | 021 227 0197 | 0776433888 | 021 226 4937 | 021 226 3411 | 021 228 0199 | 021 229 0180 |

www.singersl.com

(சி-7533)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.